பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 மாசி 28 வியாழக்கிழமை (11-03-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:106

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில்

# இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிகளில் கண்காணிப்புக் குழு ரோந்து வாபஸ்!

## பிரபா - கருணா சந்தித்தால் நெருக்கடிக்குத் தீர்வுகிட்டும்

### சமரச முயற்சியில் ஈடுபடும் ஆயர் தெரிவிப்பு

காத்தான்குடி,மார்ச்11

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் புலிகள் இயக்கத்தில் இருந்து நீக்கப்பட்ட கருணாவும் நேரடியாகச் சந்தித்துப் பேசுகின்றபோது மட்டுமே தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வு காணமுடியும்.

மட்டக்களப்பு - திருமலை மறை மாவட்ட ஆயர் அதிவண. கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை இவ்வாறு தெரிவித்தார்.

தற்போதைய நெருக்கடி நிலையைத் தீர்க்கும் சமாதான முயற்சியாக வன்னியில் புலிகள் அமைப்பின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனையும் கிழக்கில் கருணா குழுவினரையும் ஆயர் சந்தித்துப் பேசினார். அதன் பின்னர் அவர் கூறியதாவது:-

எமது சமரச முன்னெடுப்புக்கள் முடிவடைந்துவிடவில்லை. தொடர்ந்தும் இருதரப்பினரிடையேயும் சுமுகமான சூழல் உருவாகப் பாடுபடுவோம். அத்தகையதொரு கடமை எமக்குண்டு. இரு தரப்பினரும் யுத்தம் ஒன்றில் இறங்கி உயிர்களை அழித்துக் கொள்ளக்கூடாது என்பதில் நாங்கள் உறுதியாகவுள்ளோம். அதற்காக

(16ஆம் பக்கம் பார்க்க)

## மோசமான விளைவுகள் உருவாகலாம் என அச்சம்

கொழும்பு,மார்ச்11

**மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள பகுதிகளில் தமது வழமையான ரோந்து நடவடிக்கைகளை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் இடைநிறுத்தியிருக்கிறார்கள் என்று அறியவருகிறது.**

விடுதலைப் புலிகளின் கட்டமைப்பில் கிழக்கில் எழுந்துள்ள நெருக்கடியை அடுத்தே இந்த நடவடிக்கையை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு எடுத்திருப்பதாக அக்குழுவின் வட்டாரங்கள் தெரிவித்தன.

புலிகளின் தலைமைப்பீடத்தால் கிழக்கு மாகாணத்தில் தளபதிப் பதவியில் இருந்து அகற்றப்பட்ட கருணாவின் கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே தமது ரோந்து நடவடிக்கையைக் கண்காணிப்புக் குழுவினர் இடைநிறுத்தியிருக்கின்றனர்.

"இலங்கை அரசு தன்னுடன் தனியாக யுத்தநிறுத்த உடன்பாடு ஏதும் செய்யாத காரணத்தினால் அந்த உடன்பாடு தம்மைக் கட்டுப்படுத்தாது என்று கருணா கூறுகின்றார். எனவே, அவரின் கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கூறப்படும் பகுதிகளில் எமது ரோந்து நடவடிக்கையை இப்போதைக்கு நிறுத்தியுள்ளோம்." என்று கண்காணிப்புக்குழு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டதில் புலிகளின் பிரதேசத்தில் கண்காணிப்புக்குழு தொடர்ந்து செயற்படாதநிலை நீடிக்குமானால் அப்பிரதேசத்தில் அரசபடைகளுக்கும் புலிகளுக்கும் இடையில் ஏற்படக்கூடிய சிறிய உரசல்கூட மோசமான விளைவுகளை ஏற்படுத்திவிடலாம் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதற்கிடையில் -

"மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இலங்கை யுத்தநிறுத்தக

(16ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு நெருக்கடியில் நோர்வே தலையிடாது!

### விசேட தூதர் எரிக்சொல்ஹெய்ம் யாழ்ப்பாணத்தில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்11

கிழக்கில் தற்போது உருவாகி உள்ள நெருக்கடி விடுதலைப் புலிகளின் உள்வீட்டுப் பிரச்சினை. நோர்வே அதில் தலையிடாது.

நோர்வே சமாதானக் குழுவின் விசேட தூதர் எரிக் சொல்ஹெய்ம் நேற்று யாழ்ப்பாணத்தில் இவ்வாறு தெரிவித்தார்.

எரிக் சொல்ஹெய்ம் தலைமையிலான நோர்வே குழுவினர் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தனர். கொழும்புக்கான நோர்வேத தூதர் ஹான்ஸ் பிரட்ஸ்கரும் அக்குழுவில் இடம்பெற்றிருந்தார்.

இக்குழுவினர் நேற்றுப் பிற்பகல் யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையப் பணிமனையில் அதன் உறுப்பினர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

தேர்தல் சூழ்நிலை, சமாதானப் பேச்சுக்களின் எதிர்காலம், கிழக்கில் உருவாகி இருக்கும் நெருக்கடி என்பன குறித்து அங்கு கருத்துப் பரிமாறப்பட்டது.

விசேட தூதர் எரிக் சொல்ஹெய்ம் அங்கு கூறியதாவது:-

யாழ். குடாநாட்டில் காணப்படும் அரசியல் நிலைப்பாடு, சமூக, பொருளாதார நிலைமை, தேர்தல் நிலைமைகள் என்பன தொடர்பாக ஆராய்வதற்கே நாம் இங்கு வந்துள்ளோம்.

இலங்கையில் ஏற்படுத்தப்பட்ட சமாதானச் சூழ்நிலை சில துர்ப்பாக்கிய நிலைமைகள் காரணமாகத் தடம்புரண்டு தடைப்பட்டுள்ளது. தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்கள் எப்போது மீண்டும் ஆரம்பிக்கும் என்று திட்டவட்டமாகக் கூறமுடியாது.

தற்போது விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்திற்கும் கிழக்கு மாகாணத்திலுள்ள தளபதி கருணாவுக்கும் இடையே ஏற்பட்டுள்ள உட்கட்சிப்

(16ஆம் பக்கம் பார்க்க)



நேற்று யாழ். வருகைதந்த நோர்வேயின் விசேட தூதர் எரிக்சொல்ஹெய்ம் தலைமையிலான தூதுக்குழுவினர் அரச்சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளை அவர்களது அலுவலகத்தில் சந்தித்து உரையாடியபோது...

*(படம்: வசந்தன்)*

## பொதுத்தேர்தல் நீதியாக நடைபெற புலிகள் முழுமையாக ஒத்துழைப்பர்

### எரிக் சொல்ஹெய்மிடம் இளம்பரிதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்11

பொதுத்தேர்தல் நீதியாக நடைபெற விடுதலைப் புலிகள் முழு ஒத்துழைப்பை வழங்குவர்.

- இவ்வாறு நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மிடம் உறுதியளித்தார் விடுதலைப் புலிகளின் யாழ்மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி.

எரிக் சொல்ஹெய்ம் தலைமையிலான நோர்வே குழுவினர் நேற்று யாழ். மாவட்ட அரசியல் துறை அலுவலகத்துக்குச் சென்று சி. இளம்பரிதியைச் சந்தித்து அவரோடு கலந்துரையாடினர்.

அப்போது இளம்பரிதி தெரிவித்ததாவது:-

தமிழர் தாயகப் பிரதேசங்களில் நீதியானதும், சுதந்திரமானதும், நேர்மையானதுமான தேர்தல் இடம்பெற வேண்டும். அதற்குப் புலிகள் தமது பூரண ஒத்துழைப்பை வழங்குவர்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் சில குழுக்கள், படையினர் மற்றும் பொலீஸாரின் பாதுகாப்புடன் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். இவ்வாறு படையினரும் பொலீஸாரும் ஒரு பக்கச்சார்பாகச் செயற்படுவது உண்மையான தேர்தலை விரும்பும் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்துவதாகவுள்ளது. இதனைத் தவிர்த்து மக்கள் இயல்பாக வாக்களிக்கும் சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

வன்னியில் இருக்கும் வாக்காளர்கள் யாழ்.குடாநாட்டில் அமைக்கப்படவுள்ள வாக்குச் சாவடிகளில் வாக்களிப்பதற்கு வரும்போது எவ்வித சோதனை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாது சுதந்திரமாக வாக்களிக்கும் சூழ்நிலை ஒன்றை உருவாக்க வேண்டும்.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இருவருடங்கள் கடந்த நிலையிலும் அதில் குறிப்பிடப்பட்டது போன்று மக்களுடைய உடனடி மனிதாபிமானத் தேவைகள் எவையும் நிறைவுசெய்யப்படவில்லை.

மக்களின் இயல்பு வாழ்வு ஏற்படுத்தப்படாத நிலை காணப்படுகிறது. மாறாக இராணுவ நெருக்குதல்களும், அச்சுறுத்தல்களும் அதிகரித்து வருகின்றன. இதனால் மக்கள் மத்தியில் நம்பிக்கையீனமும் விரக்தியும் ஏற்பட்டுள்ளது.

அரசியல் நெருக்கடிகளும், இழுபறிகளும் ஏற்பட்டுள்ள இன்றைய அசாதாரண சூழ்நிலையில் நோர்வேயின் சிறப்புத் தூதுவர் வருகை தந்துள்ளமை பொருத்தமானது.

இவ்வாறு நோர்வே விசேட தூதரிடம் இளம்பரிதி தெரிவித்தார். (ஐ-5)

பட்டப்பகலில் வாள்கள், கத்திகள் சகிதம்

## நகரில் இனந்தெரியாத குழுவினர் முஸ்லிம் வியாபாரியைக் கடத்தினர்!

யாழ்ப்பாணம்,மார்ச்11

யாழ்.முனீஸ்வரன் வீதியில் நேற்றுக்காலை நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தபோது, இனந்தெரியாதவர்களால் கத்தி முனையில் கடத்திச்செல்லப்பட்ட வியாபாரியை யாழ். பொலீஸார் சில மணிநேரத்தில் மீட்டனர்.

யாழ்.முஸ்லிம் வட்டாரத்தைச் சேர்ந்த றியாஸ் (வயது 22) என்ற முஸ்லிம் வியாபாரியே இவ்வாறு கடத்திச்செல்லப்பட்டு பின்னர் மீட்கப்பட்டவராவார்.

வெள்ளை நிற 'டவுன்ஏஸி' வாகனத்தில் கத்தி, வாள் போன்ற ஆயுதங்கள் சகிதம் வந்த எண்மரைக் கொண்ட குழு ஒன்றே குறிப்பிட்ட நபரைக் கடத்திச்சென்றது என்று பொலீஸார் தெரிவித்தனர்.

கடத்தப்பட்ட நபரை பொலீஸார் மீட்டபோதும் கடத்தலில் ஈடுபட்டவர்கள் மீது பொலீஸார் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என முனீஸ்வரன் வீதி நடைபாதை வியாபாரிகள் சங்கம் குற்றஞ்சாட்டியது. சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறுகோரி தமிழ் மற்றும் முஸ்லிம் நடைபாதை வியாபாரிகள், தமது வியாபார நடவடிக்கைகளை நேற்று பகிஷ்கரித்தனர். அத்துடன், யாழ்.பொலீஸ் நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர். உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என பொலீஸார் உறுதி அளித்ததை அடுத்து அவர்கள் கலைந்துசென்றனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள இரண்டு பள்ளிவாசல்களை நிர்வகிப்பது தொடர்பாக இருந்துவந்த பிணக்குக்கும் இந்த ஆள் கடத்தலுக்கும் சம்பந்தம் இருப்பதாகக் கூறப்பட்டபோதும் அதனை ஊர்ஜிதம் செய்யமுடியவில்லை.

நேற்று இங்கு ஆள் கடத்தலில் ஈடுபட்ட நபர்கள் கொழும்பு, மாளிகாவத்தைப் பிரதேசத்திலிருந்து இதற்கென அழைத்துவரப்பட்டவர்கள் என்று ஒரு தகவல் தெரிவித்தது. (ஐ-9)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கு கிளிநொச்சியில் புதியகட்டடம்

## கடந்த செவ்வாயன்று திறந்துவைக்கப்பட்டது

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நடுவப்பணியகத்துக்கான புதியகட்டடம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில் திறந்துவைக்கப்பட்டது.

இக்கட்டடத் தொகுதியை கிளிநொச்சிக்குச் சென்றிருந்த பிரிட்டிஷ் தூதுவர் ஸ்ரீபன் இவன்ஸ் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்தார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.றெஜி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரிட்டிஷ் தூதரக அதிகாரிகள், விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், தமிழர் புனர்வாழ்வுக்கழகத் திட்டப் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி, மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவைச் சேர்ந்த டாக்டர் ஜெயகுலராசா உட்பட பலர் கலந்துகொண்டனர்.

திறப்புவிழா நிகழ்வை அடுத்து தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதிகளுக்கும் பிரிட்டிஷ் தூதரக அதிகாரிகளுக்குமிடையில் கலந்துரையாடல் ஒன்றும் நடைபெற்றது. (எ-9)



பிரிட்டிஷ் தூதுவர் ஸ்ரீபன் இவன்ஸ் நாடாவை வெட்டி புதிய கட்டடத்தைத் திறந்து வைக்கும் காட்சி.

# தென்பகுதியில் கடும் வரட்சி; மின் வழங்கலில் பெரும் நெருக்கடி

## மின்சக்தி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு,மார்ச்11

மின்சாரத்தைத் தொடர்ச்சியாக வழங்குவதில் இலங்கை மின்சாரசபை கடும் நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளதாக மின்சக்தித் துறை அமைச்சு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் உள்ளதாவது -

மின்விநியோகம் துண்டிக்கப்படுவதைத் தவிர்ப்பதற்குப் பொதுமக்கள விரைந்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும். வியாபார அமைப்புக்களும் பொதுமக்களும் தங்களது மின் பாவனையைக் குறைந்தது 5 வீதத்தினால் ஆவது குறைக்க வேண்டும். கடந்த 50 வருட காலத்தில் ஏற்பட்ட மிக மோசமான வரட்சி இதுவாகும்.

கடந்த 2001 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வரட்சியின்போது மின்விநியோகம் 5 மணி நேரத்துக்கும் அதிகமாகத் துண்டிக்கப்பட்டிருந்தது. ஆனால், இம்முறை வரட்சி மிகவும் கடுமையாக உள்ளது. இதுவரை மின்விநியோகம், எதுவித தடைகளும் இல்லாமல் சீராக வழங்கப்பட்டு வருகின்றது.

ஆயினும், சில நீர்த்தேக்கங்களில உள்ள தண்ணீர், விவசாய மற்றும் குடிதண்ணீர்த் தேவைகளுக்கும் பயன்படுத்தப்படுவதால், தொடர்ச்சியாக மின் விநியோகிப்பது கடினமாக உள்ளது - இப்படி மின்சக்தித்துறை அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

# தாய்க்குலத்தின் சார்பாக வன்னி செல்லும் வேட்பாளர்!

காரைதீவு,மார்ச்11

புலிகள் அமைப்பில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை சமரசமாகத் தீர்க்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து - தாய்குலப் பிரதிநிதியாக - அம்பாறை மாவட்டத்தில் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிடும் பெண் வேட்பாளர் திருமதி சபாபதி யோகாம்பிகை இன்றோ, நாளையோ வன்னி செல்லவிருக்கின்றார்.

இருதரப்பு முறுகல்நிலையைத் தணித்து, ஒற்றுமையுடன் தமிழர் உரிமைப் போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்படவேண்டும் என்பதே எமது வன்னி விஜயத்தின் நோக்கம் என்று வேட்பாளர் யோகாம்பிகை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

நாம் எமது பிள்ளைகளை வழங்கியது தமிழீழ மண்ணை மீட்கவும், மக்களை மீட்கவுமே தவிர தேவையற்ற முரண்பாடுகளை வளர்ப்பதற்கல்ல.

எமது தியாகம் வீண்போகக்கூடாது. நாம் தாய்க்குலம். நாம் எமது பிள்ளைகளை ஈந்த நோக்கத்தைத் தலைவர்கள் தமக்குள் உள்ள வேறுபாடுகளை வைத்து மலினப்படுத்தக்கூடாது. பிள்ளைகளை ஈன்ற தாய்க்குலம் வேதனையுடன் விம்மிப் புலம்புகிறது. யார் பதிலளிப்பது? புலிகளுக்குள் உள்ள உட்பூசல் பற்றி எமக்குத் தெரியாது. ஆனால், ஒட்டுமொத்த தமிழினத்தின் எதிர்காலத்தைப் பாதிக்கும் செயலில் இறங்க எவருக்கும் உரிமையில்லை.

நாம் மதப்பிரச்சினைகளையோ, அரசியல்வாதிகளையோ அணுகாமல் தனியாக தாய்க்குலமாக வன்னி செல்லவிருக்கிறோம். சமரச முயற்சி பலனளிக்காவிட்டால் அங்கேயே உண்ணாவிரதமிருந்து மடிவோம். உலகம் பதில் சொல்லட்டும் - என்றார்.(ஐ-க)

# காரைதீவில் நேற்று ஹர்த்தால்!

கல்முனை, மார்ச்11

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குத் தோன்றியுள்ள நெருக்கடி காரணமாக அம்பாறை மாவட்டத்தில் மக்களின் இயல்புவாழ்க்கை தொடர்ந்து பாதிப்படைந்துள்ளது.

காரைதீவில் நேற்று கருணாவுக்கு ஆதரவாக ஹர்த்தால் நடத்தப்பட்டது.

காரைதீவுப் பாடசாலைகள் யாவும இழுத்து மூடப்பட்டன. காரைதீவின் தென்புற எல்லையிலும், வடபுற எல்லையிலும் கற்கள் இரண்டு அடிக்கு உயரமாக அடுக்கப்பட்டு, ரயர்களும் வீதிக்குக் குறுக்காக எரிக்கப்பட்டன.

இதனால் அக்கரைப்பற்று - அம்பாறை - கல்முனை பிரதான பாதைகளில் போக்குவரத்து பாதிப்புற்றது. பஸ், வான் சேவைகள் இடம்பெறவில்லை. வேலைக்குச் செல்வோர் வீடுகளுக்குள் முடங்கினர்.

எனினும், கொழும்பிலிருந்து பத்திரிகைகள் வந்து சேர்ந்தன.

நான்காவது நாளாக அம்பாறையில் இயல்புநிலை பாதிக்கப்பட்டுள்ளது.

## பிற்போடப்பட்டுள்ளது

நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த யாழ்.கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறுமென கல்லூரியின் அதிபர் வா.ஜெயரட்ணம் தெரிவித்துள்ளார்.

# வாழ்வுதயத் திட்டத்தின் கீழ் வீட்டுத் தொகுதி திறந்துவைப்பு

மன்னார், மார்ச்11

மன்னார் வாழ்வுதய மீள்குடியேற்றத் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட இரண்டாவது வீட்டுத் தொகுதி அடம்பன் பிரதேசத்தில் அண்மையில் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைககப்பட்டது.

மன்னார் ஆயர் இராயப்பு யோசேவ் ஆண்டகை வீட்டுத் தொகுதியைத் திறந்துவைத்தார். இந்நிகழ்வில் மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்நீக்கிலாப்பிள்ளை, 'செடக்' நிறுவனத்தின் இயக்குநர் டேமியன் பெர்னாண்டோ, மன்னார் வாழ்வுதய இயக்குநர் அருட்தந்தை பி.யேசுராஜா, மாந்தை மேற்கு உதவி அரச அதிபர் எம்பரமதாஸ் 'செடக்' நிறுவனத்தின கொழும்புப் பிரதிநிதி தெய்வேந்தர்ராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

நாம் எமது மண்ணில் காலகாலமாகக் கட்டிக்காத்துவந்த மத ஒற்றுமை, கலை, கலாசாரப் பண்பாடுகள் எல்லாம் இன்று நம் மத்தியில் அரிதாகவே காணப்படுகின்றன. முன்பு எல்லா மதங்களுடனும் ஒற்றுமையாக வாழ்ந்த நாம், இன்று மனித மாண்பை இழந்து நிற்கின்றோம். எந்த மதமும் சுயநலவாதியாகவோ அல்லது ஒற்றுமையைக் குலைத்துப் பிரிந்து வாழவோ சொல்லவில்லை என்று நிகழ்வில் உரையாற்றிய மன்னார் ஆயர் இராயப்பு யோசேப் ஆண்டகை தெரிவித்தார். (ம-10)

# மோ.சைக்கிள் விபத்தில் சிக்கி வயோதிபர் சுயநினைவிழந்தார்!

## கோப்பாயில் நேற்றுப் பிற்பகல் சம்பவம்

கோப்பாய், மார்ச்11

கோப்பாய் இராச வீதிச் சந்தியிக்கு அருகில் நேற்று பிற்பகல் 3 மணியளவில் மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் வயோதிபர் ஒருவர் தலையில் படுகாயமடைந்தார். சுயநினைவற்ற நிலையில் கோப்பாய் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர், பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டார். கோப்பாய் வடக்கைச் சேர்ந்த க.நல்லையா (வயது 70) என்பவரே இவ்வாறு படுகாயமடைந்தவராவார்.

சைக்கிளில் சென்ற வயோதிபரை மோட்டார் சைக்கிளில் வந்தவர் முந்திச் செல்லமுற்பட்டார் என்றும் அப்போது,சைக்கிள் மோட்டார் சைக்கிளுடன் செருகுப்பட்டு, வயோதிபர் தூக்கி எறியப்பட்டார் என்றும் - கூறப்பட்டது. (எ-72)

# பிரெஞ்சுக் கலாசார அமைப்பு மீண்டும் யாழ்ப்பாணத்தில்

## பல்கலைக்கழகத்தில் இன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மார்ச்11

யாழ்ப்பாணத்தில் பிரஞ்சுமொழிக் கற்றலை வழங்கவும் மற்றும் கலாசாரத்தைப் பறிமாறிக்கொள்வதற்கும் என 'அலயன்ஸ் பிரான்ஸ்செய்ஸ' (Alliance Francaise) என்ற அமைபபு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இநத அமைப்பு யாழ்ப்பாணத்தல் தனது தற்காலிக நிர்வாக சபை ஒன்றை ஏற்படுத்துவதற்காக நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிககு யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளது.

இக்கலந்துரையாடலில் பிரஞ்சுத் தூதரகத்தில் இருந்து வருகைதரும் துறைசார் அதிகாரிகள் கலந்துகொண்டு கருத்துக்களை வழங்கவுள்ளனர்.

கருத்துக்களைத் தொடர்ந்து மாலை 7 மணியளவில் Jean-paul Rappeneau வின் The Horseman on the Roof என்ற திரைப்படமும் மறுநாள் சனிக்கிழமை மாலை 7 மணிக்கு Luc Besson தயாரித்த 'Joan of Arc' என்ற திரைப்படமும் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

திரைப்படக் காட்சிகள், கந்தமடம் பலாலி வீதி, 83/1 ஆம் இலக்கததில் உள்ள அலுவலகத்தில் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

விரைவில் பிரெஞ்சு மொழிவகுப்புகளையும் இந்த அமைப்பு ஆரம்பிக்கவுள்ளது.

நிகழ்வுகளில் ஆர்வலர்களைக் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

# தென்மராட்சி கல்வி வலய உடற்பயிற்சி போட்டி முடிவுகள்

தென்மராட்சி,மார்ச்11

தென்மராட்சிக் கல்வி வலயத்தினர் கொடிகாமம் அரசினர் வித்தியாலய மைதானத்தில் நடத்திய உடற்பயிற்சிப் போட்டிகளில் முடிவுகள் வருமாறு:

ஆண்கள் பிரிவில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, கைதடி முத்துக்குமாரசாமி ம.வி., மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம் ஆகியவை முறையே முதல் 3 இடங்களைப் பெற்றன.

பெண்கள் பிரிவில் சாவகச்சேரி மகளிர் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, மந்துவில் றோ.க.த.க.பாடசாலை ஆகியவை முறையே முதல் மூன்று இடங்களைப் பெற்றன. (ஒ-5-117)

# யாழ். போதனா வைத்தியசாலையில் 7ஆண்டுகளில் 6,480 பேர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், மார்ச்11

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த 7 ஆண்டுகளில் 6,480 பேர் உயிரிழந்துள்ளனர்.

போர்ச் சூழலின்மூலம் ஏற்பட்ட மருந்து தடைகள் மற்றும் வைத்தியர்கள் பற்றாக்குறை என்பன இவ் உயிரிழப்புக்களுக்கான முக்கிய காரணங்களாகக் கூறப்படுகின்றன.

மலேரியா, புற்றுநோய், நெருப்புக் காய்ச்சல், வயிற்றோட்டம் மற்றும் வீதி விபத்துக்கள் எனப் பல்வேறு காரணங்களினால் இவ்வுயிர் இழப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

1997ஆம் ஆண்டு 820 பேரும், 1998ஆம் ஆண்டு 883 பேரும், 1999ஆம் ஆண்டு 875 பேரும், 2000 ஆம் ஆணடு 770 பேரும், 2001ஆம் ஆண்டு 932 பேரும், 2002ஆம் ஆண்டு 1012 பேரும 2003ஆம் ஆண்டு 932 பேரும் உயிரிழநதுள்ளனர் என வைத்தியசாலைப் புள்ளி விவரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

கடந்த 7 ஆண்டுகளில் உயிரிழந்துள்ள 6,480 பேரில் 123 பேர் மலேரியாக் காய்ச்சலினால் மட்டும் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-8-ரி)



யாழ்.பல்கலைக்கழக மருத்துவ மாணவர்கள் நடத்தும் மருந்துவக்கண்காட்சி இன்று வரை நீடிக்கப்பட்டுள்ளது. நேற்று இக்காட்சியைப் பெருமளவான மாணவர்களும், பொதுமக்களும் பார்வையிட்டனர் பொதுமக்கள் ஆர்வமுடன் கண்காட்சியைப் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம்.

(படம்:அலுவலகப்படப்பிடிப்பா ளர்)

# ஹெய்ட்டியில் நிலைமையைச் சீர்செய்ய புதிய இடைக்காலப் பிரதமர் நியமனம்

உள்நாட்டுக் கிளர்ச்சியால் நெருக்கடிக்குள் சிக்கியிருக்கும் கரீபியன் தீவு நாடான ஹெய்ட்டியில் நிலைமையைச் சீர்செய்யும் முயற்சியாக புதிய இடைக்காலப் பிரதமர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

ஹெய்ட்டியின் மூத்தோர் அவை ஹெய்ட்டியின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜெரால்ட் லட்டோர்ச்சுவை புதிய இடைக்காலப் பிரதமராக நியமித்திருக்கின்றது.

உள்நாட்டுக் கிளர்ச்சி முயற்சியை அடுத்து ஹெய்ட்டியின் ஜனாதிபதி ஜேன் பேட்ரண்ட் அரிஸ்டிட் கடந்த 29 ஆம் திகதி நாட்டைவிட்டு வெளியேற, நாட்டின் பிரதம நீதியரசர் பொனிவெஸ் அலக்ஸாண்டிர் பதில் ஜனாதிபதியாக அடுத்த நாள் பொறுப்பேற்றார்.

எனினும், அரிஸ்டிட்டின் கீழ் பிரதமராகப் பதவிவகித்த நெப்டியூனே தொடர்ந்தும் அப்பதவியில் நீடித்தார். ஆனாலும், அவருக்கு எதிராகவும் கடும் விமர்சனங்களும், எதிர்ப்பலைகளும் எழுந்தன. அவர் அரிஸ்டிட்டின் நம்பிக்கைக்குரியவர் எனத் தெரிவித்து அவரையும் பதவிநீக்கவேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வந்தது.

இந்நிலையில், ஹெய்ட்டியில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்காக அங்கு சென்று இறங்கிய - அமெரிக்கா தலைமையிலான - சர்வதேச படைகள் ஹெய்ட்டியின் உள் விவகாரங்களைக் கவனித்து வழிநடத்துவதற்காக அங்குள்ள மூத்த பிரஜைகளை ஒன்றிணைத்து மூத்தோர் சபை ஒன்றை ஸ்தாபித்தளது.

அந்த மூத்தோர் அவையே பதில் பிரதமராக ஜெரால்ட்டைத் தெரிவுசெய்திருக்கின்றது. இவர் 1988 இல் சதி மூலம் பதவிகவிழ்க்கப்பட்ட லெஸ்லி மனிகட்டின் அரசில் அதுவரை வெளிவிவகார அமைச்சராகப் பணிபுரிந்தவர்.

பொருளாதார நிபுணரான ஜெரால்ட் ஐ.நா. சபையில் பணி புரிந்தவர். அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் வியாபார ஆலோசகராகக் கடமையாற்றிவந்தவர்.

(ஒ-க)

# சீனாவில் பிரமச்சாரிகள் அதிகரிக்கும் அபாயம்!

பெண் சிசுக்கொலைகள் சீனாவில் அதிகரித்து வருகிறது. பெண் குழந்தைகளைப் பெற்றுக்கொள்வதை விட ஆண் குழந்தைகளைப் பெற்றுக்கொள்வதையே சீனர்கள் அதிகம் விரும்புகிறார்கள் வயிற்றில் வளரும் கரு ஆணா, பெண்ணா என்பதைக் கண்டுபிடிக்கும் சோதனைக்கு முழு அளவில் தடைவிதிக்காவிட்டால் நிலைமை விபரீதமாகப் போய்விடும் என்று மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுத் துறை அதிகாரி ஒருவர் எச்சரித்து இருக்கிறார்.

தற்போதைய நிலையில் உள்ளதைப் போல ஆண்களின் பிறப்பு விகிதம் அதிகரித்தால் 2020 ஆம் ஆண்டில் 4 கோடி வாலிபர்கள் பிரமச்சாரிகளாகத்தான் இருக்கவேண்டும். அவர்களைத் திருமணம் செய்துகொள்ளப் பெண்களே இருக்கமாட்டார்கள். இருக்கும் ஒருசில பெண்களுக்கு அதிக கிராக்கி ஏற்படும் என்கிறார் அந்த அதிகாரி.

(ஒ-க)

# பலஸ்தீனத் தீவிரவாதத் தலைவர் அமெரிக்கச் சிறையில் காலமானார்!

வாஷிங்ரன்,மார்ச்11

அமெரிக்கச் சிறை ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பலஸ்தீன விடுதலை முன்னணித் தலைவர் அபு அபாஸ் இறந்துவிட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

1985 ஆம் ஆண்டு எகிப்திய நகரங்களான அலெக்சாந்திரியாவுக்கும் போர்ட் செய்ட்டுக்கும் இடையில் வைத்து இத்தாலியக் கப்பல் ஒன்று கடத்தப்பட்டதன் சூத்திரதாரியான அபு அபாஸ் கடந்த 17 ஆண்டு காலமாக ஈராக்கில் தலைமறைவாகி இருந்தார். இந்தக் கப்பல் கடத்தலின் போது சக்கர நாற்காலியின் உதவியுடன் பயணம் செய்துகொண்டிருந்த அமெரிக்க உல்லாசப் பயணி ஒருவர் கொல்லப்பட்டார்.

இத்தாலிய நீதிமன்றம் ஒன்று அபு அபாஸ் இல்லாமலேயே அவரைக் குற்றவாளியாகத் தீர்ப்பளித்தது.

கடந்த வருடம் அமெரிக்கப் படையினர் ஈராக்கில் வைத்து இவரைக் கைதுசெய்து அமெரிக்காவுக்குக் கொண்டுசென்றிருந்தனர்.

அபு அபாஸ் இயற்கைக் காரணிகளாலேயே மரணம் அடைந்தார் என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். அவர் மாரடைப்பு அல்லது பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டார் என்று சிரேஷ்ட பலஸ்தீன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இஸ்ரேல் சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த 50 பலஸ்தீனர்களை விடுதலைசெய்யக் கோரி பலஸ்தீனத் தீவிரவாதிகள் இந்தக் கப்பலைக் கடத்தி இரண்டு தினங்கள் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தனர். பெரும்பாலும் அமெரிக்கர்களான ஏனைய பணயக் கைதிகளைப் பாதுகாப்பாக விடுவித்தால் கடத்தல்காரர்களைத் தப்பிச்செல்ல அனுமதிப்பதாக எகிப்து அறிவித்ததையடுத்து இந்தக் கடத்தல் நாடகம் அப்பொழுது முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

கடத்தல்காரர்களை விமான மூலம் இந்தோனேஷியாவுக்கு அனுப்புவதற்கும் எகிப்து இணங்கியது. ஆனால், கடத்தல்காரர்கள் ஜெட் விமானம் மூலம் இந்தோனேஷியா சென்றுகொண்டிருந்த சமயம் அமெரிக்கக் கடற்படை விமானங்கள் கடத்தல்காரர்கள் பயணம் செய்த விமானத்தை இடைமறித்து இத்தாலியில் தரையிறங்கவைத்தன.

# அணு ஆயுத சோதனையைக் குறைக்க பாகிஸ்தானுக்கு அமெரிக்கா அறிவுறுத்து!

வாஷிங்ரன், மார்ச்11

அணு ஏவுகணைச் சோதனைகளை வெகுவாகக் குறைத்துக்கொள்ளுமாறு பாகிஸ்தானை அமெரிக்கா கேட்டுக்கொண்டுள்ளது.

இதுகுறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் ரிச்சார்ட் பௌச்சர் வெளியிட்ட அறிக்கையில் தெரிக்கப்பட்டுள்ளதாவது:-

ஆசியப் பிராந்தியத்தில் உள்ள பாகிஸ்தான் உட்பட வேறு சில நாடுகளை அணு ஆயுதச் சோதனைகளை நடத்துவதைக் கைவிடுமாறு அமெரிக்கா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. அப்பகுதியில் நிலவும் பதற்றத்தைத் தணிக்கவும் பிராந்தியத்தில் அமைதியை ஏற்படுத்தவுமே இது போன்ற நடவடிக்கையில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது.

பாகிஸ்தான் ஏவுகணைச் சோதனை நடத்துவது குறித்துத் தனது அண்டை நாடுகளுக்கு முன்னரே தெரிவித்திருக்கும் என்பதை நாங்கள் உணர்கிறோம - என்றார்.

(ஒ)

# இஸ்தான்புல்லில் மீண்டும் தற்கொலைத் தாக்குதல்!

இஸ்தான்புல்,மார்ச்11

துருக்கியின் தலைநகர் இஸ்தான்புல்லில் ஆசியர்கள் அதிகம் வாழும் பகுதியிலுள்ள ஹோட்டல் ஒன்றில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் அத்தாக்குதலை நடத்திய இருவரில் ஒருவர் உட்பட இரண்டு பேர் உயிரிழந்தனர்;ஐவர் காயமடைந்தனர்.



காயமடைந்தவர் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்படுகிறார்.

தற்கொலைத் தாக்குதல் நடத்த முயன்ற மற்றொருவர் காயமடைந்தார்.

சுமார் நாற்பது பேர் உணவருந்திக்கொண்டிருந்த ஹோட்டல் ஒன்றுக்குள் வேட்டுக்களைத் தீர்த்தபடி நுழைந்த இருவரே பின்னர் ஹோட்டல் வாசலில் குண்டுகளை வெடிக்க வைத்துத் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்தக்குழுவும் உரிமை கோரவில்லை.

ஆனால், கடந்த நவம்பரில் இஸ்தான்புல்லில் நடத்தப்பட்ட தொடர் குண்டுத் தாக்குதலில் அறுபது பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இஸ்லாமியத் தீவிரவாதிகளே அந்தத் தாக்குதலை நடத்தியிருந்தனர்.

யூதர்களுக்குச் சொந்தமான கட்டடங்கள், விற்பனை நிலையங்கள் போன்றவையும் பிரிட்டிஷ் பின்னணியைக் கொண்ட வர்த்தக மையங்களுமே அப்போது தொடர்தாக்குதலுக்கு இலக்காகின.

(ஒ-க)

# காஷ்மீரில் அரசு அலுவலகத்தை தாக்கிய தீவிரவாதிகள் கொலை!

ஸ்ரீநகர்,மார்ச்11

இந்தியாவின் காஷ்மீர் மாநிலம் ஸ்ரீநகரில் மத்திய செய்தித்துறை அலுவலகம் உள்ளது. நகரின் மையப் பகுதியில் 3 மாடிக் கட்டடத்தில் அந்த அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை 7 மணியளவில் இராணுவ உடையணிந்த 2 தீவிரவாதிகள் செய்தித்துறை அலுவலகத்திற்குள் நுழைந்தனர். அலுவலகத்தில் பாதுகாப்புப்படை வீரர்கள் 6 பேர் இருந்தனர்.



காயமடைந்த இந்தியப் படை வீரன்.

செய்தித்துறை அலுவலகக் கட்டடத்திற்குள் நுழைந்த தீவிரவாதிகள் பாதுகாப்பு அதிகாரிகளை நோக்கியும் கட்டடத்தின் மீதும் துப்பாக்கியால் சுட்டனர்; கையெறி குண்டுகளையும் வீசினார்கள்.

தீவிரவாதிகளின் தாக்குதலையடுத்து கட்டடத்தின் பாதுகாப்பிற்காக நிறுத்தப்பட்டிருந்த பாதுகாப்பு அதிகாரிகளும் திருப்பித் தாக்குதல் நடத்தினார்கள். இரு தரப்பினருக்கும் இடையே கடுமையான துப்பாக்கிச் சண்டை நடந்தது.

துப்பாக்கிச் சண்டையாலும், தீவிரவாதிகள் குண்டு எறிந்ததாலும் செய்தித்துறை அலுவலகம் தீப்பற்றி எரிந்தது. இந்தக் கட்டடத்தைச் சுற்றி முக்கிய அலுவலகங்கள் இருப்பதால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

தீயிலிருந்து தப்பிக்க ஒரு தீவிரவாதி வெளியே ஓடி வந்தார். அவனை துணை இராணுவ படையினர் சுட்டுக் கொன்றனர். இன்னொருவர் உடம்பில் கட்டியிருந்த குண்டுகளை வெடிக்க வைத்ததால் உடல் சிதறிப் பலியானார். இதில் பாதுகாப்புப்படை வீரர்கள் 4 பேர் காயமடைந்தனர்.

தாக்குதல் நடத்தவந்த 2 தீவிரவாதிகளும் லஷ்கர் - இ - தொய்பா தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று இந்திய இராணுவம் தெரிவித்தது.

(ஒ)

# கத்தோலிக்கத் திருச்சபையில் இரு பெண் பாதிரியர்கள்

## பாப்பரசர் நியமித்தார்

பரீஸ்,மார்ச்11

கத்தோலிக்க திருச்சபை நிர்வாகத்தில் பெண்களுக்கு சம உரிமை கொடுப்பதற்கு முன்னோடியாக இரண்டு பெண் பாதிரியர்களை ஆலோசனை சபைக்குப் பாப்பரசர் நியமித்தார்.

கத்தோலிக்க திருச்சபை நிர்வாகத்தில் ஆண்கள் மட்டுமே ஈடுபடுத்தப்பட்டு வருகிறார்கள். பாதிரியார்கள் திருச்சபை நிர்வாகத்தைக் கவனிப்பதையே பாப்பரசரும் ஆதரித்து வந்தார். ஆனால், முற்போக்கான சில கத்தோலிக்கப் பெண்கள், பெண்களையும பாதிரியர்களாக நியமிக்கவேண்டும் என்றும் அவர்களுக்கும் நிர்வாகத்தில் பங்குகொடுத்தால் நன்றாக இருக்கும என்றும் வலியுறுத்தினர்.

அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றும் வகையிலும், நிர்வாகத்தில் பெண்களுக்குச் சம உரிமைகொடுக்கும் வகையிலும் பெண் பாதிரியர்களை வத்திக்கான் ஆலோசனை சபைக்குப் பாப்பரசர் நியமித்தார்.

மிகச் செல்வாக்கான 'சர்வதேச இறையியல் ஆணைக்குழு' எனப்படும் சபைக்கு ஆலோசகர்களாக இரு பெண்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சிக்காக்கோவில் உள்ள புனித மேரி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சகோதரி சாரா பட்லர், சுவிஸ் நாட்டில் உள்ள பிரிபர்க் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பார்பரா ஹாலன்ஸ்லே பென் ஆகிய இருபெண்களே பாதிரியார் நியமனம் பெற்றுள்ளனர்.

இதன்மூலம் பெண்களுக்கான தடை உடைந்ததாக வத்திக்கானில் உள்ள மூத்த நிர்வாகி ஒருவர் கூறினார்.

# குவாண்டனாமோ சிறையிலிருந்து 5பிரிட்டிஷாரை அமெ.விடுவித்தது!

## அவர்களில் 4பேர் லண்டனில் கைது

இஸ்லாமியத் தீவிரவாதிகள் என்ற சந்தேகத்தின் பேரில் குவாண்டனாமோ தடுப்பு முகாமில்தான் தடுத்து வைத்திருக்கும் ஒன்பது பிரிட்டிஷ் பிரஜைகளில் ஐவரை அமெரிக்கா விடுவித்தது.

அவர்கள் லண்டனில் வந்திறங்கியதும் அவர்களில் நால்வரை பிரிட்டிஷ் பொலீஸார் கைதுசெய்தனர். ஒருவர் மட்டும் சுதந்திரமாக வீடு செல்ல அனுமதிக்கப்பட்டார்.

ஆப்கான் மற்றும் ஈராக்கில் தான் கைதுசெய்த - தலிபான் மற்றும் அல் - குவைதா இயக்கங்களைச் சேர்நதவர்கள் என்று சந்தேகிக்கப்படும - இஸ்லாமியத் தீவிரவாதிகளை அமெரிக்கா, கியூபா, அருகே குவாண்டனாமோ குடாவில் உள்ள தடுப்பு முகாமில் தடுத்துவைத்துள்ளது.

பன்னாடுகளையும் சேர்ந்த சுமார் 660 கைதிகள் அங்குள்ளனர். அவர்களில் 9 பேர் பிரிட்டிஷ் பிரஜைகள்.

பிரிட்டிஷ் பிரஜைகளைத் தனது சட்டத்திற்கும், இறைமைக்கும் உட்படாத ஒரு பிரதேசத்தில், சட்டத்தரணிகள்கூடச் சந்திக்க அனுமதிக்காமல் தடுத்துவைத்திருப்பதை எதிர்த்து பிரிட்டனில் எதிர்ப்புக் கண்டனக் குரல்கள் எழுந்தன.

இந்நிலையில், அந்த 9 கைதிகளில் ஐவரை குற்றச்சாட்டு ஏதும் முன்வைக்காமல் நேற்று அமெரிக்கா விடுவித்தது.

பயங்கரவாதச் சந்தேக நபர்களாக இரண்டு வருடங்கள் அமெரிக்காவில் இருந்தவர்கள் பிரிட்டனில் வந்திறங்கியதும் பிரிட்டிஷ் பொலீஸார் அவர்களில் நால்வரைக் கைதுசெய்தனர்.

ஷபீல் ரசூல்(வயது 26), அஸிஸ் இகபால் (வயது 22), ருஹால் அஹமட (வயது 22), டரீக் டெர்குல்(வயது 26) ஆகியோரே லண்டன் படிங்டன் கீறீன் பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஜமால் டீன் என்ற ஐந்தாவது இளைஞன் தடை ஏதுமின்றி வீட்டுக்குச்செல்ல அனுமதிக்கப்பட்டார். பிரிட்டிஷ் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள நால்வரையும் அடுத்த 14 நாள்களுக்கு பொலீஸார் தமது காவலில் வைத்து விசாரிக்கமுடியும். அதன் பின்னர் அவர்களுக்கு எதிராகப் பொலீஸார் வழக்குத் தொடர்ந்து அவர்களை நீதிமன்றக் காவலில் வைக்கலாம். அல்லது விடுதலை செய்யவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவே அவர்களுக்கு எதிராகக் குற்றம் சுமத்தாமல் அவர்களை விடுவித்திருக்கும்போது, பிரிட்டன் பொலீஸார் அவர்களைத் தடுத்து வைத்து விசாரிப்பது முறையற்றது என அவர்களின் சட்டத்தரணிகள் பிரிட்டனில் தெரிவித்தனர்.

(ஒ-க)

# மகாமகக் குளத்தில் தேடுதல் வேட்டை!

கும்பகோணம், மார்ச்11

தமிழகத்தின் கும்பகோணத்தில் உள்ள மகாமகக் குளத்தின் மணலில் புதைந்துள்ள நகைகள், காசுகள் மற்றும் பொருள்களை மீட்கும் பணியில் நூற்றுக்கும் மேற்பட்டோர் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளனர்.

மகாமகத் திருவிழா இடம்பெற்ற 10 நாள்களிலும் லட்சக்கணக்கான பக்தர்கள் மகாமகக் குளத்தில் புனித நீராடினர். அப்போது பணம் உள்ளிட்ட பொருள்களை பாவம் தொலையட்டும் என்று குளத்தில் விட்டுசென்றனர் சிலர் தவறுதலாக நகை மற்றும் பொருள்களையும் விட்டுச் சென்றிருக்கக்கூடும்.

மணல் அரிக்கும் தொழிலில் ஈடுபடும் நூற்றுக்கும் மேற்பட்டோர் இதைக கருத்திற்கொண்டு இக்குளத்தினுள் மூழ்கி மணலை அரித்து பொருள்களைத் தேடும் பணியில் ஈடுபட்டுவருகின்றனர்.

சிலருக்கு தங்கச்சங்கிலிகள், மோதிரங்கள், வெள்ளிக்கால்சலங்கைகள் மற்றும் பணம் போன்றவை கிடைத்துள்ளன.

(ஒ)

## உ... டி பல நோ.கூ. சங்கம் (வ/து)

# அறிவித்தல்

**கிராமிய வங்கி மீதிகளை உறுதிப்படுத்துதல் - 31.07.2003**

தற்போது சங்கத்தில் 31.07.2003இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான கணக்காய்வு நடைபெற்றுக் கொண்டிருப்பதால் இச்சங்கத்தின் கிராமிய வங்கியின் கொடுக்கல், வாங்கல் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் வாடிக்கையாளர் அனைவரும் தமது சேமிப்புக் கணக்கு மீதிகளை 12.03.2004 - 17.03.2004ஆம் திகதிவரை சங்கக் கிராமிய வங்கியில் வந்து உறுதிப்படுத்திக்கொள்ளவும். தவறும்பட்சத்தில் சங்கப் புத்தகத்தில் உள்ள மீதியே சரியென ஏற்றுக்கொள்ளப்படும்.

பதில் பொதுமுகாமையாளர். (சி-33982) (24-13-17-34)



## வல்வை நகராட்சி மன்றப் பரப்பினுள் கட்டடங்கள் அமைப்பவர்களுக்கான அறிவித்தல்

வல்வெட்டித்துறை நகராட்சிமன்றப் பரப்பினுள் கட்டடங்களைப் புனரமைத்தல், விஸ்தரித்தல், நிர்மாணித்தல் (வீடு, மதில், கிணறு, மலகூடம், வியாபாரத் தாபனங்கள்) என்பவற்றை மேற்கொள்வோர் தங்களது கட்டடப் படங்களுடன் நகராட்சி மன்றத்தில் பெறப்படும் விண்ணப்பப் படிவங்களில் விண்ணப்பித்து அனுமதிபெற்ற பின்னரே கட்டட வேலைகளைத் தொடரல் வேண்டும். தொடரப்படும் வேலைகள் நகர அபிவிருத்தி அதிகாரசபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, நகராட்சிமன்றம் என்பவற்றின் சட்டதிட்டங்களுக்கும், பிரமாணங்களுக்கும் அமைவாக இல்லாவிடத்து நகராட்சி மன்றத்தின் கட்டளைச் சட்டம் அத்தியாயம் 255 பிரிவு 77 இற்கு அமைவாக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தயவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நகராட்சி மன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை.
2004.03.09. (C33983)(39-34-13-17)

ஏ.எம்.ஜோசெப்,
செயலாளர்,
நகராட்சிமன்றம், வல்வெட்டித்துறை.


# கண்ணீர் அஞ்சலி



அளவெட்டி அருள்மிகு
கும்பளாவளைப்
பிள்ளையார் ஆலயத்தின்
பிரதம சிவாச்சாரியார்
அமரர் பிரம்மஸ்ரீ
**இ.சோமசுந்தரேஸ்வரக்குருக்கள்**
அவர்களின் மறைவினால்
துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்தினருக்கு ஆறுதல்
கூறுவதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்திபெற
இறைவனை வேண்டுகிறோம்.

அளவெட்டி.
(சி-33980) (26-13-17-34)

உபயகாரர்,
மங்குணியன் வளவு காளிகோவில்.

# மரண அறிவித்தல்கள்



## சோமசுந்தரம் நடராசா

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, சீனியர்லேன், கலட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் நடராசா 09-03-2004 செவ்வாய்க்கிழமை காலமானார்.


அன்னார் அழகம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சோமசுந்தரம் - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும் குலசிங்கம் (ஓய்வுபெற்ற தபாலதிபர்), நித்தியானந்தம் (கனடா), மகாலிங்கம் (நோர்வே), சறோஜினிதேவி, சாந்தாதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயகௌரி, பாலகிருஷ்ணன் (N.பாலா Bitsman) (ஆசிரியர், மானிப்பாய் மெமோறியல் கல்லூரி), சுந்தரலிங்கம் (கிராமசேவகர், பிரம்படி), மனோரஞ்சிதமலர், தயாநிதி ஆகியோரின் அன்பு மாமனாரும் யமுனா (ஆசிரியை, பெரியபுலம மகாவித்தியாலயம்), செகராசப்பிள்ளை செந்தில்வேல் (மானிப்பாய் மகளிர் கல்லூரி), கார்த்திகா, கோபிகா (யாழ். இந்துமகளிர் கல்லூரி), சர்மிளா, பிரணவன் (நோர்வே), டினோஜன் (யாழ்.இந்துக்கல்லூரி), நிரோஜன் (கொக்குவில் இந்துக்கல்லூரி), டிலக்ஷனா (யாழ். இந்துமகளிர் கல்லூரி), கஜீனா, திவாகரன் (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), மகிந்தன், லயினி (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (11-03-2004) வியாழக்கிழமை பகல் 10 மணியளவில் (பழைய நேரம்) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*21/2, சீனியர் லேன், கலட்டி,*
*யாழ்ப்பாணம்.* (29527)(26-13-17-34)

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



## பழநிவேல் செல்லமுத்து

கோப்பாய்மத்தி, நாவலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பழநிவேல் செல்லமுத்து அவர்கள் 07.03.2004 ஞாயிற்றுக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2004) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரது இல்லததில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகக் கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோப்பாய் மத்தி, நாவலடி,*
*கோப்பாய்.* (29524) (24-34-13-17)

தகவல்:
தெய்வேந்திரராசா (வவி - மகன்).

## தென்மராட்சி வலய மாணவருக்கான வினாடி வினாப் போட்டி

தென்மராட்சி,மார்ச்11

தென்மராட்சிக் கல்விவலயப் பாடசாலைகளின் தரம் 6 முதல் தரம்13 வரையான வகுப்புகளில் கற்கும் மாணவர்களுக்கிடையே கணித, விஞ்ஞான அறிவை மேம்படுத்துமுகமாக பாடசாலை மட்ட, வலய மட்ட கணித, விஞ்ஞான வினாடி வினாப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

முதலாம் தவணையில் கற்பிக்கப்பட்ட பாடத்திட்டத்தின்படி வாய்மொழி மூலப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

பாடசாலை மட்டப் போட்டிகள் மார்ச் 25ஆம் திகதிக்கு முன்னர் நடைபெறும். அப்போட்டிகளில் தெரிவு செய்யப்படும் மாணவர்கள் வலயமட்டப்போட்டிகளில் கலந்துகொள்ளமுடியும்.

வலயமட்டப் போட்டிகளில் கலநதுகொள்ளும் மாணவர்களிடையே எழுத்துப்பரீட்சை வகுப்பு ரீதியாக நடத்தி, அதில் சித்திபெறும் மாணவர்களுக்கு வலய மட்டத்திலான வாய்மொழி மூல போட்டிகள் மூன்று பிரிவுகளாக நடத்தப்படவுள்ளன.

தரம் 6,7,8 ஆகிய வகுப்பு மாணவர்கள் பிரிவு Iஇலும் தரம் 9,10,11 ஆகிய வகுப்பு மாணவர்கள் பிரிவு IIஇலும், தரம் 12,13 வகுப்பு மாணவர்கள் பிரிவு IIIஇலும் போட்டியில் கலந்துகொள்வர் என வலயக்கல்விப பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

(ம-8-117)

## 21 ஆம் திகதியன்று ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

தென்மராட்சி,மார்ச்11

தென்மராட்சி கல்விவலய முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் நடைபெறுமென உதவிக் கல்விப் பணிப்பாளர் (முன்பள்ளி) சு.பாக்கியராசா அறிவித்துள்ளார்.

இதேவேளை, வலய முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தின் புதிய தலைவராக செல்வி த.கந்தையாவும் செயலாளராக சி.விஜயமாலாவும், பொருளாளராக ச.வளர்மதியும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

(ம-8-117)

## பாடசாலைகளுக்கு இடையேயான மெய்வன்மைப்போட்டிகள்

தென்மராட்சி,மார்ச்11

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை வரணி மகா வித்தியாலய மைதானத்திலும் எதிர்வரும் 13ஆம், 15ஆம், 16ஆம் ஆகிய திகதிகளில் கொடிகாமம் அரசினர் வித்தியாலய மைதானத்திலும் நடைபெறவுள்ளன.

இறுதிப்போட்டிகள் பின்னர் அறிவிக்கப்படுமென வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

(ம-8-117)

## கிராம அலுவலர் கௌரவிப்பு

தென்மராட்சி,மார்ச்11

மந்துவில் கிழக்குப் பிரிவில் பத்துவருடங்கள் கிராம அலுவலராகக் கடமையாற்றி இடமாற்றம் பெற்ற வை.இராசரத்தினத்திற்கு அப்பகுதி மக்கள் 'சேவா நேசன்' பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளனர்.

அண்மையில் மந்துவில் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் இடம்பெற்ற பிரிவுபசார விழாவில் 'சேவா நேசன்' பட்டத்தினை இப்பகுதி மக்கள் சார்பில் பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் வழங்கினார்.

(ம-8-117)

## பிரதேச செயலகத்துக்கு கணனி இயந்திரம்

தென்மராட்சி,மார்ச்11

தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு பிரதமர் அலுவலகத்தினால் கணனி இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

நாட்டில் உள்ள அனைத்து பிரதேச செயலகங்களையும் பிரதமரின் அலுவலகத்துடன் இன்ரநெற் மூலம் இணைக்கும் திட்டத்தின் கீழ் இக் கணனி இயந்திரம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ம-8-117)


## வன்னியில் இருந்து மீண்டும் ...!
## இலக்கணாவத்தை உடுப்பிட்டியில்

# ஸ்ரீ வாணி அச்சகம்



ஓவ்செற் பிறின்டிங் வேலைகளில்
தொழில்நுட்பம் தெரிந்தவர்களால்
அதி நவீன வடிவமைப்புக்களில்
குறைந்த கட்டணத்தில் நேர்த்தியாகவும்
அவசர வேலைகளை
எவ்வேளையிலும்
செய்து பெற்றுக்கொள்ளலாம்
என்பதை மகிழ்ச்சியுடன்
அறியத்தருகின்றோம்.

இலக்கணாவத்தை,
உடுப்பிட்டி.
(29525)(39)

உரிமையாளர்,
ஸ்ரீவாணி அச்சகம்.



# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 559 |
| திகதி | 09.03.2004 |

டிக்கட்டின் நிறம் - நீலம்
செல்லுபடியாகும் தொடர் இல.
4578841-4593015

வெற்றி இலக்கங்கள் **17 22 36 08**

லக்கினம்
மேடம்



ஜக்பொட் பரிசு
ரூபா. 1,000,000/-
வெல்லப்பட்டுள்ளது.

இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **1,000,000/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ). | மொத்தப் பரிசுத் தொகை(ரூ) |
|---|---|---|---|
| 1 இல | 313,729 | 10 | 3,137,290 |
| 2 இலக்கங்கள் | 28,864 | 20 | 577,280 |
| 1 இல + லக்கினம் | 28,647 | 30 | 859,410 |
| 2 இல + லக்கினம் | 2,591 | 100 | 259,100 |
| 3 இலக்கங்கள் | 752 | 500 | 376,000 |
| 3 இல + லக்கினம் | 68 | 5,000 | 340,000 |
| 4 இலக்கங்கள் | 03 | 100,000 | 300,000 |
| 4 இல + லக்கினம் | 01 | 1,000,000 | 1,000,000 |
| மொத்தம் | 374,655 | - | 6,849,080 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 6,849,080/-

தொடர் இல. 5560965க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2004 மார்ச் 12ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

4581824-6-19
4584858-8-16
4581458-8-11
4582310-2-15
4581958-5-76

PHOENIX C.O.M


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
## ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்
## நன்றி நவிலலும்



## திருமதி நடராஜா இலச்சுமிப்பிள்ளை

மாதர் குல மாணிக்கமாய் மாந்தருள் திலகமாய்
பண்போடு வாழ்ந்து மறைந்திட்ட அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் இல்லத்தரசியின் மறைவுச்செய்தி கேட்டு எமது இல்லம் நாடிவந்து அனுதாபந்தெரிவித்து ஆறுதலுந் தேறுதலுங் கூறிய அன்புள்ளங்களுக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி ஒத்தாசைபுரிந்த அனைவருக்கும் எமது நெஞ்சம்நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (11-03-2004) வியாழக்கிழமை எங்களுடைய இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*கெருடாவில் தெற்கு, தொண்டமானாறு.*
(29530)(34-21-13-17)

அன்பு மறவாத பேறாமக்கள்.

உதயன்

## இக்கட்டான கட்டத்தில் ஊடகங்களின் பங்கு

ஈழத் தமிழர்கள் மிக நெருக்கடியான ஒரு கால கட்டத்தில் இப்போது இருக்கின்றார்கள்.

அவர்கள் ஐக்கியப்பட்டுத் தமது உரிமைகளை வென்றெடுக்கும் காலம் கனிந்து, நெருங்கிவரும் இச்சமயத்தில், பிரதேச வாதம் எனும் நெருப்பு அந்த ஐக்கியத்தைத் தீய்ப்பதற்காகத் தனது சுவாலையை விளாசி எரிய விட்டுப் பற்றிப் பிடிக்க முயற்சிக்கின்றது.

சம்பந்தப்பட்ட தரப்புகள் தாம் பிரதேச வாதத்துக்கு எதிரானவை என்பதை அறுதியிட்டுக் கூறுகின்றன. அனைவரையும் அரவணைத்துப் போவதே தங்களின் முடிந்த முடிவு என்கின்றன.

ஆனால், யதார்த்தத்தில் நிலைமையோ முரண்பட்டு நிற்கின்றது.

அநாமதேயத் துண்டுப் பிரசுரங்களும், தொலைபேசி மிரட்டல்களும், அச்சுறுத்தல் சுவரொட்டிகளும் தம் கைவரிசையைக் காட்டி நிற்கின்றன; ஐக்கியத்துக்கு வேட்டுவைக்க முயல்கின்றன. இவை இனந்தெரியாதோரின் வேலை என்ற பெயரில் தொடர்வது தான் வேதனை. இங்கே ஒரு கேவலத்தன்மையும் வெளிப்படுகிறது.

பிரதேசவாதப் பிரிவினையால் வர்த்தகர்கள், மாணவர்கள், பொதுமக்கள் இடம்பெயர்கின்றனர்.

இந்த இக்கட்டான சமயத்தில் ஊடகங்களின் பங்கு முக்கியமானது. அதுவும் தமிழ்மக்கள் மத்தியில் செல்வாக்குச் செலுத்துகின்ற - அவர்களைச் சென்றடைகின்ற - ஊடகங்களின் பொறுப்பு மிக அதிகமாகும்.

தமிழ் மக்கள் மத்தியில் பதற்றமும் குழப்பமும் பற்றி நிற்கின்ற இச்சமயத்தில் கண்மூடித்தனமான செய்திகளை வெளியிடுவதன்மூலம் குழப்பத்தை இன்னும் மோசமாக்க முயலக்கூடாது.

உதாரணத்துக்கு புலிகளின் திருகோணமலை மாவட்டத் தளபதி சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற செய்தியை எடுத்த எடுப்பிலேயே வெளியிட்டு தமிழ்மக்களை ஆழ்ந்த குழப்பத்தில் ஆழ்த்திய அரச ஊடகம் அதன்பின் இப்போதுவரை தனது செய்தியின் தவறைத் திருத்தவோ அல்லது தனது செய்தியின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்தவோ முயற்சி எடுத்ததாகத் தெரியவில்லை.

சிங்கள, ஆங்கில ஊடகங்களின் போக்கோ மிக மோசம். எரியும் தீயில் எண்ணெய் ஊற்றுவது போல தமிழர் ஐக்கியத்தைச் சிதைப்பதற்கு நல்ல வாய்ப்புக் கிட்டியது என்ற மகிழ்வில் வெளுத்து வாங்குகின்றன அவை.

ஆனால், பெரும்பாலான தமிழ் ஊடகங்கள் பொறுப்போடும், தெளிவோடும் செயற்படுவதும், தம்மைத் தெளிவான ஒரு வரையறைக்குள் நிறுத்திக் கொண்டு செய்திகளை வெளியிடுவதும் பலராலும் அவதானிக்கப்பட்டு விதந்துரைக்கப்பட்டிருக்கின்றது.

தமிழர் ஐக்கியத்துக்கு எதிரான பிரதேசவாதத்துக்குத் துணை போவதில்லை என்பதில் இந்த ஊடகங்களின் வழிகாட்டிகள் தெளிவாக இருக்கின்றார்கள் என்பதை அவர்கள் வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

இக்கட்டான காலகட்டத்தில் இத்தகைய திட்டவட்டமான நிலைப்பாட்டை எடுத்தமைக்காக அவர்களும், அவர்கள் சார்ந்த நிறுவனங்களும் சில சிக்கல்களை எதிர்கொள்ளும் நிலைமை ஏற்கனவே தோன்றியுள்ளது. அச்சுறுத்தல்கள் மற்றும் அடாவடித்தனங்கள் மூலம் விடயங்களை உணர்த்த முயலுதல் போன்றவை இடம்பெற்றுள்ளன.

செய்திகளைச் செய்தியாக மக்களுக்குக் கொடுக்க வேண்டிய கடமை ஊடகங்களுக்கு உண்டு. அதே சமயம் சமூகப் பொறுப்போடும் அவற்றை அணுக வேண்டிய கடப்பாடும் அந்த ஊடகங்கள் மீது சுமத்தப்பட்டிருக்கின்றது. இதைத் தமிழ் ஊடகங்கள் ஓரளவு உணர்ந்து கொண்டிருப்பதே அவற்றின் தற்போதைய கட்டுக்கோப்பான செல்நெறிக்குக் காரணம் என்று கொள்ளலாம்.

பக்கச் சார்பின்மை என்ற பெயரில் சமூகத்தை - இனத்தை - பக்கம், பக்கமாகப் பிரித்துவிடும் முயற்சிக்குத் துணைபோக முடியாது; துணை போகவும் கூடாது.

இந்த உயர்ந்த கட்டுக்கோப்பான நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதில் தமிழ் ஊடகங்கள் மேலும் உறுதியாக இருக்க வேண்டும்.

இந்த நெருக்கடியிலிருந்து தமிழ்ச் சமூகம் பேரிழப்பின்றி மீள்வதற்கும் இத்தகைய உறுதிப்பாடான நிலைப்பாட்டின் மூலம் ஊடகங்களுக்கு உதவுமுடியும்; பங்காற்ற முடியும்.

ஐக்கியப்பட்டு நின்ற தமிழினத்தை ஏக்கத்தோடு பார்த்த பேரினவாதம் ஏளனத்தோடு நோக்கும் நிலைமை இன்று வந்துள்ளது. இதைத் துடைப்பதில் ஊடகங்களின் பங்கு அளப்பரியது.

# ஓர் அணியில் நிற்கின்றோம் என்பதனை ஒருமித்த குரலில் உலகுக்குப் பறைசாற்றுவோம்

## புதுவை இரத்தினதுரை அழைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்11

நடைபெறவிருக்கும் தேர்தல் எமது மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் தேர்தலாக அமையாவிட்டாலும் நாம் எல்லோரும் ஒருமித்த குரலில் ஓரணியில் நிற்கிறோம் என்று சர்வதேசத்திற்குப் பறைசாற்று வோம்.

- இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை.

நிதர்சனத்தின் வெளியீடான ந.கேசவராஜனின் இயக்கத்தில் உருவான 'அம்மா நலமா'? திரைப்பட வெளியீட்டு விழா நேற்று யாழ். பல்கலைக்கழகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோது திரைப்படத்தினை வெளியிட்டு விழாவில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

நடைபெறப்போகின்ற தேர்தல் ஒரு நகைச்சுவைக்குரியதல்ல. எமது பலம் வெளிப்படும் ஒரு தளமாகத் தேர்தல் அமையப்போகின்றது.

இந்தத் தேர்தல்களை எமது அமைப்பும் கடந்த காலங்களில் எதிர்த்துத்தான் வந்தது. ஆனால், இப்போது தேவையொன்று உள்ளது. இந்த விடுதலைப் போராட்டம் தொடருமா? அல்லது சந்தைக் கூட்டம்போல் கலையுமா? என்று சர்வதேசம் பார்க்கின்றதுபோல எமக்குத் தெரிகிறது.

இந்தத் தேர்தல் மூலம் பெரிய மாற்றங்கள் ஏற்படாமல் விட்டாலும் ஒரு விடயம் மட்டும் தெளிவாகப்போகிறது. எங்களுடைய விலை மதிப்பற்ற உயிர்களை விதைத்தும், புதைத்தும் நடத்தப்பட்ட இந்த விடுதலைப் போராட்டம் ஓய்ந்து போகுமா? அல்லது பெரிய அளவில் முன்னெடுக்கப்படுமா? என்பதற்கான ஒரு பலப்பரீட்சையாக இத்தேர்தல் அமைய இருக்கிறது. அதனைத் தீர்மானிக்கும் சக்திகளாக நீங்கள் இருக்கப்போகிறீர்கள்.

மட்டக்களப்பில் ஏற்பட்டுள்ள தனிமனிதனின் குழப்பகரமான சூழ்நிலைபற்றி உங்கள் உடலும்,உள்ளமும் சோர்ந்து போகக்கூடிய வகையில் செய்திகள் பரவுகின்றன.

மட்டக்களப்பு மக்களைப் பற்றி எமக்கு நன்குதெரியும். அவர்கள் எங்களைவிட வீரம்செறிந்த மக்கள். அண்மையில் கூடத் தமது பிள்ளைகளை வெற்றித் திலகமிட்டுப் போருக்கு அனுப்பிய மக்கள் அந்த மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மிகவும் நிதானமாக அர்ப்பணிப்புடன் செயற்படுவார்கள். நீங்கள் அந்த நிலைமைகளை நினைத்துக் குழம்பிக் கொள்ளாதீர்கள்.

தற்போது சர்வதேச தூதுவர்கள் எல்லாம் யாழ்ப்பாணத்திற்கு அடிக்கடி வந்துபோகிறார்கள், ஏன் வருகிறார்கள் என்றால் அவர்கள் நாடி பிடித்துப்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். யார் வெல்லப் போகிறார்கள் என்று அல்ல. எந்த அணி வெற்றி பெறப்போகிறது என்று நாடிபிடிக்கிறார்கள் - என்றார். (ம-ரி)




'அம்மா நலமா?' திரைப்பட வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. பிரமுகர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

# தேர்தல் கடமையில் ஈடுபடும் பொலீஸார் பக்கச்சார்பு இன்றிச் செயற்படவேண்டும்

## மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்து

யாழ்ப்பாணம்,மார்ச்11

தேர்தல் காலக் கடமையில் ஈடுபடும் பொலீஸார் எந்தவித பக்கச் சார்ப்புகளும் இன்றிச் செயற்படவேண்டும்.

- இவ்வாறு நாட்டின் சகல பாகங்களிலும் கடமையாற்றும் பொலீஸாருக்கு அறிவுறுத்தியுள்ளது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.

இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஒரு நாட்டிலுள்ள பிரஜைகளுக்குச் சுதந்திரமாக வாக்களிக்கும் உரிமையும் சுதந்திரமாக அரசியல் நடவடிக்கையில் ஈடுபடும் உரிமையும் உண்டு. சுதந்திரமானதும் நேர்மையானதுமான தேர்தல்கள் நடத்தப்படுவதை மனித உரிமைகள் ஆணைக்குழு அங்கீகரிக்கின்றது.

தேர்தலுக்கு முன்னர் பதிவுசெய்யப்படும் முறைப்பாடுகளையும் தேர்தல் தினத்திலும் அற்குப் பின்னரும் நடைபெறும் வன்முறைகள் தொடர்பான முறைப்பாடுகளையும் பொலீஸார் ஏற்றுக்கொள்ளவேண்டும். அதனை ஏற்க மறுப்பது அடிப்படை மனித உரிமை மீறலாகும்.

தேர்தல் தொடர்பான பிரசாரக் கூட்டங்களை நடத்துவதற்கும் ஒலிபெருக்கி பயன்படுத்துவதற்கும் அனுமதி வழங்க வேண்டும். அத்துடன் தேர்தல் ஊர்வலங்களை நடத்தவும் அனுமதிக்கவேண்டும்.

துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள் அபேட்சகரின் படங்கள், சின்னங்கள், கொடிகள் மற்றும் பதாகைகள் வெளியிடல் தேர்தல் சட்டங்களின்படி அனுமதிக்கப்பட்டவையாகும். அதில் ஏதாவது ஒரு கட்சிக்கு அல்லது குழுவிற்கு விசேட சலுகைகள் அல்லது உரிமைகளை வழங்குவதும் தவறானது.

வாக்களிக்கும் உரிமையைத் தடுப்பதில் ஈடுபடுபவர்கள் மீது பொலீஸார் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும். தோதல் சட்டங்களை மீறும் நபர்கள் அல்லது கட்சிகள் மீது அவர்களது அந்தஸ்து அதிகாரங்களைக் கவனத்தில் எடுக்காது தண்டனை வழங்கவேண்டும். அத்துடன், பொதுச் சொத்துக்களைத் தவறாகப் பயன்படுத்துவோர் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

தேர்தலின் பின் உடனடியாக வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதில் பொலீஸாருக்குப் பெரும்பங்குண்டு. அவை ஏற்படுவதற்கு அரசியல் செல்வாக்குக் காரணமாக இருந்ததைக் கடந்தகால வரலாற்று அனுபவங்களில் காணலாம். இது அடிப்படை உரிமை மீறும் செயலுக்கு வழிவகுக்கும். ஆகவே, பொலீஸார் அடிப்படை உரிமைகளை மீறாத வகையில் செயற்படவேண்டும்.

வன்முறைகளை ஏற்படுத்துவதில் பொலீஸார் பங்களிக்கக் கூடாது. தயார்ப்படுத்துபவராகவோ அன்றி காரணகர்த்தாவாகவோ இருக்கக்கூடாது.

பொலீஸார் வாக்களிப்பு நிலையங்களுக்கும் அதனுடன் தொடர்புடைய இடங்களுக்கும் மேலதிக கடுமையான பாதுகாப்பு வழங்கவேண்டும்.

இந்த நாட்டின் தேர்தல் சட்டங்களுக்கு அமைவாக நேர்மையானதும் சுதந்திரமானதுமான தேர்தல் நடைபெறுவதற்கு எல்லாவித முயற்சிகளும் எடுக்கப்படவேண்டும் - என்றுள்ளது. (ம-5)

**நாளை**

மாசி 29
வெள்ளிக்கிழமை
(12.03.2004)
திதி: ஷஷ்டி
இரவு 7.38 வரை.
நட்சத்திரம்: விசாகம்
பகல் 7.39 வரை
சுபநேரம்: 6.22 - 7.52
ராகுகாலம்:10.52 - 12.22
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

கருணை கொண்ட உள்ளம் அது கடவுள் வாழும் இல்லம்.

# அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் தானே என்கிறார் அனுரா!

கொழும்பு,மார்ச்11

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்கிவிடுவதென்பது கூட்டு முன்னணியின் பிரதான குறிக்கோளாக இருக்கும் நிலையில், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பியின் ஆதரவுடன் தான் போட்டியிடவுள்ளார் என்று அனுரா பண்டார நாயக்கா பகிரங்கமாகக் கருத்து வெளியிட்டுள்ளார். இதனால் நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறை தொடர்பான கூட்டு முன்னணியின் கொள்கை குறித்துக் குழப்பநிலை தோன்றியுள்ளது.

கடந்த 3ஆம் திகதி ஆங்கிலப் பத்திரிகைகளுக்குக் கருத்து வெளியிட்ட அனுரா, கூட்டு முன்னணி சார்பாக அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தானே வேட்பாளர் என்றும் - பண்டாரநாயக்கா குடும்பத்தின் கடைசி அரசியல் தலைவர் தானே எனவும் - ஜனாதிபதியின் பிள்ளைகள் அரசியலில் ஈடுபட்டால் அவர்கள் குமாரதுங்க குடும்பத்தினராகவே கணிக்கப்படுவரெனவும் தெரிவித்திருந்தார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழித்துவிடப்போவதாக முன்னைய தேர்தல்களின்போது அளித்த வாக்குறுதிக்கு மாறாக ஜனாதிபதி பதவிக்குரிய அதிகாரங்களை 10 ஆண்டுகளாக அனுபவித்துள்ளார் சந்திரிகா. தற்போது மீண்டும் ஜனாதிபதி முறையை ஒழித்துவிடப்போவதாகக் கூறிக்கொண்டு அவர் மக்கள் ஆணையைக் கோரிநிற்பது குறித்து எழுப்பப்படும் குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கும் வகையில் ஜனாதிபதியின் எண்ணம் எதுவெனத் தனக்கு எதுவும் தெரியாதெனவும், சில வேளை தலையணையின்கழ் பாம்பைத்தேடும் திறமை ஜனாதிபதியிடம் இருக்கக் கூடுமெனவும் அனுரா தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியினரின் ஆதரவுடனேயே அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடவிருப்பதாக அனுரா கூறியிருப்பது குறித்து ஜே.வி.பி. இதுவரையில் தமது நிலைப்பாட்டை வெளியிடவில்லை.

இதனிடையே, ஐ.தே. கட்சி கூட நிறைவேற்று ஜனாதிபதி முறைமை குறித்துத் தனது நிலைப்பாட்டை இதுவரை வெளியிடவில்லை. (ம)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது கனுபோவிலை தெகிவளையில் வசிப்பவருமாகிய



## அம்பலவாணர் குமாரசாமி

அவர்கள் அண்மையில் கல்கிசை மாவட்ட மேலதிக மாவட்ட நீதிபதி திருமதி ஜராங்கனி பெரேரா அவர்கள் முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணஞ்செய்து கொண்டார். இவர் சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் பழைய மாணவரும், ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபையின் முன்னாள் உள்ளகக் கணக்காய்வாளராகவும் (Rtd. Internal Auditor - R.V.D.B.) பணியாற்றிய வருமாவார். இவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்:
க.கணபதிப்பிள்ளை.

மிருசுவில். (29515) (26-13-17-24)

# செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்புகொள்ள வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,மார்ச்11

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்புகொள்ளுமாறு பின்வருவோர் வேண்டப்படுகிறார்கள்.

செல்லமணி பத்மாவதி 4ஆம் கட்டை, அக்கராயன் வீதி, அமைதிபுரம், கிளிநொச்சி.

ஞானபண்டிதர் (தங்கராசா) மகேஸவரி, கச்சாய், சாவகச்சேரி.

அய்யாதுரை சுபாசினி, நெட்டிலிப்பாய் பிள்ளையார்கோயிலடி, கோண்டாவில் கிழக்கு.

லிங்கராசா தமிழகம், ஏ.ஜி.ஏ. ஒழுங்கை, வல்வெட்டித்துறை.

ப.வேலும்மயிலும், வல்வெட்டித்துறை.

அருள்நேசன் ரேணுகா, சம்பியன வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்

வின்சஸ்லாஸ் வின்சன் விமலதாஸ், கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

விக்டர் அன்னமேரி, 9, 10 வீட்டுத் திட்டம், கடற்கரை வீதி, குருநகர்.

தர்மலிங்கம் சரஸ்[illegible]தியம்மா, அம்மன் கோவிலடி, [illegible]டைதீவு.

கந்தப்பு பரம்சோதி, [illegible]ாவளை, கரணவாய் தெற்கு, கரவெட்டி.

சுப்பையா கனகரத்தினம், ஆவரங்கால், புத்தூர்.

முத்துத்தம்பி சோதிப்பிள்ளை, மே/பா வேலுப்பிள்ளை, சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலி.

மகேசன், நீதிமன்ற வீதி, மல்லாகம்.

கஜராகவன், புளியடி வளவு, பெரிய கிணத்தடி, அளவெட்டி.

நடராசா கந்தசாமி, தங்கவேலாயுதம், சுப்பர்மடம், பருத்தித்துறை.

கந்தசாமி சின்னக்கிளி, சல்லிவளவு, பொலிகண்டி.

ஜெகதீஸ்வரன் லோஜி, ஜி.1 ஐந்து மாடிக்கட்டடம், குருநகர்.

அருணாச[illegible] இலங்கரத்தினம், யாழ். போதனா வைத்தியசாலை.

கந்தசாமி நாகராசா, அந்தோனிவாசா, பத்திமா வீதி, மார்தகல்.

பரமநாதர் குணசேகரம், 85, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

சிவகுரு காசிநாதர், புகையிரத நிலைய வீதி, சுன்னாகம்.

ஐயாத்துரை சுகந்தினி, சபாபதிபிள்ளை வீதி, சுன்னாகம் தெற்கு.

மாணிக்கம் மதுரநாயகம், இணுவில மேற்கு, இணுவில்.

பெனடிக் மரியதாஸ், 70/9, சொலமன் வீதி, யாழ்ப்பாணம்.

விவேகானந்தராசா கிருஷ்ணகுமார், ஜீவன்ஸ் இல்லம், பன்னையம்பதி, பருத்தித்துறை.

ராஜ்குமார் ராஜேஸ்வரி, 387/1, நாவலர் வீதி, நல்லூர்.

உ
சிவமயம்

# ருது சாந்தி நீராட்டுவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுபானு வருடம் மாசித் திங்கள் 28ஆம் நாள் (12.03.2004)
வெள்ளிக்கிழமை காலை 8மணி 30நிமிடம் தொடக்கம் 10மணி வரையுள்ள
சஷ்டி திதியும் அனுஷம் நட்சத்திரமும் விருச்சிக இலக்கினமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்,

எமது ஏகபுத்திரி
திருநிறை செல்வி
**உ.நிஷாந்தி** அவர்களுக்கு

ருது சாந்தி நீராட்டுவிழா நடத்த இறையருள் துணைகொண்டு நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மங்களச்செல்வியை ஆசீர்வதித்து வைபவத்தைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

வேலகாடு,
ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை. (29495) (26-13-17-24)

தங்கள் நல்வரவை நாடும்:
திரு.திருமதி உத்தரராசா
குடும்பத்தினர்.

# நித்திய வாழ்வின் நினைவு தினம்

மண்ணில் 20 06 1939



விண்ணில் 13 02 2004

## அமரர் காசிநாதன் அன்ரன் போல் சிவலிங்கம்

(ஓய்வு பெற்ற எழுதுவினைஞர் - யாழ் மாநகரசபை)

"படைகளின் ஆண்டவரே- உமது உறைவிடம் எத்துணை அருமையானது, உமது இல்லத்தில் தங்கியிருப்போர் நற்பேறு பெற்றோர்-" திருப்பாடல்கள் 84

**கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் நாளை (12-03-2004) வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும் திருப்பலியில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் பங்குபற்றி அன்னாரது ஆன்ம இளைப்பாற்றிக்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.**

"ஆவே மரியா"
அல்வாய். (29509) (41)

அன்பு மனைவி,
மகள்மார், மருமகன்.

# சேவைநலன் பாராட்டுச் சிறப்பிதழ்

**10-03-2004**

## காட்சிக்கெளிய நண்பர்

திரு.த.தெட்சணாமூர்த்தி அவர்கள் சுமார் 30 வருட அரசசேவையில் இருந்து ஓய்வுபெறுகிறார். மிகநீண்டகாலமாக நண்பராக இருந்தவர். சிரித்தமுகம், சினமறந்த நெஞ்சு, காட்சிக்கெளியன் என வள்ளுவர் கூறிய பல அரிய குணங்கள் அவரிடம் இயல்பாகக் குடிகொண்டிருந்தன.

அதற்கு மேலாக பிரதேச, ஊர்ப்பற்று பல சந்தர்ப்பங்களில் வேறு பிரதேசத்துக்கு அவரைமாற்ற முயன்ற போதெல்லாம் "டேய் கடைசி காலத்திலை ஊருக்கு ஏதாவது செய்வம் என்னைக் குழப்பாதை" இதுதான் அவர் கூறுவது. அவரது தொடர் சேவை அப்பிரதேசத்துக்குத் தேவை. பதவியில் இருந்துதான் பணிசெய்ய வேண்டுமென்பதல்ல. பதவிக்கு வெளியே நின்று மேலும் பலவற்றை அவரால் சாதிக்க முடியும். அவர் அதனைச் செய்வார் என நம்புகிறேன். இவரது ஓய்வுகாலம் சிறப்பாக அமைய எனது வாழ்த்துக்கள்.

**திரு.நா.சிவபாதசுந்தரம்**
*திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் - மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.*

## அளப்பரிய சேவையாற்றியவர்

வேலணைப் பிரதேச செயலகத்தில் உதவித் திட்டப்பணிப்பாளராகக் கடமையாற்றி 32 வருடங்கள் சேவையாற்றி ஓய்வுபெறும் தம்பியப்பா தெட்சணாமூர்த்தி அவர்கள் வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் தன்னால் இயன்றளவு அபிவிருத்திவேலைகளை திட்டமிட்டு செய்துள்ளார்.

எமது சரவணைக் கிராமத்தில் சேதமடைந்த நாவெட்டி வாய்க்கால் அணை, கி.அ.சங்கக் கட்டடம், சனசமூக நிலையங்கள், பாலர் பாடசாலை, நாகேஸ்வரி வித்தியாசாலைக் கட்டடம் ஆகியவற்றைப் புனரமைத்த பெருமை இவரைச் சார்ந்ததாகும்.

இவரை மனமாரப் பாராட்டுவதுடன் இன்னும் பலசேவைகள் செய்ய பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

**வை.குருமூர்த்தி - கி.அ.I, ம.அம்பிகைபாகன் - கி.அ.I**



## உயர்திரு. தம்பியப்பா தெட்சணாமூர்த்தி

(உதவித் திட்டமிடல் பணிப்பாளர், வேலணை பிரதேச செயலர் பிரிவு)

01. முழுப்பெயர்: தம்பியப்பா தெட்சணாமூர்த்தி
02. பிறந்த திகதி: 1943.03.10
03. நிரந்த முகவரி: சரவணை மேற்கு, வேலணை
04. தற்காலிக முகவரி: 139, கோயில் வீதி, யாழ்ப்பாணம்
05. பிறந்த இடம்: மண்டைதீவு
06. ஆரம்பக் கல்வி: யா/மண்டைதீவு மகா வித்தியாலயம் Year 01 - O/L வரை
    மேற் கல்வி: A/L - யா/கனகரத்தினம் மகா வித்தியாலயம்
    1966.12.29 கலைமாணிப் பட்டம் - Peradeniya University
    ஆற்றிய சேவை: அபிவிருத்தி உத்தியோகத்தர்: 01.07.1972 - 31.10.1989
    ஊர்காவற்றுறை, வேலணை, சங்கானை, நெடுந்தீவு, முல்லைத்தீவு, பாண்டியன்குளம், கிளிநொச்சி.
    திட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர்: 01.11.1989 - 09.04.1992
    கண்டாவளை, கிளிநொச்சி
    திட்டமிடல் உதவிப் பணிப்பாளர்: 10.04.1994 - 09.03.2004 சண்டிலிப்பாய், வேலணை

## ஓய்வு காலம் சிறப்புற அமையட்டும்

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் சரவணையை வாழ்விடமாகவும் கொண்ட திரு.தம்பியப்பா தெட்சணாமூர்த்தி அவர்கள் வேலணை பிரதேச செயலர் பிரிவின் உதவித்திட்டப் பணிப்பாளராகச் சேவையாற்றி ஓய்வுபெறுகின்றார். பல்வேறு சமூக நலத்திட்டங்களைக் கிராமங்களுக்கு ஏற்ப வகுத்து நடைமுறைப்படுத்திய இவர், சரவணைக் கிராமத்திலும் நீண்டகாலமாகச் சமூகசேவையில் ஈடுபட்டுள்ளவர். சரவணை ஸ்ரீகதிர்வேலாயுதசுவாமி கோவிலின் பரிபாலன சபையில் முக்கிய பதவி வகித்து வந்ததுடன் இன்று தேர்த்திருப்பணிச் சபைத் தலைவராகவும் இருந்து பணியாற்றி வருகின்றார். ஓய்வுபெறும் இவர் சமூக சேவையிலும் சமயச் சேவையிலும் தொடர்ந்து ஈடுபட்டுவருவதுடன் ஓய்வுகாலம் சிறப்பானதாக அமைய கதிர்வேலாயுதசுவாமியார் அருள்வேண்டி நிற்கின்றோம்.

**ஆலய பரிபாலன சபையினர், தேர்த்திருப்பணிச் சபையினர்.**
*ஸ்ரீகதிர்வேலாயுதசுவாமி கோயில், சரவணை.*

## சமய, சமூகப்பணிகள் தொடரட்டும்

ஓய்வுபெறுகின்ற திரு.த.தெட்சணாமூர்த்தி அவர்களை சரவணை விவசாய சம்மேளனம் உளப்பூர்வமாகப் பாராட்டி வாழ்த்துகின்றது.

இவரது காலத்தில் சரவணைக் கிராமத்தின் விவசாய அடிப்படைத் தேவையாகிய நீர்வளத்தைப் பாதுகாப்பதற்காகப் பல்வேறு குளங்களைப் புனரமைப்புச் செய்வதிலும் குறிப்பாக சரவணை கடல்நீர்த் தடுப்பு அணைத் திட்டத்தைத் தனது காலத்தில் புனரமைப்பதிலும் விடாமுயற்சியுடன் செயற்பட்டவர். விவசாயத்தில் மிகுந்த நாட்டங்கொண்ட இத்தகைய சேவையாளர் அரசசேவையில் இருந்து ஓய்வுபெற்றபோதும் அவருடைய சமூகப்பணியும் சமயப்பணியும் ஓய்வு இன்றித் தொடர வேண்டுமென்றும் அவருடைய ஓய்வுகாலம் சீரும் சிறப்புமாக அமைய வேண்டுமென்றும் வாழ்த்துகின்றோம்.

**விவசாய சம்மேளனம், சரவணை.**

## சிறந்த ஓர் ஆலோசகர்

சரவணைக் கிராமத்தில் பலகாலமாக பல்வேறு வழிகளிலும் சேவையாற்றிய திரு.த.தெட்சணாமூர்த்தி அவர்கள் வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் உதவித் திட்டப் பணிப்பாளராகக் கடமையற்றி ஓய்வுபெறுகின்றார். இவர் எமது கிராமத்தின் முன்னேற்றத்திற்கு பாடுபட்டு வருவதுடன் எமது இளைஞர்களுக்கு வழிகாட்டியாகவும் ஆலோசனை கூறுபவராகவும் விளங்குகின்றார். கிராம முன்னேற்றச் சங்கத்தையும் சனசமூக நிலையங்களைப் புனரமைத்து இயங்கவைக்க வேண்டுமென்பதில் கண்ணுங்கருத்துமாக இருந்து எம்மவர்கள் எல்லோரையும் ஒன்றுசேர்த்து இவற்றைச் செயற்படவைத்துள்ளார்.

இவர் காட்டிய அக்கறைக்கும் அர்ப்பணிப்புக்கும் இவரைப் பாராட்டுவதுடன் இவருடைய ஓய்வுகாலம் பல்வேறு வழிகளிலும் சிறப்பாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கிராம முன்னேற்றச் சங்கம், மாதர் சங்கம், பாரதி சனசமூக நிலையம், தொல்காப்பியர் சனசமூக நிலையம், வள்ளுவர் சனசமூக நிலையம், சரவணை.**

## அக்கறையோடு செயற்பட்ட ஆசாரசீலர்

வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் உதவித் திட்டமிடல் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு பெறுகின்ற திரு.த.தெட்சணாமூர்த்தி அவர்களின் சேவையை யா/சரவணை நாகேஸ்வரி மகாவித்தியாலய சமூகம் பாராட்டுகின்றது. அவரது காலத்தில் அவர் எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு நெருக்கடியான காலகட்டங்களிலும் மிகவேண்டிய ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் தேவையான நேரங்களிலும் வழங்கி பாடசாலையின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறையோடு செயற்பட்ட ஆசாரசீலர். பாடசாலைக்குத் தன்னாலான உதவிகளையும் தானாகவே முன்வந்து வழங்கி உதவியுள்ளார். அவற்றையெல்லாம் பாடசாலைச் சமூகம் மறந்துவிட முடியாது. இவரது ஓய்வுகாலத்தில் இவர் சகல வளத்துடனும் நீண்டகாலம் வாழ் வாங்கு வாழ எல்லாம்வல்ல எம்பெருமான் அருள் பாலிக்க வேண்டுகின்றோம்.

**பாடசாலைச் சமூகம், யா/சரவணை நாகேஸ்வரி ம.வி., வேலணை.**
(29510) (24-13-17)

## சேவை தொடரட்டும்

திரு.தெட்சணாமூர்த்தி அவர்கள் சரவணை சேவா மன்றத்தின் ஆரம்பகால உறுப்பினராகவும் தலைவராகவும் இருந்து சேவா மன்றத்தினை வழிநடத்தியவர்.

இவர் தனது 32 வருடகால அரசசேவையிலிருந்து ஓய்வுபெறுகின்றார். இவரது சேவைக்காலத்தில் இவர் ஆற்றிய சேவையை பாராட்டுகின்றோம். உதவித்திட்டப் பணிப்பாளராக இருந்து ஓய்வு பெறும் இவர் ஓய்வுகாலத்தில் சேவா மன்றத்தின் வளர்ச்சியிலும், சமூகசமய ஈடுபாட்டிலும் தன்னை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டி நிற்கின்றோம்.

**சேவா மன்றம், சரவணை - கனடா.**

# சமூக, பொருளாதார ரீதியில் பெண்கள் முன்னேறாதவரை விடுதலை கிடைக்காது

## மேலதிக அரச அதிபர் பத்தினியம்மா தெரிவிப்பு

வலி.வடக்கு,மார்ச்11

பெண்கள் சமூக, பொருளாதார ரீதியில் முன்னேற்றம் காணாத வரை அவர்கள் விடுதலை பெற்றதாகக் கூற முடியாது. பெண்கள் சமூக, பொருளாதார ரீதியாக விடுதலையைப் பெற வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டியது அவசியமாகும்.

- மேற்கண்டவாறு யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி பதிலக நாயகம்போல் தெரிவித்தார்.

அளவெட்டி மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்டங்கள் சி.செல்வராணி தலைமையில் அளவெட்டி தென்னிந்திய திருச்சபை தொழிற் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்ததாவது:-

பெண்கள் இன்று தம்மைத்தாமே அடக்கி ஒடுக்கிக்கொள்ளும் நிலைமை காணப்படுகின்றது. இந்த நிலைமையில் இருந்தும் நாம் மாற்றம்பெற வேண்டியது அவசியமாகும்.

அரச திணைக்களங்கள் மற்றும் சபைகள், கூட்டுறவுத்துறைகளில் ஆண்கள், பெண்கள் என்ற வேறுபாடுகள் இன்றி சம்பளம் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால், தனியார்துறைகளில் இத்தகைய நிலைமை காணப்படவில்லை.

நான் இப்பகுதியில் பிரதேச செயலாளராக இருந்த போது நாள்கூலி தொழிலாளிப் பெண்களுடன் கூலி சம்பந்தமாக கலந்துரையாடினேன். அவர்களே கூறுகின்றார்கள் தாங்கள சம்பளம் குறைவாகப் பெறுவதே சரியென்று.

பெண்கள் இன்று சோம்பேறிகளாகச் சென்றுகொண்டு இருக்கிறார்கள். தொலைக் காட்சிகளின் முன்னாலேயே இருந்து விடுகிறார்கள்.

கண் பார்க்க கைசெய்யும் என்பார்கள். அந்தவகையில் தொலைக் காட்சி பெட்டிகளின் முன்னால இருந்தாலும் கூட கைத்தொழில் முயற்சிகளையும் பெண்கள் மேற்கொள்ள முடியும்.

இந்த நிகழ்வில் செய்து வைக்கப்பட்டுள்ள பொருள்களை பார்க்கும் போது மிகவும் தரம் வாய்ந்ததாகவும் பெறுமதி உடையதாகவும் காணப்படுகின்றன. இப்பொருள்களை சந்தைப்படுத்துவதற்கான வசதிகள் இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். இச்செயற்பாடுகள் வரவேற்கத்தக்கதாகும் பாராட்டப்படவேண்டியதுமாகும்.

எம்மிடையே வாழும் பல பெண்கள் தமது திறமையினால் கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வீடு வாசல்கள் சொத்துக்கள் என்று சேர்த்துள்ளார்கள். இந்தவகையில் ஏனைய பெண்களும் தமது திறமைகளை வெளிக்கொண்டுவர வேண்டியதும் அவசியமாகும் - எனவும் குறிப்பிட்டார்.

மற்றும் வலி. வடக்கு பிரதேச செயலர் கலாநிதி க.குணராசா, கிராம அலுவலர் திருமதி மா.மதிவதனன், ம.பத்மநாதன், இ.சிவநாயகம், வண. பிதா கிங்ஸ்லி சுரேந்திரன், தி.வரதவாணி, இ.இரமணதாஸ் ஆகியோரும உரையாற்றினர். (ம-86)

# டிராக்டர் சக்கரத்தில் சிக்கி அதன் சாரதி படுகாயம்!

யாழ்ப்பாணம்,மார்ச்11

மணல் ஏற்றிவந்த டிராக்டரில் இருந்து விழுந்த டிராக்டர் சாரதி சக்கரத்துக்குள் அகப்பட்டு வலது கால் முறிந்து படுகாயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் கோப்பாயைச் சேர்ந்த வரான இரத்தினம் ரஞ்சன் (வயது40) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

கச்சாய் கரையோரப் பகுதியிலிருந்து மணல் ஏற்றிக்கொண்டு திரும்பியவேளை ஓரிடத்தில் டிராக்டரை நிறுத்திவிட்டு கீழே இறங்க இவர் முற்பட்ட வேளை தடக்கிக் கீழே விழுந்து டிராக்டரின் பின் சக்கரத்துக்குள் அகப்பட்டுக் காயமடைந்தார்.

டிராக்டர் சரியானமுறையில் நிறுத்தப் படாததினாலேயே நகர்ந்து விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்தவர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-15)

# மட்டக்களப்பிலிருந்து வெளியேறிய ஆசிரியர்கள் யாழ்.வந்து சேர்ந்தனர்

யாழ்ப்பாணம்,மார்ச்11

கிழக்கு மாகாணத்தில் கடந்த சிலநாள்களாக நிலவிவரும் பதற்றமான சூழலைத் தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் பணிபுரிந்த யாழ். மாவட்ட ஆசிரியர்கள், பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் யாழ்ப்பாணம் திரும்பியுள்ளனர்.

இவ்வாறு யாழ்ப்பாணம் திரும்பிய ஆசிரியர்கள், யாழ்ப்பாண வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனைச் சந்தித்து மட்டக்களப்பு மாவட்டத்தில் இயல்புநிலை திரும்பும் வரை யாழ். மாவட்ட பாடசாலைகளில் பணிபுரிய அனுமதி தரும்படி கேட்டு வருகின்றனர்.

இந்நிலை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் "தற்போதைய சூழலில் என்னால் எதுவித முடிவுகளும் உடனடியாக எடுக்கமுடியாது. நான் மாகாணக் கல்விப்பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு நிலைமைகளை எடுத்துக் கூறி இரு வாரங்களின் பின்பு முடிவுகள் கூறுவேன் என என்னிடம் வரும் ஆசிரியர்களிடம் கூறிவருகிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் இருந்து யாழ்ப்பாணம் வருகைதந்த ஆசிரியர்கள் சிலர் கருத்துத் தெரிவிக்கையில், மட்டக்களப்பை விட்டு வெளியேறுங்கள் என்ற அறிவித்தல் கிடைத்த பின்பே தாம் அங்கிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணம் வந்ததாகத் தெரிவித்தனர். (ம-ரி)






சர்வதேச லயன்ஸ் கழக பிராந்திய மாநாடு மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. விருந்தினர்கள் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்திலிருந்து விழா மண்டபத்திற்கு அழைத்துவரப் படுவதையும் விருந்தினர்கள், உறுப்பினர்கள் மேடையில் அஞ்சலி செலுத்து வதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

# வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவுத்திட்டம்

வலிகாமம் தெற்கு,மார்ச்11

இந்தவருடம் இரண்டாம் தவணைக காலத்தில் வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

உலக உணவுத் திட்ட அனுசரணையுடன் வடக்கு - கிழக்கு மாகாண சபைக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்காக நடைமுறைப் படுத்தப்பட உள்ள உணவூட்டல் திட்டத்தின் கீழ் இந்த மதிய உணவு வழங்கப்படவுள்ளது.

இத்திட்டத்தினால் வடக்கில் உள்ள 59 ஆயிரத்து 134 மாணவர்களும், கிழக்கைச் சேர்ந்த 48 ஆயிரத்து 229 மாணவர்களும் பயனடைவர் என்று தெரிவிக்கப்பட்டது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு, வறுமை நிலையில் காணப்படும் தரம ஒன்றுமுதல் தரம் ஒன்பது வரை கல்வி கற்கும் பாடசாலை மாணவர்களை அடிப்படையாகக் கொண்டு இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் வெலிகந்த ஆகிய பிரதேச மாணவர்களுக்கே மதிய போசணம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. போஷாக் கிழந்து கல்வி அடைவுகளில் பின்னடைவை எதிர்நோக்கியுள்ள மாணவர்களுக்கு இப்போஷாக்குணவு வழங்கும் திட்டம் மிகுந்த பயனுள்ளதாக இருக்கும் என்று அதிகாரிகள தெரிவிக்கின்றனர். (ம-152)

# அளவெட்டி பெரிய தம்பிரான் குளத்தை புனரமைக்க கெயர் நடவடிக்கை

அளவெட்டிப் பகுதியிலுள்ள குளங்கள் புனரமைக்கப்படாததால் பெரும் பாதிப்பை எதிர்நோக்கி வந்த அப்பகுதி விவசாயிகளின் நலன் கருதி கெயர் நிறுவனம் அப்பகுதியிலுள்ள பெரிய தம்பிரான் குளத்தைப் புனரமைத்துத் தருவதாக உறுதியளித்துள்ளது.

அளவெட்டியிலுள்ள கிராமிய குளங்கள் தூர்ந்து போயுள்ளதால் அப்பகுதியிலுள்ள விவசாயிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். அப்பகுதி விவசாய சம்மேளனங்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்று 'கெயர்' நிறுவனம் இக்குளங்களைப் பார்வையிட்டு மதிப்பீடு செய்துள்ளது. கடந்த வாரம் 'கெயர்' செயற்றிட்ட இணைப்பாளர் திருமதி ஜோய் ஞானேஸ்வரன், அளவெட்டி பிரதேச கெயர் பிரதிநிதி வை.சுப்பிரமணியம், குளங்கள், கிணறுகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.நிர்மலன் ஆகியோர் விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகள் சகிதம் குளங்களைப் பார்வையிட்டனர்.

இவற்றுள் விவசாயிகளுக்கு அதிக பயன்பாட்டைத் தரக்கூடிய பெரிய தம்பிரான் குளத்தினைப் புனரமைத்துத் தருவதற்கு 'கெயர்' நிறுவனப் பிரதிநிதிகள் இணக்கம் தெரிவித்தனர்.

இக்குளம் புனரமைக்கப்படுவதனூடாக நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகளும் சுமார் 25 வரையான சலவைத் தொழிலாளர்களும் நன்மையடைய உள்ளனர் என்று 'கெயர்' அளவெட்டி பிரதேச பிரதிநிதி தெரிவித்தார்.

மேலும் கடந்த யுத்த காலங்களின் போது சேதமடைந்த விவசாயிகளுக்குப் பெரும் பயனை வழங்கி வந்த 'யாமாக்'' கிணற்றுக்கு மாற்றீடாக இரண்டு குழாய்க் கிணறுகளை அப்பகுதியில் அமைத்துத்தரவும் 'கெயர்' அமைப்பு இணங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-150)

### மானிப்பாய் பரிஷ் சிறந்த லியோ கழகம்

யாழ். மாவட்டத்தின் சிறந்த லியோ கழகமாக மானிப்பாய் பரிஷ் லியோ கழகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. லயன் கழக 306 பி. மாவட்ட ஆளுநர் லயன் டாக்டர் றொகான் பெரேரா மற்றும் அவரது குழுவினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை குடாநாட்டுக்கு விஜயம் செய்த போது இந்த விருது வழங்கப்பட்டது. (ம)

## வலுவிழந்தோர் தொடர்பான ஆய்வு

யாழ்ப்பாணம்,மார்ச்11

வெண்புறா செயற்கை உறுப்புகள் தொழில்நுட்ப நிறுவனம் யாழ். மாவட்டத்தில் வலுவிழந்தவர்கள் தொடர்பான ஆய்வு ஒன்றை மேற்கொண்டு வருகின்றது.

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உதவித்திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கு வசதியாகவே இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் ஊடாக வலுவிழநதோர் குறித்த விவரங்கள் திரட்டப்பட்டு அவற்றின் அடிப்படையில் ஆய்வு நடத்தப்படுமென வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம் தெரிவித்துள்ளது. (ஒ-ரி)

# அழிந்துபோன வனவளம் பற்றிய பூரண விவரம் பெறுவதில் சிக்கல்!

## திணைக்கள அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்11

யாழ்.மாவட்டத்தில் கடந்த கால யுத்தங்களால் அழியுண்ட வனவளம் குறித்த பூரண விவரங்களைப் பெற, உயர் பாதுகாப்பு வலயமும், கண்ணிவெடிகள் புதைக்கப்பட்ட இடங்களும் தடையாக உள்ளன என்று யாழ். மாவட்ட வனத்திணைக்கள அதிகாரி மு.பிரபாகரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது மண்ணின் வனவளம் பெருமளவில் அழிக்கப்பட்டு வருகிறது. இது நீண்டகால நோக்கில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். ஆகவே வனவளத்தை மேம்படுத்த தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும்.

இதேசமயம், வனத்திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் ஆளணிப்பற்றாக்குறையுடனேயே இயங்கி வருகிறது. அலுவலக உதவியாளர், பாதுகாவலர், பகுதிவனவள அலுவலர்கள் போன்ற பதவி வெற்றிடங்கள் நீண்ட காலமாக நிரப்பப்படாமல் உள்ளன. இதனால் வனவளத்தை மேம்படுத்தும் செயற்பாடுகளைத் திருப்திகரமாக மேற்கொள்ள முடியாத நிலையே உள்ளது. என்றார் அவர். (ஓ-ரி)

# கிராமிய நல்லிணக்கக் குழுவின் அனுமதி பெற்றே மாடு வெட்டலாம்

## பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அறிவிப்பு

கொக்குவில்,மார்ச்11

இறைச்சிக்காக மாடுகளை வெட்டுபவர்கள் கிராமிய நல்லிணக்க குழுவின் சம்மதத்தைப் பெறவேண்டும் என்று பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

வேலணைப் பிரதேச செயலருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இறைச்சிக்காக மாடுகளை விற்பவர்கள், பிரதேச செயலரின் அனுசரணையுடன் ஏற்படுத்தப்பட்ட நல்லிணக்க சபையின் சம்மதத்தினைப் பெறவேண்டும்.

அதன் பின்னர் கிராம அலுவலர் ஊடாகப் பிரதேச செயலருக்கு விண்ணப்பித்து அவரது அனுமதியுடனேயே மாடுகளை வெட்டமுடியும் என்றும் உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார். (ம-76)

# சாயி சிந்தனை

## சக்தி மிக்க சப்தங்கள்



ஆங்கிலத்தில் 26 எழுத்துக்கள் உள்ளன. இந்த 26 எழுத்துகளைக் கொண்டு எத்தனையோ பெரிய நூல்கள் எல்லாம் எழுதப்பட்டுள்ளன. வயலினில் நான்கு 'தந்திகள்' உள்ளன. அவற்றை வைத்து எத்தனையோ வகையான மெட்டுகளையும், ராகங்களையும் இசைக்க முடியும். அதே போல் தான் அ,க,ச,ட, த,ப,ய,ஸ என்ற எட்டு அட்சரங்களைக் கொண்டு தொகுக்கப்பட்டவையே வேதங்கள். இப்படி சப்தத்திலிருந்து எழுந்ததால் வேதத்தை "ஸ்ருதி" என அழைக்கிறார்கள். இதற்குக் காதால் கேட்டு அறியப்படக்கூடியது எனவும் பொருள் கொள்ளலாம். 'ரிக்'வேதம் மந்திரவடிவம். மந்திரம் என்றால் என்ன? ஓம் நமோ நாராயணா! ஓம் நமசிவாயா! என்று சொல்வது அல்ல. கேட்டு, மனதில் வாங்கி, நடைமுறைப்படுத்துவது தான் மந்திரம். இந்த மூன்றையும் செய்பவன் மனிதன்.

எண்ணம், சொல், செயல் இம்மூன்றின் ஒருமைப்பாடு அவசியம். இது தான் மந்திரம். மந்திரத்தின் சக்தி அளவற்றது. பிரணவ நாதத்துக்கு சக்தி அதிகம். பிரணவம் எப்படி ஏற்படுகின்றது? அகார, உகார, மகாரம் இணைவதால் பிரணவம் எழுகிறது. அதேபோல ஓம் என்பதற்கு மூன்று எழுத்துக்கள் அ...உ....ம் இப்படி எழுத்துக்கள் இணைவதால் தான் சப்தம் ஏற்படுகிறது. இந்த சப்தமே மந்திரங்களின் அடிப்படை.

*(ஆதாரம்: ப்ரசாந்தி அமிர்தவர்ஷினி)*

# இலங்கையின் பொதுத்தேர்தல் பதிலளிக்க வேண்டிய பொருளாதாரப் போட்டிப் பரீட்சை!

2 தசாப்த கால உள்நாட்டு யுத் தத்தினால் சின்னாபின்னப்பட்டுப் போயுள்ள இலங்கையின் பொருளா தாரத்தை மீளக்கட்டியெழுப்பும் பணி இன்றைய நிலையில் சமா தான நடவடிக்கைகளின் முன்னேற் றத்தில் தங்கியிருப்பதாக சர்வதேச நிதிவழங்கும் நாடுகள் தெரிவித்து விட்டன. அதாவது, கடந்த ஆண்டு டோக்கியோவில் நடைபெற்ற நிதி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் இலங் கைக்கு வழங்குவதெனத் தீர்மானிக் கப்பட்ட 4.5 மில்லியன் அமெரிக்க டொலர்களில் சிதைந்த பொருளா தாரத்தை மீட்கும் பணி பொறுத்து

'அடிவாங்கி அலறிக்கொண் டிருப்பவனை டாக்டரிடம் காண் பித்து பெறும் மருந்தை அடித்தவ னின் தோள்வலியைக் குணப்படுத்த வும் பயன்படுத்தலாமாயினும், வெண்ணெய் திரண்டு வரும்போது தாழியை உடைக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டுமே!'

நிற்கின்றது. இதனை இலங்கை அர சின் கொள்கை அபிவிருத்தி செயற் படுத்துகை அமைச்சு உறுதிசெய்துள் ளது.

அகில இலங்கை அடிப்படையில் மொத்தம் 64 அபிவிருத்தித் திட் டங்கள் இந்த நிதியின்மூலம் நிறை வேற்றுவதற்குக் குறிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் பத்து வரையிலான திட் டங்களே யுத்தத்தினால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்குப் பகுதியில் அடங்குகின்றன. இந்த விவரத்தை வெளியிட்டுள்ள கொள்கை அபிவிருத்தி அமைச்சு, எமக்கு 4.5 மில்லியன் டொலர்கள் உதவி, வர லாற்று முக்கியத்துவம் வாய்ந்த வாய்ப்பு என்றும், இதுபோன்ற வாய்ப்பு மீண் டும் ஒருதடவை எமக்குக் கிடைப்பதரிது என்றும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, வடக்கு - கிழக்கின் அபிவிருத்தித் திட்டங்களைக் கலந்து ரையாடல் ஒன்றின்பின்னர் தீர்மானிக் கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள் ளது. அதாவது, வடக்கு - கிழக்கின் சண்டை காரணமாக அழிவுற்ற பகுதி களைச் சீரமைப்பதைப் பிரதான நோக் கமாகக்கொண்டு வழங்கப்படும் நிதி முழு இலங்கைக்கும் பயன்படுத்தப் படும்.

வடக்கு - கிழக்கின் தமிழர் வாழும் பகுதிகளின் அபிவிருத்தி ஒரு 'கலந் துரையாடல்' நிபந்தனையைப் பொறுத் திருக்கும் என்பதே அரச அறிவிப்பாக இருக்கின்றது.

எவ்வாறாயினும், சமாதான நடவ டிக்கைகளின் முன்னேற்றத்தைப் பொறுத்தே நிதி வழங்கப்படும் என்ற நிலையில் இலங்கையின் பொருளா தாரத்தின் முக்கிய முதுகெலும்பான தனியார் துறை உசாரடைந்துள்ளது. சமாதான நடவடிக்கைகளுக்கு அத் திபாரமாக அமைந்துள்ள ரணில்- பிரபா புரிந்துணர்வு ஒப்பந்தம் இலங்கை அரசியலின் அண்மைக்காலப் போக்கி னால் கேள்விக்குறிமுன் நிறுத்தப்பட் டுள்ளதைக் கருத்திற்கொண்டு தனி யார்துறை களத்தில் குதித்துள்ளது.

(Joint Business Forum) என்னும் கூட்டு வர்த்தக ஒன்றியம் இரு பெரும் கட்சிகளிடமும் அவைகளின் வேலைத்திட்டங்களைச் சமர்ப்பிக்கு மாறு கோரியுள்ளது. முக்கியமாக 21 துறைகளில் இக்கட்சிகள் தமது வேலைத் திட்டங்களைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று அது கேள்விக்கொத்தை வெளியிட்டுள்ளது. மக்கள் தமது வாக்குகளைப் பற்றி முடிவுசெய்ய முன் இவற்றிற்கான பதில் வேண்டும் என்று அது வலியுறுத்தியுமுள்ளது.

சமூக, பொருளாதார, அரசியல் முக் கியத்துவம் வாய்ந்த விடயங்களை உள்ளடக்கியதான கேள்விகள் கேட் கப்பட்டுள்ளன. முக்கியமாக இலங் கையின் பொருளாதார வளர்ச்சியின் முதுகெலும்பாகத் தனியார்துறை கணிக்கப்படுமா? என்ற கேள்வியும், திறந்த பொருளாதாரக்கொள்கை பின்பற்றப்படுமா? அல்லது கலப்புப் பொருளாதாரமா? இறக்குமதிக ளுக்குக் கட்டுப்பாடுகள் இருக்குமா? இலங்கையில் உற்பத்திசெய்யப்ப டும் பொருள்களுக்கு முழுமையான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் போடப் படுமா? பூகோளமயமாக்கல் என்னும் எண்ணக்கருவுக்கு இடமளிக்கப்படுமா? வெளிநாட்டார் நேரடியாக முதலீடு கள் செய்வதுபற்றிய உங்கள் கொள் கைகள் என்ன? ஏற்றுமதியை நோக் கமாகக்கொண்ட பொருள்களின் உற்பத்திகள் ஊக்குவிப்புப் பெறுமா? என்னும் கேள்விகளும் ஜனாதிபதியை நோக்கியும் பிரதமரை நோக்கியும் கேட்கப்பட்டுள்ளன.

விவசாயத்துறை தொடர்பான கொள்கைகள் பற்றியும் விளக்கங்கள் கேட்கப்பட்டுள்ளன. இலங்கையில் உற்பத்திசெய்யப்படக்கூடிய உணவுப் பொருள்கள் கட்டுப்பாடின்றி இறக்கு மதி செய்யப்படுமா? இவைமீது இப் போதிருக்கும் இறக்குமதித் தீர்வை கள் தொடருமா? உரமானியம் தொட ருமா? நெல்லுக்கான உத்தரவாத விலைமுறை தொடர்ந்து கடைப்பிடிக் கப்படுமா? பெருந்தோட்டங்கள் தொடர் பான கொள்கை, மீள் நடுகைக்கான மானியம் வழங்குதல் தொடருமா? என் பன போன்றவற்றினை ஆட்சித் தலை வர்களாக வரும் வாய்ப்புக்கொண்ட தலைவர்கள் தெளிவுபடுத்த வேண்டும்.

மேலும், மீன்பிடித்தொழில் தொடர் பான கொள்கைகள் யாவை? தகரத் திலடைக்கப்பட்ட மீன்களை இறக்கு மதிசெய்வது தொடர்பான கொள்கை என்ன? கடலுணவு வளங்களை அதி கரிப்பதற்கு நீங்கள் மேற்கொள்ளப் போகும் உபாயங்கள் என்ன? நன் னீர் மீன்வளர்ப்புத் தொடர்பான கொள்கைஎன்ன? இறால் வளர்ப்புத் திட்டத்தை விருத்தி செய்வதற்கு எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக் கைகள் யாவை?

தனியார் மயமாக்கல் தொடர்பான உங்கள் கொள்கை என்ன? இலங்கை வங்கி, மக்கள் வங்கி என்பன தனி யார் மயப்படுத்தப்படுமா? ரயில்வே திணைக்களம் தனியார்மயமாக்கப்படுமா?

புதிய பல்கலைக்கழகங்களைத் திறப்பதற்கான உத்தேசங்களுண்டா? தனியார் பல்கலைக் கழகங்கள் திறக் கப்படுவதை அனுமதிப்பீர்களா? இலங் கையின் அனைத்துக் கல்வி நிறு வனங்களிலும் ஆங்கிலக் கல்வியைத் தரமுயர்த்துவதற்குத் தங்களிடமுள்ள நீண்டகால, குறுகியகால நடுத்தர காலத்திட்டங்கள் யாவை?

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் எத்தனைபேர் இருப் பார்கள், எத்தனை பிரதி அமைச்சர் களும் எத்தனை பணித்திட்ட அமைச் சர்களும் இருப்பார்கள்? அமைச்சர்க ளின் உறவினர்கள் அந்தந்த அமைச் சுக்களில் நியமனங்களைப் பெறுவார் களா? தேர்தலில் தோற்ற வேட்பா ளர்கள் தேசியப் பட்டியல் மூலம் எம்பிக் களாக நியமிக்கப்பட்டு பதவிகள் வழங்கப்படுவார்களா?

பல ஆண்டுகளாக எதிர்மறையாக இருக்கும் வர்த்தக நிலுவையை முன் னேற்றுவதற்குத் தங்களிடம் என்ன திட்டங்கள் உள்ளன? முக்கியமாக சமாதானச செயற்றிட்டம் பற்றிக் கேள் விகள் எழுப்பப்பட்டுள்ளன. இப்பொழுது அமுலிலுள்ள போர் நிறுத்த ஒப் பந்தத்தைத் தொடர்ந்து பேணும் நோக் கம் உள்ளதா? போர் நிறுத்த ஒப்பந் தத்தைப் புலிகளுடன் புதிதாக ஏற்படுத் தும் எண்ணம் உள்ளதா? போர் நிறுத்த ஒப்பந்தத்தைச் செயலிழக்கச்செய் யும் எண்ணம் உள்ளதா? நோர்வேயை அனுசரணையாளராகத் தொடர்ந்தும் வைத்திருக்கும் நோக்கம் உள்ளதா? நோர்வே அனுசரணையாளர்களைக் கைவிடுவதாயின் அனுசரணையாளர் களாக வேறு எந்த நாட்டை அழைப் பீர்கள்?

வடக்கு - கிழக்கு பிரச்சினையை என்ன அடிப்படையில் தீர்ப்பதற்கு உடன்படுவீர்கள்? ஒற்றையாட்சி முறை யினுள் சமஷ்டி முறையையும் உள் ளடக்கத்தக்கதான அதிகாரப் பரவ லாக்கத்திற்கு உடன்படுவீர்களா? மாநி லங்களின் ஒன்றியம் என்ற கருத்தை ஏற்றுக்கொள்வீர்களா? இவையாவற் றிற்கும் பதிலாக நிர்வாகப் பரவலாக் கத்தை மட்டும் செய்வதுடன் நின்று விடுவீர்களா? சமச்சீரற்ற அதிகாரப் பரவலாக்கம் மற்றும் உள்ளக சுய நிர்ணய உரிமை என்பவற்றைப் பற்றி ஐ.தே.மு.விளக்கமாகக் கூறுமா?

ஒருவர் தமது வாக்கை அளிப்ப தற்கு முன் இத்தகைய கேள்விகளைத் தன் மனதில் ஆராய்தல் வேண்டும். பின்னர் அளிக்கும் வாக்குகளே சமா தானம் தொடருமா, சண்டை தொட ருமா என்பதைத் தீர்மானிக்கப் போகின் றன? பொருளாதார வளர்ச்சியோ, உட் கட்டுமான உறுதிப்பாடோ அல்லது பொருளாதார வளர்ச்சி மறை எண் ணில் காட்டப்படும் சகாப்தம் மீண்டும் தொடர்வதா? என்பதெல்லாம் இவற் றின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டியவையாயுள்ளன.

அடிவாங்கி அலறிக்கொண்டிருப் பவனை டாக்டரிடம் காண்பித்துப் பெறும் மருந்தை அடித்தவனின் தோள் வலி யைக் குணப்படுத்தவும் பயன்படுத் தலாமாயினும், வெண்ணெய் திரண்டு வரும்போது தாழியை உடைக்கா மல் பார்த்துக்கொள்ளவேண்டுமே! பொரு ளாதாரத்தின் உறுதிப்பாட்டைப் புத்திஜீவி களின் கேள்விகள் உரமாக்க உத வும்.

*நன்றி: தமிழ் உலகம் லண்டன்*

★

# இனி எப்போது வரும் என ஏங்க வைத்த இசை விழா

"இசையால் வசமாகா இதயமெது இறைவனே இசைவடிவம் எனும் போது - தமிழ் இசையால் வசமாகா இதயமெது"

இசைவிழாவின் அரங்கிலே இருந்த அனைவரது இதயங்களும் ஒரே சங் கமிப்பில் இசைமழையில் நனைந்தன. நல்லூர் இளம் கலைஞர் மன்றத்தின் இசை விழா கடந்த மாதம் 21ஆம் திகதி முதல் இம்மாதம் முதலாம் திகதி வரை தொடர்ச்சியாகப் பத்து நாள்கள் இனிது நடந்தேறியுள்ளன. நாதஸ்வர தவில் கச்சேரி, பண்ணிசை, குழுப்




நல்லூர் இளம்கலைஞர் மன்றத்தினர் நடத்திய இசை விழாவின் தொகுப்பு

பாடல், வயலின், புல்லாங்குழல், வீணை, மிருதங்கம் என விழாவின் நிகழ்ச்சி கள் விரிந்திருந்தன. மன்றக்கலா மண் டபம் பத்து நாள்களும் இசை யால் நிறைந்திருந்தது. 'ஆள்கள் எண்ணிக் கையில்' வெறிச்சோடிக் கிடந்தது.

இந்த இசைவிழாவில் பல மூத்த கலைஞர்களோடு வளர்ந்துவரும் இளைய கலைஞர்களுமாக ஏறத்தாள 500 கலைஞர்கள் வரை இந்நிகழ்வில் பங்கேற்று அட்டவணைப்படி இசை வழங்கிச் சிறப்பித்தனர்.

மாலை 4.30 மணிமுதல் இரவு 9.30 மணிவரை இசைவிழா நிகழ்வு கள் நடைபெற்றன. 8ஆம் நாள் நிகழ் வுகள் மட்டும் சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளுக்கு ஆராதனை செய்யும் முகமாக காலை, மாலை என இரு அமர்வுகளில் நடைபெற்றன.

இதனிடையே இளங்கலைஞர் மன் றத்தினர் இளைய கலைஞர்களை ஊக்குவிப்பதற்காக இசைப்போட்டி களை நடத்தினர். இதில் வெற்றிபெற்ற முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங் களுக்கான மாணவர்களுக்கு முறையே தங்கப்பதக்கங்கள், கேடயங்கள், புத்தகங்கள் என்பன பரிசாக வழங் கப்பட்டன.

இந்தப் பரிசளிப்பு நிகழ்வில் தலைமையுரையாற்றிய கவிஞர் சோ.பத்மநாதன் குறிப்பிடுகையில், நாம் வாய்ப்பாட்டு, வயலின், புல் லாங்குழல், மிருதங்கம், பரதநாட்டி யம் போன்றவற்றிற்கு விண்ணப்பங் கள் கோரியிருந்தோம். ஆனால், வாய்ப் பாட்டு (கர்நாடக சங்கீதம்) போட் டியை மட்டுமே எம்மால் நடத்த முடிந் தது. ஏனெனில், மற்றைய போட்டிக ளுக்கு போதிய விண்ணப்பங்கள் எமக்கு வந்து சேரவில்லை. இத்துறைசார்ந்த ஆசிரியர்களை நாடி அவர்கள் மூல மாகவும் விண்ணப்பங்களைக் கோரி னோம். அதிலும் அதே நிலைதான். பரதநாட்டியப் போட்டிக்கு விண்ணப் பித்தவர்கள் தொகை இரண்டு பேர் மட்டுமே என்று கவலையடைந்தார். தொடர்ந்து அவர் பேசுகையில், பல மூத்த கலைஞர்கள் இசைவிழாவில் இசைவடிவங்களை அளிக்கின்ற போதிலும் - இத்துறைசார்ந்த இளைய கலைஞர்களை இந்த அரங்கிலே காணமுடியவில்லை.

செவிஞானம் (கேள்வி ஞானம்) என்பது ஒவ்வொரு இசைக்கலைஞ னுக்கும் முக்கியமானது. செவிஞான மின்றி எவ்வளவு தான் புத்தகப் படிப்பைப் படித்தாலும் அவர்கள் இசை யிலே முழுமைபெற்றுவிடமுடியாது.

எனவே, வளர்ந்து வரும் இளைய கலைஞர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டு மூத்த கலைஞர்களிடம் இருந்து இசை நுணுக்கங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும் - என்றார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந் தினராகக் கலந்துகொண்ட யாழ்ப் பாண வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் உரையாற்றும் போது கூறியதாவது:-

யாழ். மாவட்டத்தில் இசைத்துறை யில் பலர் பட்டங்களை தமதாக்கிய போதிலும் அரங்க நிகழ்வுகளில் தமது திறமையினை வெளிப்படுத்த முடியாதுள்ளனர். எனவே, அவர்கள் இங்குவந்து இந்த இசைநிகழ்வு களைப் பார்த்துப் பயனுறவேண்டும். இசைத்துறை சார்ந்தவர்கள் சமூ கத்தினதும் இசை ஆர்வலர்களின தும் ஆவலைப் பூர்த்திசெய்ய வேண் டும் - என்றார்.

9ஆம், 10ஆம் நாள் நிகழ்வுக ளில் மாலை 7.00 மணிக்குப் பின்பு மண்டபம் இசை ஆர்வலர்களை குறிப்பிடத்தக்களவு கொண்டிருந்தது. இளம் கலைஞர் மன்ற மாணவர்களின் நிகழ்வுகளோடு பரதநாட்டிய நிகழ் வுகளும் இடம்பெற்றன. 9ஆம் நாளன்று திருமதி சாந்தினி சிவனே சன் அவர்களின் நெறியாள்கையில் கொக்குவில் கலாபவன் மாணவிகளின் பரதநாட்டிய நிகழ்வு இடம்பெற்றது. 10ஆம் நாளன்று வழமைபோன்று மங் கள இசை, புல்லாங்குழல், வாய்ப் பாட்டுப் போட்டியில் பிரிவு ரீதியாக முதலாம் இடத்தைப்பெற்ற மாணவர் களின் பாட்டு, மூத்த கலைஞர்களின் பாட்டுக் கச்சேரி மற்றும் திருமதி பத்மினி செல்வேந்திரனின் உரும்பி ராய் கலைக்கோயில் மாணவிகளின் நாட்டியாஞ்சலி நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன.

இறுதிநாள் நிகழ்விலும் மண்ட பம் முழுமை பெற்றிருந்தது. இசை யார்வலர்களுக்கு பல ரசனைகளில் செவி, விழிகளுக்கு நல்விருந்து கிடைத்தது. புஸ்பாஞ்சலி தொடக் கம் ஒவ்வொரு கோர்வைகளும் (நடன உருப்படி) உச்சத்தைத் தொட்டன. நாட் டிய மாணவிகள் பங்கெடுத்த பாத்தி ரங்களுக்கேற்ப ஒவ்வோர் அங்க அபிநயத்திலும் சிறப்பான பாவர ஸத்தை வெளிப்படுத்தினர். நிறை வில் பத்து நாள்களிலும் இசை விழா வில் கலந்து சிறப்பித்த அனைத்துக் கலைஞர்களும் சிறப்புக்குரியவர்கள்; பாராட்டப்படவேண்டியவர்கள். இதற்கு மேலாக இப்படியோர் இசை விழா வினை நடத்தி யாழ்ப்பாணக் கலை ஞர்களை ஒன்று குவித்தமைக்காக இளம் கலைஞர் மன்றத்தினரும் சிறப் பான பாராட்டுதலுக்குரியவர்கள்.

10ஆம் நாள் இரவு 11 மணிய ளவில் அரங்கைவிட்டு வெளியேறும் தறுவாயில் யாழ். இலச்சினையுடன் கூடிய "கலையின்பமே நிலையின்ப மாம்" என பொறிக்கப்பட்ட வாசகம் எனது விழிகளுக்குத்தென்பட்டது. இளங்கலைஞர் மன்றத்தினர் நிலை யான இசையின்பத்தில் எல்லோரை யும் மூழ்கவைத்தனர். அப்போதெல் லாம் அனைவரது மனங்களும் நிச் சயம் குளிர்ந்திருக்கும். மீண்டுமோர் இசைவிழா எப்போது வரும்? என்ற ஆதங்கத்தோடு இறுதிநாள் நிகழ்வு கள் நிறைவடைந்து மண்டபத்திலி ருந்து அனைவரும் விடைபெற்றனர்.

*- சுயர்சன்*



# யாழ்.மறை மாவட்டத்தில் குடும்ப ஆண்டு பிரகடனம்

கொழும்புத்துறை,மார்ச்11

யாழ். மறைமாவட்டத்தில் இந்த ஆண்டு குடும்ப ஆண்டாக ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதனையொட்டி இவ்வாண்டு தமது திருமண வாழ்வில் வெள்ளி விழா, பொன்விழா நிறைவு காணும் தம்பதியர்களுக்கு யாழ். மறை மாவட்ட ரீதியாக விழாக்கள் கொண்டாட ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

செப்ரெம்பர் மாதம் 17ஆம் திகதி சர்வதேச சமாதான தினத்தன்று நடைபெறவுள்ள இவ்விழாவில் யாழ். ஆயர் திருப்பலி நிறைவேற்றுவார்.

வெள்ளிவிழா, பொன்விழாக்களைக் கொண்டாடும் தம்பதியரை ஆயர் சந்தித்து வாழ்த்துக்களையும் ஆசீர்களையும் மேற்படி விழாவில் வழங்கவுள்ளார். (ம-30)

# பிரதமர் 14ஆம் திகதி திருமலைக்கு விஜயம்

திருகோணமலை, மார்ச்11

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இம்மாதம் 14ஆம் திகதியன்று திருகோணமலை மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

அன்றையதினம் அவர் திருகோணமலை தனியார் பஸ் நிலையப் பகுதியில் இடம்பெறும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்திலும் கலந்துகொண்டு உரையாற்றுவார். (ம-187)

### சுதந்திரக் கூட்டமைப்பால் பயன் கிடைக்காது

# ரணிலுக்கு ஆதரவு அளிக்குமாறு முஸ்லிம் கூட்டமைப்பு அறிவுறுத்து

சுதந்திரக் கூட்டமைப்பால் முஸ்லிம் சமூகத்துக்கு எந்த நன்மையும் கிடைக்கப்போவதில்லை. ரணிலுக்கே முஸ்லிம் சமூகம் ஆதரவு அளிக்க வேண்டும் என்று ஐக்கிய முஸ்லிம் மக்கள் கூட்டமைப்பு அறிவுறுத்துகிறது.

தமிழ் மக்களுக்கு நிரந்தரமான தீர்வு காணப்படாவிட்டால், முஸ்லிம்களின் பிரச்சினைக்கு ஒரு போதும் தீர்வு காணமுடியாது. தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வைக்கண்டு அதன் மூலமே முஸ்லிம்களின் பிரச்சினைக்கும் தீர்வைக்காணமுடியும்.

இதனை உணராத சில முஸ்லிம் அரசியல் தலைவர்கள் இனவாத ஜே.வி.பி. - ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சிக் கூட்டுடன் ஒட்டிக்கொண்டுள்ளனர். இவர்கள் தமக்கு எத்தனை அமைச்சர் பதவிகள், எத்தனை இணை அமைச்சர் பதவிகள், எத்தனை அரச நியமனங்கள் என்ற சுயநோக்கிலேயே இந்த இனவாதிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளனர். மற்றப்படி முஸ்லிம் சமூகத்தின் நன்மைக்காக இவர்கள் எந்த ஒப்பந்தமும் செய்துகொள்ளவில்லை. இப்படி வன்மையாகச் சாடுகிறார் ஐக்கிய முஸ்லிம் மக்கள் கூட்டமைப்பின் அரசியல் செயலாளர் எம்.பௌசல்.

ஐக்கிய முஸ்லிம் மக்கள் கூட்டமைப்பினர் நேற்றுமுன்தினம் கொழும்பில் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினர்.

ஐக்கிய முஸ்லிம் மக்கள் கூட்டமைப்பு கொழும்பு, கண்டி, புத்தளம், களுத்துறை, பொலன்நறுவை உட்பட கிழக்கு மாகாணத்திலுமாக எட்டு மாவட்டங்களில் போட்டியிடுகின்றனர்.

முஸ்லிம் மக்களின் வாக்குகள் இனவாதம் பேசும் சுதந்திரக் கூட்டணிக்கு சென்று விடக்கூடாது என்பதாலேயே நாங்கள் இம்முறை போட்டியிடுகிறோம்.

தேசிய ஐக்கிய முன்னணி (நு.ஆ) மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் தாம் ஜனாதிபதியுடன் கூட்டுச்சேர்ந்து முஸ்லிம்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கப்போகின்றார்கள் என்று கூறுகின்றனர்.

பிரதமர் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசு முஸ்லிம்களுக்கு வழங்க மறுத்தது என்ன? ஜனாதிபதி எதை வழங்கப் போகிறார். என்பதை இந்த சுயநலவாத முஸ்லிம் தலைவர்கள் பகிரங்கமாகக் கூறுகின்றார்களா? என்றும் ஐக்கிய முஸ்லிம் மக்கள் கூட்டமைப்பின் அரசியல் செயலாளர் கேள்வி எழுப்பினார்.

முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பேன் எனக் கூறும் ஜனாதிபதி, முஸ்லிம்களின் தனித்தரப்பு பிரதிநிதித்துவத்துக்கு கூட உறுதி கூறவில்லை. முஸ்லிம்களின் தனித் தரப்புக்கு இணங்காவிட்டால் தாம் வெளியே வந்தாவது உள்ளே என்ன பேசப்பட்டது என்பதை முஸ்லிம்களுக்கும் தெரிவிப்பேன் என்றுதான் ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அதிகாரப்பரவலாக்கல் என்ற பேச்சுக்கே இடமில்லை என்கிறார். சிறுபான்மையினருக்கு எதையுமே கொடுக்கமாட்டோம் என வெளிப்படையாகவே கூறும் இவர்களுடன் சமூக உணர்வுகளற்ற முஸ்லிம் தலைவர்கள் கூட்டு வைத்துள்ளனர். மனிதாபிமானமும் சுயகௌரவமும் உள்ள முஸ்லிம்கள் ஜே.வி.பி. - ஸ்ரீலங்கா சுதந்திரக் கூட்டை நிராகரிக்கவேண்டும்.

இருபது வருட யுத்தத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தவர் ரணில் விக்கிரமசிங்க. இங்கு ஏற்பட்டுள்ள தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வல்லமை ஐக்கிய தேசிய முன்னணிக்கே உண்டு. எனவே, மக்கள் சுயநலவாத முஸ்லிம் தலைவர்களின்பின் செல்லாமல் பிரதமர் ரணிலுக்கு ஆதரவளித்து அவரது கரங்களைப் பலப்படுத்தவேண்டும். இப்படி ஐக்கிய முஸ்லிம் மக்கள் கூட்டமைப்பின் அரசியல் செயலாளர் கேட்டுக் கொண்டார். செய்தியாளர் மாநாட்டில் ஐக்கிய முஸ்லிம் மக்கள் கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் நிஸார் மௌலானாவும் கலந்துகொண்டார். (க)

# பாடசாலைக் குணநலன் உள்ளீடுகள்; குறைபாடுகளை நிவர்த்திக்க நடவடிக்கை

வலி.தெற்கு,மார்ச்11

பாடசாலை குணநலன் உள்ளீடுகள் தொடர்பாகக் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதில கோட்டக்கல்வி அலுவலர்களின் பங்களிப்பு அதிகரிக்கப்படவேண்டும் என வடக்கு - கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் சு.மகாலிங்கம் அறிவித்துள்ளார்.

பாடசாலை குணநலன் உள்ளீடுகள் கொள்வனவு செய்தல், விநியோகித்தல் மற்றும் பயன்படுத்தலைக் கண்காணித்தல் தொடர்பான நடவடிக்கைகள் கல்வி வலயங்களில் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுவதாகவும் -

மாகாண மட்ட மேற்பார்வையின் போது பெரும்பாலான பாடசாலைகளில் பலகுறைபாடுகள் இனங்காணப்பட்டுள்ளன எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

குணநல உள்ளீடுகள் தொடர்பான ஆவணங்கள் முறையாகப் பேணப்படாமை, பொருள்கள் கொள்வனவு செய்தல் தொடர்பான நடைமுறைகள் முற்றாகப் பின்பற்றப்படாமை, வகுப்பறைக் கற்பித்தலுக்குப் பொருத்தமில்லாத பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளமை, கொள்வனவு செய்யப்பட்ட பொருள்களை வகுப்பறைகளில் பயன்படுத்தப்படாமை, உள்ளீடுகள் கொள்வனவின்போது கண்காணிப்பு நடவடிக்கைகள் கோட்டக் கல்வி அலுவலர்களால் குறைந்தளவில் மேற்கொள்ளப்பட்டமை போன்ற பல குறைபாடுகள் மாகாணமட்ட மேற்பார்வையின்போது கண்டறியப்பட்டுள்ளதாகவும் -

எனவே, எதிர்காலத்தில் கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் அதிக பங்களிப்புச் செய்து குணநல உள்ளீடு தொடர்பான நடவடிக்கைகளைப் பயனுள்ள வகையில் அமையக் கூடியதாகச் செய்யவேண்டும் என மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ம-152)

# தெற்கில் இருந்துவரும் ஐஸ் கட்டிகளால் உள்ளூரில் உற்பத்தி பாதிப்படைகிறது

### கூட்டுறவுச் சங்க சமாசச் செயலர் தெரிவிப்பு

கரவெட்டி,மார்ச்11

தென்பகுதியில் இருந்து தருவிக்கப்படும் ஐஸ் கட்டிகளினால் யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்படும் ஐஸ் கட்டிகள் விற்பனை பெரும் வீழ்ச்சியடைந்துள்ளதென யாழ். கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசச் செயலாளர் க.சூரியகுமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்களின் நன்மை கருதியே யாழ். குடாநாட்டில் ஐஸ் கட்டித் தொழிற்சாலைகளை பல சிரமங்களின் மத்தியில் ஆரம்பித்தோம். ஆனால், தற்போது மீன் ஏற்றுமதியாளர்கள் தென்னிலங்கை ஐஸ் கட்டிகளைத் தருவிப்பதால் எமது ஐஸ் கட்டி உற்பத்தி வீழ்ச்சியடைந்து வருகின்றது. இது நீடிக்குமானால் மிக விரைவில் எமது ஐஸ் கட்டித் தொழிற்சாலைகள் மூடவேண்டி ஏற்படலாம். மீண்டும் ஓர் இக்கட்டான நிலை ஏற்படின் எமது மீன்கள் சந்தைப்படுத்த முடியாத நிலை ஏற்படும் - என்றார் அவர். (ம-70)

## தவக்காலச் சிந்தனை

### ஏழைகளே இறைவனின் அன்பர்கள்


**இறந்த ஏழையை வானதூதர்கள் ஆபிரகாமின் மடியில் கொண்டுபோய் சேர்த்தார்கள்.** *(லூக். 16:22)*

தன் தேவைக்கு அதிகமாகப்பொருள் சேர்ப்பவன், ஏழையரிடம் இருந்து திருடுபவன் என்கிறார் மகாத்மாகாந்தி. இறைவனது அன்பு ஏழைகளையே சார்ந்திருக்கிறது எனச்சான்று பகர்கின்றது வேதநூல். ஏனென்றால் ஏழையர் இறைவனில் தங்கி வாழ்பவர். செல்வரை அறிவிலி என்கிறது விவிலியம். காரணம் அவர் இறைவனை மறந்து விடுகிறார். பணம் எப்போது பாவமாகிறது என்றால் மனிதன் பகிர மறுக்கின்றபோதுதான்.

பதினாறாம் நாள்

செல்வரும் லாசரும் என்ற உவமையில் லாசர் என்னும் ஏழைக்கு இரங்காததால் செல்வர் இறந்த பின்பு பாதாளத்தில் வதைக்கப்படுகிறார். ஆனால், லாசர் என்னும் ஏழை ஆறுதல் அடைகிறார். பகிர்ந்து அளிப்பவர்கள் மண்ணகத்தை விண்ணகமாக்குகிறார்கள். பணத்தை மட்டுமல்ல எமது பொன்னான நேரத்தை, அன்பு மொழியை ஏன் எமது பிரசன்னத்தைத் தேவையான உள்ளங்களோடு, தேவையான வேளையில் பகிர்ந்தளிக்கும்போது மண்ணகமே விண்ணகமாகிவிடுகிறது. *சுவாமி ஜீவா போல் அ.ம.தி.*

## கல்விச்சாலைக் காட்சிகள்



உரும்பிராய் இந்துக்கல்லூரியின் இல்லமெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றபோது பாடசாலை அதிபர் அ.ஈஸ்வரநாதன் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

*(படம்: கோப்பாய்ச் செய்தியாளர்)*




கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் உரையாற்றுவதையும் ஏனைய விருந்தினர்களையும் படத்தில் காணலாம்.

*(படம்: கைதடிச் செய்தியாளர்)*



யாழ்ப்பாணம் சன்மார்க்க மகாவித்தியாலயத்தில் கட்புல, செவிப்புல சாதன அறைக்கு கணனித்தொகுதி ஒன்றை யாழ்ப்பாணம் ஐ.ஐ.எஸ். நிறுவனம் அன்பளிப்புச் செய்துள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வில் ஐ.ஐ.எஸ்.நிறுவன இயக்குநர் கே.விக்னேஸின் துணைவியார் கணனியை ஆரம்பித்து வைப்பதையும் அருகில் யாழ்.கோட்டக்கல்வி அதிகாரி எஸ்.எஸ். தங்கராசா, ஐ.ஐ.எஸ்.நிறுவன இயக்குநர் கே.விக்னேஸ், பாடசாலை அதிபர் து.நடராசலிங்கம் ஆகியோரையும் படத்தில் காணலாம். (ஐ-ரி)



பருத்தித்துறை வட. இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட தபால் அத்தியட்சகர் எஸ்.சிவராசசிங்கம் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். அதிபர் செல்வி அன்னப்பாக்கிய கனகரத்தினமும் படத்தில் காணப்படுகிறார்.

*(படம்: வடமராட்சிச் செய்தியாளர்)*

## விமான நிலையத்துக்கு பிரதமர் திடீர்விஜயம்!

கொழும்பு,மார்ச்11

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் கட்டுநாயக்க சர்வ தேச விமான நிலையத்துக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

விமான நிலையத்தில் ஆரம்பிக் கப்பட்டுள்ள அபிவிருத்தி நடவடிக்கை களைப் பார்வையிடவே அவர் அங்கு சென்றார்.

விமான நிலைய அபிவிருத்தி நடவடிக்கையின்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து அவர் அங் கிருந்த அதிகாரிகளிடம் கேட்டறிந்து கொண்டார்.

(ஒ-4-ரி)

## மாணவருக்கு போஷாக்குணவு

வலிகாமம்தெற்கு,மார்ச்11

உடுவில் கல்விக் கோட்டத்துக் குட்பட்ட ஏழாலை தெற்கு அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில போஷாக்குணவு வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை நலன்விரும்பி ஒரு வருடைய உதவியுடன் மேற்படி பாட சாலையில் முதலாம், மூன்றாம் தர வகுப்புக்களில் கல்விபயிலும் மாண வர்களுக்கு அதிபர் மு.செல்வஸ்தான தலைமையில் மாதம் இரண்டு முறை போஷாக்குணவு வழங்கப்பட்டு வரு கின்றது.

இப்போஷாக்குணவு வழங்கும் செயன்முறையை, ஏழாலை குடும்ப பாடசாலை அதிபர் நா.சிவசிதம்பர லிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு ஆரம்பித்துவைத்தார்.

(ம-152)

## பதவி உயர்வுகள்

வலி.மேற்கு,மார்ச்11

- சங்கானை பிரதேசச் செயலகத் தில் நான்கு கிராம அலுவலர்கள் தரம்I இற்கு பதவியுயர்வு பெற்றுள்ள னர்.

க.ஸ்ரீகரன், க.விஜயவேல், ஜே.கதிர் காமநாதன், வி.ரி.கதிர்காமநாதன் ஆகியோரே பதவியுயர்வு பெற்றுள்ள கிராம அலுவலர்கள் ஆவர்.

(ஒ-175)

☆ ☆ ☆

தென்மராட்சி,மார்ச்11

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் கடமையாற்றும் மூன்று கிராம அலுவலர்கள் தரம்I கிராம அலுவலர்களாகப் பதவியுயர்வு பெற் றுள்ளனர்.

க.செல்வராசா (கோவிற் குடியி ருப்பு), எஸ்.நடராசமூர்த்தி (விடத்தல் பளை), ச.குமாரசாமி (இராமாவில்) ஆகிய மூன்று கிராம அலுவலர்களே பதவியுயர்வு பெற்றவர்களாவர்.

(ஒ-117)

## அலவாங்கு அடிக்கு இலக்கான நபர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம்,மார்ச்11

அலவாங்கு அடிக்கு இலக்கான குடும்பஸ்தர் தலையில் படுகாயமடைந் தார்.

கைதடி கிழக்கில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் நா.வீரகத்தி (வயது65) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

தனது மகளது கணவரே தன் னைத் தாக்கினார் என்று இவர் பொலீ ஸாரிடம் தெரிவித்துள்ளார்.

படுகாயமடைந்தவர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (ஒ-15-75)

## கலந்துரையாடல்கள்

யாழ்ப்பாணம்,மார்ச்11

வடமாகாண தென்னந் தோட்ட உரிமையாளர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் எதிர்வரும் ஞாயிற் றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கொடிகாமம் அரசினர் பாடசாலையில நடைபெறவுள்ளது.

இதில் சகல தென்னந் தோட்டங் களின் உரிமையாளர்களையும் தவ றாது கலந்துகொள்ளுமாறு வட மாகாண தெங்கு செய்கையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

(ம-4)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,மார்ச்11

யாழ். பல்கலைக்கழக கலை, முகாமைத்துவ, வணிகபீட மாணவர் களுக்கான மீள் பரீட்சைதொடர்பான கலந்துரையாடல் இன்று வியாழக் கிழமை காலை 10 மணிக்கு நடை பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் அனை வரையும் தவறாது கலந்து கொள்ளு மாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-ரி)

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

இதோ பாவியுங்கள்!

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணி தைலம்**

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chilaw.
(Reg.No.:-6382)AR/PR/No.-228

யாழ்.மாவட்ட
ஏக விநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி இல.-021-222-2567

(சி-33907)

(குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 23 - 07 - 1923

மறைவு 11 - 02 - 2004



### திருமதி கோபாலசாமி தேவகுஞ்சரம்

(குஞ்சரமக்கா - வல்வெட்டித்துறை)

*அன்பு மொழி பேசி ஆதரவுக்கரம் நீட்டி*
*பண்புடன் வாழ்ந்த அன்புத் தெய்வமே!*

ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கிறோம்.

நாளை (12.03.2004) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ள வீட்டுக்கிருத்தியத்தில் (அந்தியேட்டி) பங்கேற்று ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன், மதிய போசன நிகழ்விலும் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*ஏ.ஜி.ஏ.ஒழுங்கை,*
*வல்வெட்டித்துறை,*

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார்,
உறவினர்கள்.

*தகவல்:*
*கோ.சற்குணபாலன் (மகன்).* (29484) (21-11-19)

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
ஜோய் றொமின் அன்ரனிற்றா

தோற்றம் 11.06.1973

மறைவு 11.03.1998



எங்கள் முதல் மலராக வந்துதித்த
எங்கள் செல்வ மலரே நீர்
இறைவனின் திருவடியில் என்றும்
மணம் வீசும் மலராக வீற்றிருக்க
பாசத்துடன் இறைவனை
வணங்கி வேண்டுகின்றோம்.

36/1, ஆசீர்வாதப்பர் வீதி,
யாழ்ப்பாணம். (29477)(34)

- குடும்பத்தினர்.

## ஓராண்டை நினைவு கூருவோம்!

மண்ணகம் 30 - 11 - 1924

விண்ணகம் 21 - 02 - 2003



### அமரா கணபதி. கந்தையா

(நாதஸ்வரக் கலைஞர் - சங்கானை)

ஆண்டுத் திதி 11-03-2004

ஆண்டொன்று சென்றதையா
ஆறுதல்தான் அடையவில்லையே ஐயா!
என்றென்றும் இதயத்தில் ஓர்
இடம் உங்களுக்கு உண்டையா!

ஆத்ம சாந்திபெற ஆண்டவனை இறைஞ்சுகிறோம் ஐயா!

*கப்பண்டா கடவை வீதி,*
*7 ஆம் வட்டாரம்,*
*சங்கானை.*

மகன்மார்கள்:
க.அருந்தவராசா (அருண் -கனடா),
க.அரியரத்தினம் (ஹரி - இந்தியா)

(29468)(40-21-11-19)



# COMPUTER EXPRESS
## Institute of Information Technology

இலங்கையில் தமிழ்மொழிமூலம் வெளிவரும் கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் கணனிச் சஞ்சிகையின் இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி முதலாவது கிளை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் புலமைப்பரிசில் திட்டம் - (2) 2004

எமது அனைத்துக் கணனி கற்கை நெறிகளுக்கும் **80%** கட்டணக் குறைப்புச் செய்வதில் பெருமையடைகின்றோம

80% OFF

| பாடநெறிகள் | | பாடநெறிக் கட்டணம் | செலுத்தவேண்டிய கட்டணம் (20%) |
|---|---|---|---|
| ✶ Diploma in Computer Science | - 4 மாதம் | 6000 | 1200 |
| ✶ Honours Diploma in Computer Science | - 4 மாதம் | 8000 | 1600 |
| ✶ Advance Diploma in Computer Science | - 6 மாதம் | 10000 | 2000 |
| ✶ Diploma in Webpage Designing | - 4 மாதம் | 6000 | 1200 |
| ✶ Diploma in Auto CAD 2000 | - 3 மாதம் | 5000 | 1000 |
| ✶ Diploma in Graphics Designing | - 4 மாதம் | 6000 | 1200 |
| ✶ Diploma in Desk Top Publishing | - 4 மாதம் | 5000 | 1000 |
| ✶ Diploma in Hardware Engineering | - 3 மாதம் | 5000 | 1000 |
| ✶ Diploma in Accounting Package | - 3 மாதம் | 7000 | 1400 |

Individual Courses
- ✦ Fox Pro, Pascal
- ✦ C Language/C++
- ✦ Java
- ✦ Internet & E.Mail
- ✦ Microsoft Visual Basic 6.0
- ✦ Adobe Page Maker 6.5
- ✦ Microsoft Office 2000
- ✦ Corel Draw 10

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புகள் நடத்தப்படும். சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ், வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி.

For Kids
★ Kids Program ★ Advanced Kids Program

20ஆம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்து கொள்ளவும்.

90% கழிவு

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் சுன்னாகம் ரோட்டறிக் கழகத்துடன் இணைந்து நடத்திய கணனிக் கருத்தரங்கில் பங்குபற்றிச் சான்றிதழ் பெற்ற அனைவருக்கும்.
90% வீத கட்டணம் குறைப்பு வழங்கப்படும்.

COMPUTER EXPRESS
Institute of Information Technology.

வகுப்புகள் ஆரம்பம்: Batch 2: 13.03.2004
Batch 3: 15.03.2004
Batch 4: 20.03.2004

Maniam's Building
இல. 152/1, சிராம்பையடி வீதி,
யாழ்ப்பாணம்.
(Off Stanly Rd.)
0777 222422/ 0777 278880

(சி-33979) (24-21-11-19)

# பொன் அணிகளின் போர் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச்11

வட்டுக்கோட்டை - யாழ்ப்பாணக் கல்லூரிக் கிரிக்கெட் அணிக்கும் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரிக் கிரிக்கெட் அணிக்கும் இடையேயான "பொன் அணிகளின் போர்' தொடரின் வருடாந்தக் கிரிக்கெட் ஆட்டம் நாளையும், நாளை மறுதினமும் யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

'பொன் அணிகளின் போர்' வரிசையில் 87 ஆவது வருடாந்த ஆட்டம் இதுவாகும். சென்.பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வண.பிதா ஜே.பி.ஞானப்பிரகாசம், யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் நோயல் ஏ.விமலேந்திரன் ஆகியோர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

நாளை காலை 9 மணிக்கும், நாளை மறுதினம் காலை 9.30 மணிக்கும் ஆட்டம் ஆரம்பமாகும். இப்போட்டித் தொடரில் இரு கல்லூரிகளுக்கும் இடையே இதுவரை 86 ஆட்டங்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி 28 தடவைகளும், யாழ்ப்பாணக் கல்லூரி 15 தடவைகளும் வெற்றி பெற்றுள்ளன. 24 போட்டிகள் வெற்றிதோல்வி இன்றி முடிவடைந்துள்ளன. சில ஆட்டங்களின் முடிவுகள் பதிவு செய்யப்படவில்லை.

இவ்வருடம் பாடசாலைகளுக்கு இடையேயான போட்டிகளில் சென்பற்றிகஸ் கல்லூரி தான் பங்குபற்றிய ஆட்டங்களில் 5 இல் வெற்றி பெற்றது. 3 ஆட்டங்கள் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்துள்ளன. அதேவேளை யாழ்ப்பாணக் கல்லூரி அணி பங்குபற்றிய ஆட்டங்களில் இரு போட்டிகளில் வெற்றியும், ஒருபோட்டியில் தோல்வியும் அடைந்தது. 5 போட்டிகள் வெற்றிதோல்வி இன்றி முடிவடைந்துள்ளன.

யாழ்ப்பாணக் கல்லூரி அணி ஜே.நிரோஜன் தலைமையிலும், சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி ஜி.செல்வின் லொய்ட் தலைமையிலும் இந்த ஆண்டு களமிறங்குகின்றன.

கடந்த நான்கு வருடங்களாக பொன் அணிகளின் போர் கிரிக்கெட் ஆட்டத்தில் தொடர்ச்சியாக சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியே வெற்றிபெற்றுள்ளது.

இவ்வருட ஆட்டத்தின் இறுதியில் ஒவ்வொரு துறையிலும் சிறந்துவிளங்கிய வீரர்களும் ஆட்டநாயகனும் தெரிவு செய்யப்பட்டு பெறுமதிவாய்ந்த பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ஒ-5)




**யாழ்ப்பாணக் கல்லூரி அணி**

அமர்ந்திருப்போர் (இ-வ) பி.எல்.மோகன் (பயிற்றுநர்), எஸ்.எம்.திலீபன், ஜே.நிரோஜன் (அணித் தலைவர்), என்.ஏ.விமலேந்திரன் (அதிபர்), என்.எஸ். செந்தூரன் (உபதலைவர்), ஆர்.குகன் (பயிற்றுநர்), ஏ.ஜெயரஞ்சன் (உடற்பயிற்சி பணிப்பாளர்)

நிற்போர் (மத்திய வரிசை) (இ-வ) எஸ்.தனராஜன், ஏ.அகலநாதன், எஸ்.வை.தனுஜன், வி.நிரூபன், கே.பெரியதம்பி, ஜே.தனுசன், எம்.ரமணன்.

நிற்போர் - (பின்வரிசை) (இ-வ) ஆர்.பாலு, கே.உதயகுமார், எம்.ஜென்குமார், ஜே.ஜெயச்சந்திரன். ஜே.செந்தூரன். (ஒ-5)



**சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி**

அமர்ந்திருப்போர் (இ-வ) எஸ்.சகாயராசா (விளையாட்டுப் பொறுப்பாசிரியரும் பயிற்றுனரும்), ஏ.எல்.சுஜீவன், எஸ்.பொல்டன் ஹெரஸ்ரன், செல்வின் லொயிட் (அணித் தலைவர்), வண.பிதா ஸ்ரின் பி.ஞானப்பிரகாசம் (அதிபர்), ஆர்.விநோதன் (உபதலைவர்), ஆர் நிசாந்தன், எ.ஏவின்சன். ஏ.எஸ்.நிஷாந்தன (உதவிப் பயிற்றுநர்), பி.ஜெயக்குமார் (கிரிக்கெட் பொறுப்பாசிரியர்).

நிற்போர்: (இ-வ) வி.ஜே.லூட்சன், எஸ்.ஜெனன்ராஜ், வி.விதுபாலா, ய.ஜெயநதிரன், ஏ.சுரேன், ரி.டியூரன், ரி.சுயாந்தன், ஜே.ஜதீஸ்வரன், பி.பத்மமுரளி. (ஒ-5)

## மெய்வன்மைப் போட்டிகள்

வலி.தெற்கு,மார்ச்11

கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் க.செல்வகுமாரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வலி.தெற்கு பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் கலந்துகொள்வார். (ஒ-5-152-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மார்ச்11

திருநெல்வேலி இந்துக் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அதிபர் க.ஜெயானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம் இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (ஒ-5-ரி)

★ ★ ★

## விளையாட்டு

வடமராட்சி கிழக்கு,மார்11

தாளையடி றோமன் கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் அருட்சகோதரி மரியமலர் யோசவ் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்) சி.நந்தகுமார் கலந்து கொள்வார். (ஒ-5-182)

# உக்கிரமடையும் எல்லைச் சண்டை!

ஜெயஸ்ரீ

அண்மைக்காலமாகக் கிரிக்கெட் ரசிகர்களாலும் அபிமானிகளாலும் பெரிதும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படுவது இந்திய அணிக்கும் பாகிஸ்தான் அணிக்கும் இடையிலான கிரிக்கெட்போட்டியாகும். அந்த இரு நாடுகளின் மக்களைப் பொறுத்தவரையில் இது ஒரு பலப்பரீட்சை. எந்த அணி வென்றாலும் அது வரலாற்று வெற்றியாகவும் எந்த அணி தோற்றாலும் அது வரலாற்றுத் தோல்வியாகவும் கிரிக்கெட்டில் பொறிக்கப்படும்.


நீண்ட இடைவெளிக்குப் பின்பு - அதாவது 14 வருடங்களின் பின்னர் பாகிஸ்தான் மண்ணில் இந்திய அணி 5 ஒரு நாள் போட்டிகளிலும் 3 டெஸ்ட் போட்டிகளிலும் விளையாடவுள்ளது. இதற்காக இந்திய அணி நேற்று பாகிஸ்தானுக்குப் புறப்பட்டுச் சென்றது.

இதனையொட்டி இரு நாடுகளிலும கடந்த ஓரிரு மாதங்களாக நடைபெற்ற கலந்துரையாடல்கள், பேச்சுக்கள், ஆய்வுகள், சோதனைகள் கொஞ்சநஞ்சமல்ல. இவற்றுக்கெல்லாம் மூல காரணம் இரு நாடுகளுக்குமிடையிலான அரசியல் முறுகல்தான். எப்படியோ ஒருவாறாக பாகிஸ்தான் மண்ணில் இந்திய வீரர்கள் கால்பதித்து விட்டார்கள். இனி வெற்றி, தோல்வி என்ற இரு வார்த்தைகளைத் தவிர வேறெதுவும் வீரர்களின் மனதில் இருக்கப் போவதில்லை.

1989ஆம் ஆண்டு தமிழகத்தைச் சேர்ந்த கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந் தலைமையிலான அணி பாகிஸ்தானுக்குச் சென்று வந்ததன் பின்னர் இப்பொழுதுதான் மீண்டும் அங்கு சென்றுள்ளது இந்திய அணி. இதற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளிலும், சார்ஜாவில் நடைபெற்ற போட்டிகளிலும் இரு அணிகளும் சந்தித்துக் கொண்டன. என்றாலும, எதிரி மண்ணில் விளையாடும் 'திரில்' அங்கு கிடைக்கவிலலை இந்திய ரசிகர்களுக்கு

இதுவரை நடந்த போட்டிகளிலெல்லாம் இரு அணி வீரர்களுக்கும் இல்லாத ஓர் ஆவேசம் இரு நாட்டு மக்களுக்கும் இருந்துள்ளதைக் கண்டுள்ளோம். இந்த நிலையில்தான் ,இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஒரு நாள் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை கராச்சியில் நடைபெறவுள்ளது. 56 ஆயிரம் இருக்கைகளைக் கொண்ட கராச்சி மைதானத்தில் பாகிஸ்தான் ரசிகர்கள் மத்தியில் விளையாடுவது இந்திய வீரர்களைப் பொறுத்தவரையில் கடினமான ஒரு விடயம்தான்

வஸீம் அக்ரம், வக்கார் யூனுஸ், மொயின்கான், சயீட் அன்வர் போன்ற ஜம்பவான்கள் இல்லாத பாகிஸ்தான் அணியும் ஒப்பீளவில் பலமானது எனக் கருதப்படும் இந்திய அணியும்தான் மோதப் போகின்றன. இரு அணிகளிலும் பல இளம் புயல்கள் இடம்பெற்றிருப்பதால் நிச்சயமாக போட்டிகள் இரு நாடுகளின் ரசிகர்களுக்கு மட்டுமல்லாது உலகில் உள்ள கிரிக்கெட் ரசிகர்கள் அனைவருக்குமே பெருவிருந்தாக அமையும்.





இந்திய அணியைப் பொறுத்தவரையில் துடுப்பாட்ட வரிசை மிகவும் பலம் மிக்கதாக உள்ளது. அனுபவ வீரர்கள் நால்வரும் இளம் வீரர்கள் நால் வரும் துடுப்பாட்டத்துக்கு வலுச் சேர்க்கவுள்ளனர். சச்சின் டெண்டுல்கர், சௌரவ கங்குலி, ராகுல்ரா விட், வி.வி.எஸ். லக்ஸ்மன், வரேந்தர் ஷேவாக், முகமட்கைவ், ஹேமங பதானி, யுவராஜ் சிங் ஆகியோர் துடுப்பாட்ட விசை அரண்கள் இதே போனறு சஹீர் கான், ஆஷிஸ் நெஸ்ரா, இர்பான் பதான், எல்.பாலாஜி, முரளி கார்த்திக், ரமேஸ் பவர் போன்றோர பந்து வீச்சில் பலம் சேர்க்கவுள்ளனர்.பாகிஸ்தான் அணியைப் பொறுத்தவரையில் பந்து வீச்சு வரிசை மிகவும் பலம் மிக்கதாகவுள்ளது. சொகைப் அக்தர், முகமட்சமி, அப்துர்ரஸாக், சக்லைன் முஷ்டக், சயிட் அவ்ரிடி, சொகைப்மாலிக் ஆகியோர் மிகவும் துல்லியமாகப் பந்து வீசக் கூடியவர்கள். அதேபோன்று துடுப்பாட்டத்திலும் இன்சமாம் உல்ஹக், யூசுப் யொகானா, யூனுஸ்கான் போன்றவர்களைக் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. எல்லாவற்றுக்கும் மேலாக சொந்த மண்ணில் தமது ரசிகர்களின ஆதரவுக்கு மத்தியில் அவர்கள் விளையாடவுள்ளமை பாகிஸ்தான் அணிககுப் பெரும் பலமாகும்.

எப்படியாயினும் கிரிக்கெட் ரசிகர்களுக்குப் பெரும் கொண்டாட்டம்தான். 1989ஆம் ஆண்டு தமிழக வீரர் ஸ்ரீகாந் தலைமையில் சென்ற இந்திய அணி டெஸ்ட் போட்டியைச் சமப்படுத்திய போதிலும் ஒரு நாள் போட்டியில் தோல்வியைச் சந்தித்தது. இதனால் ஸ்ரீகாந்தின் தலைமைப் பதவியும் பறிபோனது. ஆனால், 14 ஆண்டுகளுக்குப் பின்னர் சௌரவ்கங்குலி தலைமையிலான அணியில் தமிழகத்தைச் சேர்ந்த 3 வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். தமிழக வீரர் தலைமையிலான அணி அன்று சந்தித்த தோல்விக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் தற்போதைய அணி போட்டியில் வெற்றியீட்டுமா? பொறுத்திருந்து பார்ப்போம்.

# ஆளுமையும் நிர்வாகத் திறனும் கொண்டவன் விளையாட்டு வீரன்

வலி.வடக்கு,மார்ச்.11

விளையாட்டு வீரன் சிறந்த ஆளுமையும் நிர்வாகத் திறமையும் கொண்டவனாக இருப்பதை நாம் காணமுடியும். அரச, தனியார் துறைகளில் உள்ளவர்களில் இருந்து இதனை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

மேற்கண்டவாறு யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் குறிப்பிட்டார்.

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான தடகள விளையாட்டுப் போட்டி அரியாலை கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி சு.தெய்வேந்திரம் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய யாழ். அரச அதிபர் தெரிவித்ததாவது:-

பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் இடம்பெறும் விளையாட்டுப் போட்டிகளில் பொதுவாக நான் கலந்துகொள்வதில்லை. ஆனால், நானும் இப்பகுதியைச் சேர்ந்தவன் என்ற வகையிலேயே இந்த நிகழ்வில் கலந்துகொண்டுள்ளேன்.

இங்கு இடம்பெற்ற விளையாட்டுப் போட்டியின் தரத்தைக்கொண்டு ஏனைய இடங்களின் விளையாட்டுப் போட்டிகளைப் பார்வையிட வேண்டிய தேவை இல்லை. இங்கு இடம்பெற்ற போட்டிகளில் கலந்துகொண்ட வீர வீராங்கனைகள் மிகவும் பின் தங்கிள்ளார்கள்.

சுமார் பதினொரு வருடங்களுக்கு முன்னர் மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் இடம்பெற்ற விளையாட்டுப் போட்டிக்குச் சென்றிருநதேன். அங்கு போட்டிகளில் கலந்துகொண்ட வீர, வீராங்கனைகள் மிகவும் முன்னேற்றகரமான முறையில் போட்டிகளில் கலந்துகொண்டார்கள்.

விளையாட்டுப் போட்டிகள் மூலம் தேசிய மட்டம் வரை செல்லக் கூடிய வசதிகள் உண்டு. யாழ். குடாநாட்டில் இன்று அனைத்துப் பிரதேச செயலகங்களுக்கும் விளையாட்டு உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். இத்துடன் துறைசார்ந்த பயிற்றுனர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

பாடசாலைகளில் கல்வியை முடித்து வெளியேறும் மாணவர்கள் தமது விளையாட்டுப் பயிற்சிகளைத் தமது பகுதியில் உள்ள கழகங்களுடன் இணைவதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும். இவ்விளையாட்டுப் போட்டியில் கலந்துகொண்டு பரிசில் பெற்றவர்கள் மட்டுமல்ல பெறாதவர்களும்கூட முக்கியத்துவம் பெறுகின்றார்கள்.

திறமை உடையவர்களை இனம் கண்டு அவர்களை வெளிக்கொண்டு வரவேண்டியது விளையாட்டு உத்தியோகத்தர்களினதும், பயிற்றுவிப்பாளர்களினதும் கடமையாகும்.

நல்லூர்ப் பிரதேச செயலாளர் பிரிவில் பல முன்னணிப் பாடசாலைகள் இருக்கின்றன. விளையாட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் ஆசிரியர்கள் இருக்கின்ற போதிலும் கூட சர்வதேச தரத்துடன் ஒப்பிடும் போது பின் தங்கிய நிலையிலேயே இருக்கின்றோம். இத்தகைய நிலைமை ஏன் என்பது தெரியிவில்லை.

விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்ட வீராங்கனைகளின் உடைகளை அவதானிக்கும் போது சுற்றுலாச் செல்வதற்கு அணியும் உடையைப் போன்று உள்ளது.

கழகங்களிடையே விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்வதற்கான உற்சாகம் காணப்படவில்லை. இத்தகைய பின்தங்கிய நிலையில் இருந்து மீளக்கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு விளையாட்டு உத்தியோகத்தரினதும் விளையாட்டுக் கழகங்களுடையதும் பொறுப்பு எனவும் குறிப்பிட்டார்.

யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி றோகான் இராஜசிங்கம் உரையாற்றும் போது கூறியதாவது:-

தனியார் கல்வி நிலையங்களில் எட்டு மணித்தியாலயம் இருந்து பெறும் கல்வியை மைதானத்தில் ஒன்றரை மணித்தியாலத்தில் பெற்றுக்கொள்ள முடியும். இன்றைய போட்டிகளில் அதிகமானவர்கள் கலந்துகொள்ளாமைக்குக் காரணம் ஞாயிற்றுக்கிழமை என்ற வகையில் தனியார் கல்வி நிலையங்களுக்குச் சென்றதே ஆகும்.

பயிற்சிகளைப் பெறாது போட்டிகளில் கலந்துகொள்ளும் நிலைமை எதிர்காலத்தில் மாற்றப்பட வேண்டும். பயிற்சிகளைப் பெறுவதன் மூலம் சிறந்த பெறுபேறுகளை நாம் பெற்றுக்கொள்ளவும் வாய்ப்புகள் ஏற்படும.

தற்போது சிறுவயதிலேயே தமது திறமைகளை வெளிக்காட்டுபவர்களை இனம்கண்டு அவர்களுக்கான பயிற்சிகளை அளித்து வருகின்றோம். இந்த வகையில் நான்கு பேர் தற்போது தெரிவு செய்யப்பட்டு பயிற்சிகளைப் பெற்று வருகின்றார்கள். இத்திட்டத்தில் உரியவர்கள் தமது திறமைகளை வெளிக்காட்டி இணைய வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

மற்றும் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அதிபர் வி.மாணிக்கம் விளையாட்டு உத்தியோகத்தர் சொமிந்தன் ஆகியோரும் உரையாற்றினார்கள். (ம-86)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஜப்பான் Sony T.V. 9500/=, நஷனல் JII டெக் என்பன விற்பனைக்குண்டு. 396, நாவலர் வீதி, கைலாய பிள்ளையார் கோவிலடி (முன்னைய உதயன் பணிமனை ஒழுங்கை), யாழ்ப்பாணம். தினமும் மாலை 6.00 மணிக்குப் பின் தொடர்புகொள்ளவும்.(29512)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. சுத்தஞ்செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். சுத்தஞ்செய்யப்பட்டது 1Kg 200/=. தொடர்பு: விஜயகுமார், குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.(29458)

## புறொயிலர் குஞ்சுகள்

21.03.2004ஞாயிற்றுக்கிழமை நல்ல இன புறொயிலர் குஞ்சுகள் பெற்றுக்கொள்ளலாம்.முன்கூட்டியே பதிவுசெய்யவும். 100 குஞ்சுகளுக்கு மேல் பெற்றுக்கொள்பவர்களுக்கு நேரில் வந்து விநியோகிக்கப்படும். தொடர்பு: பாலா, றக்கா வீதி, சுண்டுக்குளி. T.P..: 222 - 6875 (29472)

## கார் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Toyota Corono 14-PS CLAC Full Option விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777-570098. (29494)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1969 இல் பிறந்த, அச்சுவினி, பட்டதாரி ஆசிரியைக்கு அரச உத்தியோகமுள்ள பொருத்தமான மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு:- விளம்பர இல.: 2192, மே/பா உதயன். (29485)

## அபூர்வ ஜோதிடம்

இந்திய ஆய்வில் புதிதாக கண்டறியப்பட்ட சித்த மருந்தியலில் தீராத கொடிய நோய் குணப்படல், அதிர்ஷ்ட பலன் பெறல் சனி, ஞாயிறு காலை 9.30 - பிற்பகல் 2.00 வரை. சேச் முன் லேன், முதலி கோயிலடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். (29505)

## தேவை

கீழ்க்காணும் பதவிகளுக்கு ஆள் தேவை.

- கணனி இயக்குநர்
- தொலைபேசி இயக்குநர்
- நிர்வாக உத்தியோகத்தர்
- பயிலுநர்

தொடர்பு:

**ஆனந்தி**
கே.கே.எஸ்.வீதி.
துர்க்காபுரம். தெல்லிப்பழை.
T.P.: 222 5825
(29506)(21-26-1913)

## துயர் பகிர்கின்றோம்



*எமது கல்லூரியில் பல ஆண்டுகாலம் ஆசிரியராகவும் பின்னர் உபஅதிபராகவும் பிரதி அதிபராகவும் சிறந்த பணியாற்றி ஓய்வுபெற்றவரான*

**க.வை.வியாகேசர்**

அவர்கள் 10-03-2004இல் காலமாகியதையிட்டு நாங்கள மிகவும் துயரமடைகின்றோம். அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 16-07-1929
மறைவு 10-03-2004

- கல்லூரிச் சமூகத்தினர்,
யா/அத்தியார் இந்துக் கல்லூரி,
நீர்வேலி. (26-21-13-19)
(29518)

## தென்மராட்சி வலய மாணவர்களின் ஆக்கப்பொருள் கண்காட்சி

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களின் ஆக்கப்பொருள் கண்காட்சி வலயக் கல்வி அலுவலகத்தினால் நடத்தப்படவுள்ளது.

கண்காட்சி பாடசாலை மட்டத்திலும், வலய மட்டத்திலும் நடத்தப்படும். பாடசாலை மட்டத்தில் முதலிடங்களைப் பெறும் ஆக்கங்கள் வலய மட்டக் கண்காட்சியில் வைக்கப்பட்டு சிறந்த ஆக்கங்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

பாடசாலை மட்டக் கண்காட்சிகள இரண்டாம் தவணை ஆரம்பத்திலும் வலய மட்டக் கண்காட்சி இரண்டாம் தவணை இறுதியிலும் நடத்தப்படவுள்ளன.

தரம் 1 முதல் தரம் 5 வரை ஆரம்பப் பிரிவாகவும் தரம் 6முதல் 8 வரை கனிஷ்ட இடைநிலைப் பிரிவாகவும் தரம் 9 முதல் 11 வரை சிரேஷ்ட இடைநிலைப் பிரிவாகவும் தரம் 12, 13 ஆகியவை உயர்பிரிவாகவும் கணகாட்சிக்கான ஆக்கங்களை சமர்ப்பிக்கலாமென வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ம-8-117)

## சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வு

வடமராட்சி,மார்ச்11

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வில நாளை மு.ப. 10.30 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறும்.

## வீடு விற்பனைக்கு

நாயன்மார்கட்டு, செம்மணி, பிரதான வீதியில் 6 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
077 6127628
077 6256237
(29493)(36)

## வெளிவந்துவிட்டது

தரம் 5 புலமைப்பரிசில் 2004 பரீட்சைக்கான

மொழிவளம் - இ.க.சிவஞானசுந்தரம் M.A.
கட்டுரைப்பேழை - இ.க.சிவஞானசுந்தரம் M.A.
தமிழ் (புலமைக்கானது) - இ.க.சிவஞானசுந்தரம் M.A.

(34-21-19) (29520)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை அதிபர் **திரு.இ.குணநாதன்** அவர்களது அன்பு மாமனாரும் எமது பாடசாலையில் பல வருடகாலமாக ஆசிரியராகவும் உப அதிபராகவும் கடமையாற்றியவருமான நீர்வேலி மத்தியைச் சேர்ந்த

**க.வை.வியாகேசர்**

*அவர்கள் கடந்த் 10.03.2004 இல் இயற்கையெய்தி விட்டார். அவரது மறைவு ஈடுசெய்யமுடியாதது. அன்னாருக்கு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்துக் கொள்வ துடன், அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

ஆசிரியர் கழகம்.
யா/அத்தியார் இந்துக் கல்லூரி.
(29517)(34-21-19-13)

## மரண அறிவித்தல்

### கந்தையா வைத்திலிங்கம் வியாகேசர்

*(இளைப்பாறிய உப அதிபர், யா/அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி)*



சாவகச்சேரி, பெரிய மாவடியைப் பிறப்பிடமாகவும் நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா வைத்திலிங்கம் வியாகேசர் அவர்கள் 10.03.2004 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்றவர்களான திருமதி நாகரத்தினம், திருமதி இராசேஸ்வரி (ஆசிரியைகள்) ஆகியோரது அன்புக் கணவரும் நாகரத்தினம், திருமதி பங்கஜவல்லி குணநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி ரஞ்சிதமலர் நாகரத்தினம், இ.குணநாதன் (அதிபர், யா/அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி) ஆகியோரின் பாசமிகு மாமனும் இரத்தினரூபன் (ஹொலண்ட்), திருமதி விஜிதா சத்தியசீலன் (புதுக்குடியிருப்பு), மயூரன் (பெல்சியம்), நிரஞ்சனா (பெல்சியம்), கஜன் (மாவீரர்), நிரூபன் (மாணவன், யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), சர்மிலன் (மாணவன், யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), நிரோஜன் (மாணவன், யா/இந்துக் கல்லூரி), நிஸாந்தி (மாணவி, யா/அத்தியார் இந்துக் கல்லூரி), நிமலன்(மாணவன், யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்) ஆகியோரின் அன்புப் பேரனும் டிரூஜன் (ஹொலண்ட்), இந்துஜன் (புதுக்குடியிருப்பு) ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2004) வியாழன் ந.ப. 12 மணியளவில் நீர்வேலி மத்தியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நீர்வேலி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நீர்வேலி மத்தி,*
*நீர்வேலி.* (29516)(34-21-13-19)

தகவல்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.




நீதிக்கு இது ஒரு போராட்டம். இதை நிச்சயம் தமிழினம் வரவேற்கும்



முழுமையான அர்ப்பணிப்புடன் செயற்படும் தலைவன்

தனிப்பட்ட சொந்தப் பொறுப்புக்களை ஒதுக்கிவிட்டு தமிழ் இனத்தின் தன்னாட்சி உரிமையை வென்றெடுப்பதை முழு நோக்காகக் கொண்டு செயற்படும் தலைவன்.



முத்துலிங்கம்

4 வீ. ஆனந்தசங்கரி (தலைவர் - தமிழர் விடுதலைக் கூட்டணி) 10

தலைமையிலான

சுயேச்சைக் குழு 01

முழுமையான ஆதரவளித்துஇவ்வணியை வெல்ல வைப்போம்.

அறிவிப்பு: எக்காரணங்கொண்டும் எனது தலைமையிலான சுயேச்சைக்குழு 01 இத்தேர்தலில் இருந்து விலகிக்கொள்ளாது என்பதை உறுதியாகத் தெரிவிக்கின்றேன். வீண் வதந்திகளை தயவுசெய்து நம்பவேண்டாம்.

# உங்கள் உணர்வை உலகம் உணரும் வகையில் எதிர்வரும் தேர்தலில் வாக்களியுங்கள்!

## தமிழினத்துக்கு மாவை சேனாதிராஜா அழைப்பு

காரைநகர்,மார்ச்11

ஈழத்தமிழினத்தின் முடிவை உலகுக்கு உணர்த்த நாடாளுமன்றத் தேர்தலைப் பயன்படுத்துங்கள்.

- இவ்வாறு யாழ். மாவட்ட தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு வேட்பாளர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரசாரக்கூட்டம் காரைநகர் சிவகாமி அம்மன் ஆலயமுன்றிலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதில் தொடர்ந்து உரையாற்றிய மாவை சேனாதிராஜா தெரிவித்ததாவது:-



இந்த நாட்டில் 30 ஆண்டுகள் ஜனநாயக வழிகளிலும் இருபது ஆண்டுகள் ஆயுதப் போராட்ட வழிகளிலும் தமிழ்மக்களுடைய விடுதலைக்கான போராட்டங்கள் நடைபெற்றன. இதன் காரணமாக இந்த நாட்டினுடைய இனப்பிரச்சினையைத் தமிழீழ விடுதலைப் புலிகளுடன்தான் பேசித்தீர்க்க வேண்டுமெனக் கடந்த தேர்தலில் தமிழ்மக்கள் எமக்கு வாக்களித்து ஆணை தந்தனர். அதேசமயம் ரணில் விக்கிரசிங்கவும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசித் தான் இந்நாட்டினுடைய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதாகக் கூறியபோது:- சிங்கள மக்கள் பெரும்பான்மையாக அவருக்கு வாக்களித்தார்கள்.

ஆகவே, தமிழ்தேசத்திலும் சிங்கள தேசத்திலும் விடுதலைப் புலிகளுடன் பேசித்தான் இந்த நாட்டிலுள்ள இனப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்று மக்கள் ஒரே மாதிரியாக தீர்மானித்தனர். இதன் அடிப்படையிலேயே ரணில்விக்கிரமசிங்கவும் விடுதலைப் புலிகளும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக்கொண்டனர்.

இதற்கு முன்னர் சிங்கள அரசுகளும், வெளிநாடுகளும் எங்களுடைய போராட்டத்தைப் பயங்கரவாதம் என வர்ணித்தன. கடந்த தேர்தலில் கிடைத்த மக்கள் ஆணை காரணமாகவே தமிழ்த் தேசத்தின் ஆயுதப் போராட்டம் அங்கீகரிக்கப்பட்டது. இதன அடிப்படையில் இரண்டு ஆண்டுகள் நிலைத்து நிற்கின்ற யுத்தநிறுத்தம் ஏற்பட்டது.

வடக்கு - கிழக்குத் தமிழர் தாயகத்தில் சுமார் 70 சதவீத நிலப்பரப்பு தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. ஆனாலும் புலிகள் போர் விரும்பிகள் அல்லர். இந்தத் தேசம் முழுவதையும் ஆள்வதற்குப் போராடுபவர்கள் அல்லர்.

தந்தை செல்வநாயகமாக இருந்தாலும் சரி, தம்பி பிரபாகரனாக இருந்தாலும் சரி எங்கள் இலட்சியம் இலங்கை முழுவதையும் ஆளுவதாக ஒருபோதும் இருக்கவில்லை. எங்கள் சொந்த மண்ணில் - எங்கள் தாயகத்தில் - வடக்கு - கிழக்கு மாகாணத்தில் - இழந்த சுதந்திரத்தை மீட்டு எங்களுடைய சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் எங்கள் மண்ணை ஆளவேண்டும் என்றே நாம் போராடி வருகின்றோம்.

இதற்கு மாறாக பேரினவாதிகள் இந்த நாடு முழுவதையும் ஒற்றை ஆட்சிமுறையில் பௌத்த சிங்கள சித்தாந்தத்தின் கீழ் எமது உரிமைகளை மறுத்து, எம்மை அடிமைப்படுத்தி ஆட்சி நடத்தவேண்டும் என்று பேராசை கொண்டிருக்கிறார்கள். அதற்கேற்பவே அவர்கள் இராணுவத்தை உருவாக்கி எமது மண்ணை ஆக்கிரமித்துள்ளார்கள்.

இந்த நிலையில் முழுஉலகமும் எங்களுடைய தீர்ப்பினை எதிர்நோக்கி இருக்கின்றது. ஆகவே, தமிழ்மக்கள் ஒட்டுமொத்தமாக தமிழ்தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து மீண்டும் ஒருமுறை ஆணைவழங்க வேண்டும் என்றார் அவர். (ஒ-72)

# பொலீஸ் அதிகாரிக்கும் 'மனம் என்று ஒன்று...

## அதனால் அவர் கொண்ட கவலை இது!

தேர்தல் சுவரொட்டிகளை அகற்றும பணி தொடர்பாக பொலீஸ் அதிகாரி ஒருவருக்கு வித்தியாசமான கவலை ஏற்பட்டது.

பதுளை மாவட்ட பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஒருவருக்கு இந்தக் கவலை உருவானது. பொது இடங்களில் ஒட்டப்பட்ட தேர்தல் பிரசார சுவரொட்டிகளை அகற்றுமாறு இவருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டது. அவர் தனக்குக் கீழ்ப் பணியாற்றும பொலீஸார் மூலம் பிரசார சுவரொட்டிகள் மீது தார் அல்லது கழிவு எண்ணெய் பூசி அழிபித்தார். அப்போது தான் அவருக்கு கவலை தோன்றியது.

தேர்தலில் வேட்பாளர்களாக கற்றறிந்த அறிஞர்கள் சிலரும் போட்டியிடுகின்றார்கள். அவர்களுக்கு ஆதரவு கோரி ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகளை அழிக்கும் போது, அவர்களது முகம்களின் மீதும் தார்பூச வேண்டியுள்ளதே என்பதே அந்தப் பொலீஸ் அதிகாரியின் கவலையாம்.

இந்தக் கவலையைத் தனது மேலதிகாரியான பண்டாரவளை சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி எட்சன் குணதிலகவிடம் தெரிவித்தார்.

பதுளை மாவட்டச் செயலகத்தில தேர்தல் விதிமுறைகள் விளக்குவதற்கான கூட்டம் நடைபெற்ற போது, அதில் கலந்துகொண்ட சிரேஷ்ட பொலீஸ் அதிகாரியிடம், பொறுப்பதிகாரி தனது மனக் கவலையை வெளியிட்டார்.

இதனையடுத்து -

'கவலைப்படாதீர்கள், அரச கடமையைச் செய்யும் போது இப்படிக் கவலைப்படக்கூடாது. ஆகவே, இனிமேல் சுவரொட்டிகள் மீது தாராளமாகத் தாரைப் பூசுங்கள் - என்று பொறுப்பதிகாரியைத் தோற்றினார் சிரேஷ்ட அதிகாரி. (ஒ)

## குருநகரில் பிரசாரம்

குருநகர்,மார்ச்11

குருநகர் மற்றும் யாழ்.திருநகர்ப் பகுதிகளில் ஈ.பி.டி.பி. கட்சியினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் "வீடு" சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவாளர்களும் குருநகர்ப் பகுதியில் அண்மையில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டனர்.

ஈ.பி.டி.பி. அமைப்பினர் இராணுவத்தினரின் பாதுகாப்புடன் இப் பகுதிக்குச் சென்று மக்களை வீடு வீடாகச் சந்தித்துத் தமது தேர்தல் பிரசாரத் துண்டுப்பிரசுரங்களை வழங்கினர். (ஒ-10-51)

# இரண்டு கட்சிகள் மட்டுமே தீவகத்தில் தேர்தல் பிரசாரம்

வேலணை,மார்ச்11

தீவகப் பிரதேசத்தில் இரண்டு கட்சிகள் மட்டுமே தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் தீவகத்தில் உள்ள பொது அமைப்புகளின் உதவியுடன் பிரசாரக் கூட்டங்களையும், தேர்தல் தொடர்பான கலந்துரையாடல்களையும் நடத்தி வருகின்றனர்.

இதேவேளை, ஈ.பி.டி.பியினர் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தும், ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட வாகனங்கள் மூலமும் தேர்தல் பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-ரி)

# பிரசாரத்துக்குப் பயன்படுத்தப்படும் அரச வாகனங்களைக் கைப்பற்றுக!

## பொலீஸாருக்குத் தேர்தல் ஆணையாளர் பணிப்பு

கொழும்பு,மார்ச்11

வேட்பாளர்களின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் சகல அரச வாகனங்களையும் கைப்பற்றுமாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தேர்தல் செயற்பாட்டுப் பிரிவுப் பொறுப்பதிகாரியான பிரதிப் பொலீஸ் மா அதிபர் காமினி நவரத்னாவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

தேர்தல் ஆணையாளரால் வழங்கப்பட்ட இந்தப் பணிப்புரையைத் தொடர்ந்து வேட்பாளர்களின் பிரசார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட சகல அரச வாகனங்களையும் கைப்பற்ற நடவடிக்கை எடுக்குமாறு சகல பொலீஸ் நிலையங்களுக்கும் பணிக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான பிரதிப பொலீஸ்மா அதிபர் பணித்துள்ளார்.

இதற்கிடையில், ஏதாவதொரு பிரதேசத்தில் வன்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு அப்பிரதேசத்துக்குப் பொறுப்பாகவுள்ள பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் முடியாமற் போனால் அவரை உடனடியாகநீக்கி வேறு அதிகாரியை அவரது இடத்துக்கு நியமிக்கப் பொலீஸ்மா அதிபர் தீர்மானித்துள்ளார் என்றும் பிரதிப பொலீஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

# பிக்குகள் அரசியலில் ஈடுபடுவது இந்த நாட்டின் சாபக் கேடாகும்!

## 'ஜீவோதயம்' பணிப்பாளர் தெரிவிப்பு

மட்டக்களப்பு,மார்ச்11

பௌத்த பிக்குகள் அரசியலில் ஈடுபடுவது இந்த நாட்டுக்கு சாபக் கேடாகும்.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு, கிழக்கு மாகாண 'ஜீவோதய' நலன் புரிச் சங்கத்தின் நிர்வாகப் பணிப்பாளர் ரி.விக்கிரமசிங்கம்.




மேற்படி சங்கத்தின் அதியுயர் பீடக் கூட்டம் சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் தலைமையில் மட்டக்களப்பு வெஸ்லி உயர்தரப் பாடசாலையில் அண்மையில் இடம்பெற்றது. அதில் கலந்தது கொண்டு உரையாற்றிய போதே நிர்வாகப் பணிப்பாளர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தனது உரையில் கூறியதாவது:-

இரு தசாப்த காலத்துக்கு மேலாக இலங்கையில் இடம்பெறுகின்ற இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாமல் உள்ளது. பிரச்சினையைத் தீர்க்க அரசியல்வாதிகள் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு எதிராக இந்த நாட்டுப் பௌத்த பிக்குமார் கொடுக்கும் அழுத்தங்களே இதற்குக் காரணமாகும் என்றார் அவர்.

# எமது ஆதரவுடன் ஆட்சி அமைந்தால் அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் தீர்வு

## ஈ.பி.டி.பி. வேட்பாளர்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்11

பொதுத்தேர்தலின் பின்னர் தென்னிலங்கையில் ஆட்சியமைக்கவுள்ள எந்தக் கட்சியாயினும் எமது கட்சியின் ஆதரவுடன் அரசமைத்தால் மூன்று வருடங்களுக்குள் யுத்தத்தை நிறுத்தி மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்போம்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா.

நேற்றுக்காலை 10.30 மணியளவில் யாழ்நகரில் அமைந்துள்ள கட்சியின் அலுவலகத்தில் தமது கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டு வைத்த பின்னர் அவர் செய்தியாளர்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டு வைத்த போது கட்சியின் பிரமுகர்களும் நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளர்களுமான கே.வி.குகேந்திரன், ந.மதனராஜா, க.பாலநடராசஐயர், எஸ்.சிவதாசன், து.பாஸ்கரன், தி.ஸ்ரீதரன், செல்வி மகேஸ்வரி வேலாயுதம், க.மணிபல்லவராஜன் உட்பட ஏனைய உறுப்பினர்களும் பிரசன்னமாகியிருந்தனர்.

தென்னிலங்கைப் பொறுத்த வரையில் எந்தவொரு கட்சியும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ள முடியாது. எமது கட்சிக்கு இம்முறை 8 முதல் 10 வரையான ஆசனங்கள் கிடைக்கும். அவ்வாறு கிடைக்கும் பட்சத்தில் எமது மக்களின் பிரச்சினைகளை முன்னிலைப்படுத்தி புதிய அரசுக்கு ஆதரவு வழங்குவோம். அத்துடன் வடக்கு - கிழக்கில் 10ஆயிரம் பேருக்கு உடனடியாக வேலைவாய்ப்பு வழங்குவோம்.

தமிழ் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதே எமது கட்சியின் பிரதான நோக்கமாகும். மக்களைப் பொறுத்த வரையில் இரண்டு பிரச்சினைகள் உள்ளன. ஒன்று தேசிய ஒடுக்குமுறை அடுத்தது ஜனநாயகக் கருத்தை வெளியிட முடியாத நிலை இவற்றுக்கெல்லாம் முதலில் தீர்வு வேண்டும் - என்றும் அங்கு தெரிவிக்கப்பட்டது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டு இரண்டு வருடங்கள் பூர்த்தியடைந்த நிலையில் உங்கள் கட்சிக்கு ஏதாவது பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளனவா என்று செய்தியாளர் ஒருவர் கேட்டார். அதற்குப் பதிலளித்த கே.வி.குகேந்திரன்(ஜெகன்) எமது உறுப்பினர்கள் தாக்கப்பட்டமை, படுகொலை செய்யப்பட்டமை என்பவற்றைத்தான் பின்னடைவு என்று குறிப்பிட வேண்டும். எனினும் இந்தக் காலத்தில் எமது கட்சி மேலும் வளர்ச்சி கண்டுள்ளது - என்றார்.

சர்வதேச அளவில் விடுதலைப் புலிகளே எமக்காகப் பிரசாரம் செய்தார்கள். அதனால் எமது கட்சி சர்வதேச அளவில் பிரபல்யம் பெற்றது. நெடுந்தீவுப் பிரதேசத்தில் இருந்து நாம் வெளியேற வேண்டும். என்று கூறியதன் மூலம் எமக்குப் பிரபல்யம் ஏற்படுத்தினார்கள். இது ஒரு முன்னேற்றம் தான் என்றும் அவர் தெரிவித்தார்.

மக்களே புலிகள் புலிகளே மக்கள் என்பது ஒரு போலியான கோஷம் பல இடங்களில் எமது ஆதரவாளர்கள் மிரட்டப்பட்டுள்ளனர். குறிப்பாக ஓட்டோக்காரர்களுக்கும் அழுத்தம் கொடுத்திருக்கிறார்கள். இவ்வாறான நிலையில் மக்களால் எவ்வாறு சுதந்திரமாக வாக்களிக்க முடியும்? தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வேட்பாளர்களை புலிகள்தான் நியமித்துள்ளனர். அத்துடன் அவர்களுக்கு ஆதரவாகத் தேர்தல் பிரசாரத்திலும் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் நாம் முன்னர் தேர்தலில் போட்டியிட்டபோது அது துரோகம் என்று கூறினார்கள். அபிவிருத்தி வேலைகளை மேற்கொண்டபோது இயல்பு நிலை இல்லை என்று கூறினார்கள். ஆனால் தற்பொழுது அவர்கள் தேர்தலுக்கு ஆதரவு வழங்குவதை எந்த வகையில் நியாயப்படுத்த முடியும்?

மக்களது வாழ்வின் சகல விடயங்களிலும் காணப்படுகின்ற புலிகளின் தலையீடு முதலில் அகற்றப்பட வேண்டும். மக்கள் நிர்ப்பந்தத்துக்கு ஆளாக்கப்படுகின்றனர். அவர்கள் சுதந்திரமாக வாக்களிக்க வேண்டும்.

பிரதான கட்சிகள் இரண்டும் பேச்சின் மூலமே சமாதானம் ஏற்படுத்தப்படவேண்டும் என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளன. அவ்வாறான நிலையில் எமது கட்சியும் அதற்கான ஆதரவை வழங்கும். மக்கள் நலனில் அக்கறையில்லாமலோ அல்லது சுயலாபம் ஒரு சிலரைப் போன்றோ நாம் கட்சியை நடத்தவுமில்லை. தேர்தலில் போட்டியிடவுமில்லை. இனப்பிரச்சினை என்பது பாதுகாப்புடன் மட்டும் தொடர்புடைய விடயமல்ல. தென்னிலங்கையில் உள்ள தமிழ்மக்கள் பாதுகாப்புடன் வாழ்ந்து வருகின்றனர். புலிகளின் ஆதரவாளர்கள் கூடத் தென்னிலங்கையில் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு இப்போது உள்ளது.

ஆனால், வடக்கு - கிழக்கில் சில கட்சிகள் மக்களைத் தூண்டிவிடும் நிலையே காணப்படுகிறது. இதன்மூலம் அவர்கள் இலாபம் தேடிக்கொள்ள முயல்கின்றனர். ஆனால் நாங்கள் அப்படியல்ல. ஆயுதப் போராட்டம் தற்பொழுது ஓய்துள்ள போதும் மனப்போராட்டம் மேலோங்கி நிற்கிறது. அதனால் நாம் மக்களுக்கு எந்த விதமான பணிகளையும் மேற்கொள்ள முடியாமல் உள்ளது.

எம்மைப் பொறுத்வரையில் ஏனைய கட்சிகள் எமது பாதையைத தொடர்கின்றன என்றே சொல்ல வேண்டும். புதிதான கொள்கைகள் எதுவும் அவர்களிடம் இல்லை. கடந்த 10 வருடங்களாக பெரும்பான்மைக் கட்சிகள் இரண்டுடனும் எமது கட்சி நல்லுறவைப் பேணி வருகிறது. அத்துடன் ஜனநாயக அரசியல் தொடர்பாக மக்கள் மத்தியில் நம்பிக்கையைப் பெற்றுள்ளது.

ஏகப்பிரதிநிதித்துவம் தான் இன்று எல்லாவற்றையும் பிரித்து வைத்துள்ளது. வடக்கு - கிழக்கு இணைப்பை - அது தற்காலிக இணைப்பாக இருந்தாலும் - அந்த இணைப்பை செயலறறுப் போகச் செய்தது யார்? தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் பிளவு ஏற்படுத்தியதும் ஏகப்பிரதிநிதித்துவம் தான். அது இன்று பிரதேசவாதம் பேசுமளவுக்கு வந்துவிட்டது. இனிப் பிரதேசவாத மோதல் ஏற்பட்டால் அநியாயமாக உயிரிழப்பது எமது இளைஞர்கள்தான்.

இவ்வாறான செயற்பாடுகளால் ஈ.பி.டி.பி. - ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) கூட்டுக்குத்தான் தேர்தல் வெற்றி அதிகம் என்று மக்கள் பேச ஆரம்பித்து விட்டார்கள். நாம் வெற்றி அடைந்தால் மக்களுக்கு முதலில் வேலைவாய்ப்புக்களை வழங்குவோம். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களால் எதையும் கூற முடியாது. அவர்கள் என்ன செய்வது என்பதைத் தீர்மானிப்பது வன்னிதான்.

தமிழ்த் தேசிய உணர்வுக்கு நாம் எதிரானவர்கள் அல்லர். அதற்காகத் தமிழ் மக்களின் வாழ்வைத் தேசிய உணர்வுக்கு அப்பாற்பட்டதாக அல்லது வேறாக எவரும் எண்ண வேண்டாம்.

- இவ்வாறு ஈ.பி.டி.பி. பிரமுகர்கள் கூட்டாகத் தெரிவித்தனர். (ஐ-10-8-173)

# உடனடி வேலை வாய்ப்பு

சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலியில் அமைந்துள்ள NG COMMUNICATION & VIDEO VISION ஸ்தாபனத்திற்கு MS Office, Desktop Publishing கணனி கற்கை நெறிகளில் அனுபவமுள்ளோர் தேவைப் படுகின்றனர்.

விண்ணப்பதாரிகள் சான்றிதழ்களுடன் நாளை (12.03.2004) வெள்ளிக்கிழமை மலை 3.00 மணிக்கு அலுவலகத்திற்கு சமுகம்தரவும்.

நிர்வாகி:
SIRUPPIDDY NORTH, NEERVELY. (29535) T.P. 0777 229092
E-mail ngcommunication @hotmail.com

# இளையோருக்கான சதுரங்கப் போட்டி

யாழ். சதுரங்கச் சம்மேளனம் நடத்தும் அகில இலங்கை இளையோருக்கான மாவட்ட மட்டத் தெரிவுப் போட்டிகள்
20.03.2004 சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில நடைபெறவுள்ளது.
பிரிவு:- 8,10,12,14,16,18 ஆகிய வயதிற்குக் கீழ்
(ஆண், பெண் தனித் தனியாக)
பிறப்புச் சான்றிதழின் பிரதி தரப்படவேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி:- 19.03.2004 மாலை 6 மணி

தொடர்பு முகவரி:
70/1, வைமன் வீதி,
நல்லூர்.

திரு.சி.வித்தியாதரன்
செயலாளர்.
(29535)(40-11-17-30)

# கோல்டன் ஈகிள் பாதுகாப்புச்சேவை
## வெற்றிடங்கள் – பாதுகாவலர்கள்

அரச, கூட்டுத்தாபன, தனியார் நிறுவனங்களில் கடமை புரிவதற்கு பின்வரும் ஆவணங்களுடன் நேர்முகப் பரீட்சைக்கு சமுகம் கொடுக்கவும்.

1). க.பொ.த. (சா/த)
2). கிராம அலுவலரின் நற்சான்றிதழ் (06 மாதங்களுக்குட்பட்டது)
3). பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
4). பாடசாலை அதிபரின் நற்சான்றிதழ்
5). தே.அ.அ., வி.அ.அ. (போட்டோ பிரதி)

கிழமை நாள்கள்:- 4.30. p.m. TO 6.00 p.m.
சனி, ஞாயிறு :- 10.00 a.m. TO 12.00 Noon
குறிப்பு :- ஆரம்ப சம்பளம் ரூபா 5100/=
E.P.F - E.T.F. வழங்கப்படும்.

43, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்,
(யாழ்.இந்து மைதானம் முன்பாக) - பணிப்பாளர்.
(சி-339984)(37-11-17-30)

கணபதி துணை
**கோண்டாவில் நெட்டிலைப்பாய் பிள்ளையார் கோயில்**
இராஜகோபுரத் திருப்பணிக்கு அனுபவமுள்ள
## சிற்பாசாரியர்கள் தேவை

எமது கோயிலுக்கு தெற்கு வாசல் இராஜகோபுரத் திருப்பணி வேலைகள் வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. அதற்கு அனுபவம் வாய்ந்த சிற்பாசாரியர்கள் தேவைப்படுகின்றனர். தகுதி வாய்ந்தோர் உடனடியாகத் தொடர்புகொள்ளவும்.

செல்லப்பா நடராசா
தலைவர்.
இ.இ.இரத்தினதாசன்
செயலாளர்.
(29523)(39-24-11-17-30)

# NORTH EAST TECHNOLOGIES

No. 34, SADDANATHAR ROAD, NALLUR, JAFFNA.
Tele: 021-2223786, 0777-708498 (Hot line),
Web site: www.betslt.lk.

ஆஸ்திரேலியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட கணனிகள் ரூபா 10.000 இல் இருந்து.
உத்தரவாதத்துடன் குறைந்த விலையிலும் பெற்றுக் கொள்ள உடனடியாக நாடுங்கள். குறைந்த கையிருப்பு மட்டுமே!

| | | | | | |
|---|---|---|---|---|---|
| PI | 150 | MHz | 32 | Ram | 2Gb |
| PI | 233 | MHz | 64 | Ram | 3Gb |
| PII | 366 | MHz | 64 | Ram | 6Gb |
| PII | 350 | MHz | 64 | Ram | 6Gb |
| PII | 400 | MHz | 64 | Ram | 6Gb |
| PII | 450 | MHz | 64 | Ram | 4Gb |
| PIII | 633 | MHz | 128 | Ram | 9Gb |
| PIII | 666 | MHz | 128 | Ram | 9Gb |

*THE PRICE IS ALL INCLUSIVE OF 15" SVGA COLOUR MONITOR, KEY BOARD & MOUSE and MULTIMEDIA PACKEGES OF 32X CD ROM, SOUND CARD.*
*(6 months Warranty)*
*Computer Accessories at attractive prices*
*BRAND NEW MACHINES*

- P-IV 2,6GHz, 40 GB, 128 Ram, 15" Philips Monitor,
- P-IV 2,0GHz, 40 GB, 128 Ram, 15" Philips Monitor,
- AMD 1.3GHz, 40 GB, 128 Ram, 15" Philips Monitor,
- AMD 1.2GHz, (ATX Black) 40 GB, 128 Ram. 15" LG Monitor (Black).
- AMD 1.2 GHz, 40 GB, 128 Ram, 15" Philips Monitor,

*(3 Years Warranty)* (C-33985)(30)


## திரைப்படக் காட்சி பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,மார்ச்11

சலனசித்திரம் அமைப்பினால் எதிர்வரும் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் நெல்லியடி ராஜலஷ்மி திரையரங்கில் திரையிடப்படவிருந்த 'இரகசிய அன்பு' (Secret love) என்ற லண்டன் தமிழ்த் திரைப்படக் காட்சி, மறு அறிவித்தல்வரை பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தணிக்கையில் ஏற்பட்ட தாமதம் காரணமாகவே இக்காட்சி பிற்போடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## வழங்கற் கட்டளை பெறலாம்

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல கூட்டுறவுச் சங்கங்களும் தமது உலர் உணவு விநியோகத்துக்கான வழங்கற் கட்டளைகளை இன்று வியாழக் கிழமையும், நாளையும் யாழ். செயலகப் புனர்வாழ்வுப் பகுதியில் பெற்றுகொள்ளலாம் என்று திட்டப்பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை அறிவித்துள்ளார். (ம-10)

## மிருகவதை செய்ததாகக்கூறி மூவர் மீது வழக்கு

தென்மராட்சி,மார்ச்11

ஆறு மாடுகளை ஏற்றிவந்த லொறியினை சாவகச்சேரிப் பொலீஸார் மடக்கிப்பிடித்துள்ளனர்.

மிருகங்களைச் சித்திரவதைக்குளான நிலையில் லொறியில் கொண்டு வந்ததாகக் குற்றஞ்சாட்டி லொறியில வந்த மூவாமீது சாவகச்சேரி பொலீஸார் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று வழக்குத் தாக்கல் செய்தனர்.

மூன்று சந்தேக நபர்களையும் தலா 5 ஆயிரம் ரூபா ஆள்பிணையில் செல்ல அனுமதித்ததுடன், ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பிணை முறி சமர்ப்பித்து ஆறு மாடுகளையும் - மூன்று லட்சம் ரூபா பெறுமதியான பிணை முறி சமர்ப்பித்து லொறியினையும் கொண்டுசெல்ல நீதிவான் அனுமதித்தார். (எ-117)

## சைக்கிள்கள் மோதியதில் மாணவனுக்கு கைமுறிந்தது!

தாவளை - இயற்றாலைப் பகுதியில் இரு சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் பாடசாலை மாணவனுக்குக் கைமுறிந்த சம்பவம நேற்று இடம்பெற்றது.

அந்த இடத்தைச் சேர்ந்த மகாலிங்கம் மகிந்தன் (வயது 13) என்னும் மாணவன் கைமுறிந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுபபி வைக்கப்பட்டார். (எ-117)

## உடுவிலில் இன்று ஓய்வூதிய பற்றுச்சீட்டு விநியோகம்

வலிகாமம் தெற்கு, மார்ச்11

உடுவில் பிரதேச செயலகத்தினூடாக ஓய்வூதியம் பெறுபவர்கள் தங்களது ஓய்வூதியப் பற்றுச்சீட்டினை பிரதேச செயலகத்தில் இன்று தங்கள அடையாள அட்டையுடன் வந்து பெறறுக் கொள்ளுமாறு பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண அரச அதிபரின் அறிவுறுததலுக்கமைய இம்மாதத்துக்குரிய ஓய்வூதியம் குறிப்பிட்ட ஓய்வூதியர்களிடம் நேரடியாக ஒப்படைக்கப்படவுள்ளது என்றும் - தெரிவிக்கப்பட்டது. (எ-152)


## வீடு விற்பனைக்கு

சாவகச்சேரி வடக்கு, கிராம்புவில் முருகன் கோயிலுக்கு அண்மையில் 10 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
ம.செல்வகுமார்,
கிராம்புவில்,
சாவகச்சேரி.
T.P. 0777 - 111334
(29539)

## தேவை

நன்கு இயங்கிக் கொண்டிருக்கும் கச்சா: அல்வா உற்பத்தித் தொழிற்சாலைக்கு வேலை பழகிய, பழக விரும்புகின்ற பெண் பிள்ளைகள் தேவைப்படுகிறார்கள். 24.03.2004 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. 2194
மே/பா உதயன்.
(29532)

# கர்நாடக சங்கீத இசைப் பயிற்சி

கர்நாடக சங்கீதத்தில், எல்லாத் தரங்களுக்குமான பாடத்திட்டங்களுக்கமைய கர்நாடக சங்கீதத்தைக் கற்றுக்கொள்ள விரும்புபவர்களுக்கான கர்நாடக இசை - வாய்ப்பாட்டு இசை ஆகிய பயிற்சி வகுப்புக்கள் சங்கீத வித்துவான் சிவஸ்ரீ சோ.உமாரமணக்குருக்கள் அவர்களால் 110/11, சட்டநாதர் சிவன்கோவில் மேற்கு வீதியில் நடத்தப்பட்டு வருகின்றன. சங்கீதத்தைக் கற்றுக்கொள்ள விரும்புபவர்கள் மேற்படி நிலையத்தில் தொடர்புகொள்ளவும், அல்லது பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.

021-222-6538, 0777-6221046

(சி33991)(37-11-12) சிவஸ்ரீ.சோ.உமாரமணக்குருக்கள்.


# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 07 - 05 - 1943



மறைவு 10 - 02 - 2004

**அமரர் மாணிக்கம் இராசையா**

*மனிதரில் மாணிக்கமாய் மாந்தருள் திலகமாய்*
*புனிதமாய் வாழ்ந்திட்ட புண்ணிய புருஷரே!*

ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (11.03.2004) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்புப் பிள்ளைகள்:
இ.நற்குணசிங்கம் (நாகராசா), க.நற்குணவதனி,
இ.நற்குணவதி, இ.நற்குணரதி,
கோ.நற்குணகாந்தா, இ.நற்குணா.

*மாவைகலட்டி,*
*தெல்லிப்பழை.*
(29531)(39-11-17)

# அமரருக்கு அஞ்சலி



அளவெட்டி தந்த தேவார இசைமழை
**சிவஸ்ரீ இ.சோமசுந்தரரேஸ்வரக் குருக்கள் ஐயா**
அவர்களின் மறைவையிட்டு அஞ்சலி செலுத்துகின்றோம்.

*பிரசித்திபெற்ற அளவெட்டி கும்பளாவளைப் பிள்ளையார் கோயிலின் பிரதம குருக்களான சிவஸ்ரீ இ.சோமசுந்தரேஸ்வரக் குருக்கள் ஐயாவின் மறைவுச்செய்தி எமக்கெல்லாம் பெரும் அதிர்ச்சியைத் தந்தது. தேவார. திருமுறைகளைச் சிறந்த பண் வரிசையில் பாடி எல்லோரையும் இறை சந்நிதானத்துக்கு அழைப்பதில் வல்லவர் "சுப்பையாக் குருக்கள்" என அனைவராலும் அழைக்கப்படும் குருக்கள் ஐயா எனது தலைசிறந்த மாணவரில் ஒருவர் என்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். அவர் எங்கள் தேவஸ்தானத்தில் மஹோற்சவம் மற்றும் விசேட தினங்களில் வருகைதந்து திருவூஞ்சல் பதிகம் பாடி பக்தர்கள் அனைவரையும் இசை வெள்ளத்தில் திளைக்க வைப்பவர். அளவெட்டியில் ஒரு காலத்தில் தேவாரப் பண் கைவந்த பிரசித்திபெற்ற தேவார கணபதிக் குருக்கள் பரம்பரையினர் இருந்தனர். அதேபோன்று இன்றும் தேவாரத்தைப் பண்ணுடன் பாடவல்ல சுப்பையாக்குருக்கள் இன்றைய தலைமுறையினருக்கு ஒரு கலங்கரை விளக்காகப் பிரகாசித்து வந்தார். கோயில் பூசை வழிபாட்டில் சாந்தமாகப் பூசை செய்து அனைவரையும் திளைக்க வைத்த சிறந்த சிவாச்சாரியாராக விளங்கினார். அன்னாரின் மறைவு எமக்கு மட்டுமல்லாது சைவ உலகத்துக்கு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும். சிவாசாரியப் பெருமகனின் ஆத்மா சாந்தியடைய துர்க்கையம்பாளைப் பிரார்த்திக்கின்றேன்.*

தலைவர்: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.
(சி-33988) (24-11-17-30)
கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
சமாதான நீதிவான்.

# மரண அறிவித்தல்கள்

## இளையதம்பி செல்வரத்தினம்

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் தாவடி தெற்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி செல்வரத்தினம் 05.03.2004 வெளளிக்கிழமை புதுக்குடியிருப்பில் காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 07.03.2004 ஞாயிற்றுக்கிழமை புதுக்குடியிருப்பில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*7ஆம் வட்டாரம்,*
*முல்லை வீதி,*
*புதுக்குடியிருப்பு.* (29534) (38-11-17-30)

தகவல்:
செ.நந்தகுமார்(மகன்)
செ.யோககுமார்(மகன்).

## தில்லையம்பலம் அருமைநாயகம்

(இளைப்பாறிய பிரதிநில அளவையாளர் நாயகம்)

தெல்லிப்பழை, வேதவனம் வளவைப் பிறப்பிடமாகவும், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் அருமைநாயகம் 08.03.2004 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - பொன்னுப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும், லோகநாதன் (ஓய்வுபெற்ற உதவி நில அளவை அத்தியட்சகர்) செல்வநாயகி, மகேந்திரன் (U.K.), சோமநாதன் (CANADA), தேவகிராணி (U.K.), தேவராஜன் (U.K.) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவகாமசவுந்தரி, காலஞ்சென்ற Dr.P.இராசரத்தினம், பத்மினி (U.K.), சித்திரா (CANADA), சிவகுமாரன் (U.K.), அஜந்தினி (U.K.) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெயவாணி, ஜெஜேந்தினி, கோபிநாத், ஸ்ரீகணேசன், சசிகரன் (CANADA), திருமதி தர்ஷினி, குகஸ்ஜன், கௌரி, கிரிஷா (U.K.), நிரோஷன், தனுசன் (CANADA), சிவசங்கர், சிவகணேஷ் (U.K.) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற இராஜராஜேஸ்வரி மற்றும் தையல்நாயகி ஆகியோரின் அருமைச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2004) வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*23, சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய்.*
*(மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கு அருகில்)*
*T.P. NO: 077-6153632.* (29533)(37-11-17-30)

தகவல்:
பிள்ளைகள்.

# சைவத்துக்கும் தமிழுக்கும் மிகச் சிறந்த சேவையாற்றிய பெரியார் ஆறுமுகநாவலர்

## பேராசிரியர் கோபாலகிருஸ்ண ஐயர் தெரிவிப்பு

சைவம், தமிழ் ஆகிய இரண்டுக்கும் மிகச்சிறந்த பணியாற்றிய ஒரு பெரியாராக விளங்கியவர் எங்கள் நல்லைநகர் ஆறுமுகநாவலர்.

- இவ்வாறு யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஸ்ண ஐயர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வைச பரிபாலன சபையினரால் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வரும் அகில இலங்கை சைவ மாநாடு கடந்த வெள்ளியன்று நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் ஆரம்பமாகியது. தலைமையுரையாற்றிய பேராசிரியர் தொடர்ந்து தெரிவித்ததாவது:-

எங்கெல்லாம் சைவத்தை சிந்திக்கிறோமோ? எங்கெலாம் செந்தமிழை சிந்திக்கிறோமோ? அங்கெல்லாம் நாம் நாவலரை சிந்திக்காது இருக்க முடியாது. சைவத்தையும் தமிழையும் கட்டிவளர்த்தவர் எங்கள் நாவலர்.

இந்த உண்மை இன்று இளம் தலைமுறை யினருக்கு தெரியாமல் இருப்பது வேத னைக்குரியது. எங்கள் இளம்தலை முறையினரிடம் சைவ சமய ஆசாரங்கள் இல்லாமல் இருப்பது பெருங்குறை யாக இருக்கிறது. இளைய தலை முறையினிடம் சைவம், தமிழ் இரண்டு பற்றி விரிவாக அறிந்துகொள்ள இவ்வாறான சைவமாநாடு முக்கிய மானது - எனத் தெரிவித்தார்.

சைவ மாநாட்டின் ஆரம்பத்தில் வண்ணை சிவன் ஆலயத்தில் விசேட பூசைகள் இடம்பெற்றன.

தொடர்ந்து மாநாட்டு மண்டபமான நாவலர் மண்டபத்தில் பூசைகள இடம்பெற்றன. திருமுறை ஓதலை யாழ். இந்துக் கல்லூரி மாணவர்கள் நிகழ்த்தினர். புராண படனத்தைத் தொடர்ந்து அருளுரையினை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் நிகழ்த்தினார்.

வாழ்த்துரையினை அகில இலங்கை சைவகுருமார் அர்ச்சகர் சபைத் தலைவர் சிவஸ்ரீ கிருபானந்தக் குருக்கள் வழங்கினார். வரவேற்புரையினை ஆசிரியர் அ.பஞ்சாட்சரம் நிகழ்த்தினார். தொடர்ந்து உரைகள் இடம்பெற்றன.

2003 ஆம் ஆண்டு சைவ சித்தாந்த பிரவேச, பாலபண்டித, பண்டிதர் தேர்வில் சித்திகள் பெற்றவர்களுக்கு பரிசில், சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

மாலை அரங்கு கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை முன்னாள் விரிவுரையாளர் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற் [illegible] தலைமையில் இடம்பெற்ற [illegible]

### கடல்வளம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மார்ச்11

கடல்வளம் பாடத்துக்கான ஆசிரியர்களை ஆள்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்கள் கல்வி அமைச்சினால் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து அனுப்புவது தொடர்பான கலந்துரையாடல் நாளைமறுதினம் சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு யாழ்.கல்வி மேம்பாட்டுப் பேரவை அலுவலகத்தில் நடைபெறவுள்ளதால் கடல்வளம் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரையும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ம-8-ரி)

# சீனக்குடாவில் முதலாவது தேர்தல் குற்றவழக்கு

கன்னியா, மார்ச்11

திருகோணமலை சீனக்குடாப் பகுதியில் மாவட்டத்தின் முதலாவது தேர்தல் சுட்ட மீறல் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

தேர்தல் சட்ட விதிகளுக்கு மாறாக முஸ்லிம் காங்கிரஸ் சார்பான தேர்தல் பிரசார துண்டுப்பிரசுரங்களை தானியகம பகுதியில் விநியோகித்ததுடன் சுவரொட்டிகளையும் ஒட்டினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் தானியகம பொலீஸார் நான்கு சந்தேகநபர்களை கைதுசெய்து சீனக்குடா பொலீஸாரிடம் கையளித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்தே சந்தேக நபர்கள் திருகோணமலை நீதிவான் எஸ்.தியாகேந்திரன் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர். நீதவான் சந்தேக நபர்களை பிணையில் செல்ல அனுமதித்தார்.

புல்மோட்டை வாசிகளான [illegible].அயூப்கான், ஏ.ஜே.முகமட் [illegible] ண்ணியா குறிஞ்சிக்கேணி வா [illegible] எம்.ஏ.லத்தீப், எம்.ஏ.ஏ. அப [illegible] ஆகியோரே இவ்வாறு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (ஐ-3)

# றப்பர் தோட்டத் தொழிலாளர் நாளாந்தச் சம்பளம் அதிகரிப்பு

கொழும்பு, மார்ச்11

இறப்பர் தோட்டத் தொழிலாளர்களின் நாள் சம்பளம் 10 ரூபா 30 சதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பள உயர்வுகள் 2004 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம திகதி முதல் நடைமுறைக்கு வரும் என தொழில், தொழில்வாய்ப்புக்கள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க கூறினார்.

நேற்றுக் காலை தொழில் அமைச்சில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த இரண்டு வருடங்களாக இறப்பரின் விலையில் பெரும் வீழ்ச்சி காணப்பட்டிருந்தது. எனினும் நாம் மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக 86 ரூபாவாக இருந்த ஒருகிலோ இறப்பரின் விலை 110 ரூபாவாக அதிகரித்துள்ளது. இதனால் இறப்பர் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிக்கக் கூடியதாக இருக்கின்றது என அமைச்சர் கூறினார்.

இந்தச் சம்பள உயர்வு தொடர்பாக தோட்டத்துரைமார் சம்மேளனத்துடன் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், தொழிற்சங்கக் கூட்டக் கமிட்டி என்பன கூட்டு ஒப்பந்தம ஒன்றைச்செய்துள்ளன எனவும் அமைச்சர் கூறினார். (ஐ-க)

# கூட்டமைப்பின் தேர்தல் பிரசார செயலகங்கள் பரவலாகத் திறப்பு

வலிதென்மேற்கு, மார்ச்11

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களின் தேர்தல் பிரசார செயலகம் ஒன்று மானிப்பாய் மேற்கில நேற்று புதன்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

வலிதென்மேற்கு பிரதேசத்திற்கான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களின் தேர்தல் பிரசார வேலைகளை இந்த செயலகம் மேற்கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை:-

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களின் தேர்தல் வலய செயலகம் நேற்று சண்டிலிப்பாயில் திறந்து வைக்கப்பட்டது. பண்டத்தரிப்புச் சந்திக்கு அண்மையில் பண்டத்தரிப்புப் பகுதிக்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களின் தேர்தல் பிரசார அலுவலகம் இன்று வியாழக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது

(எ-135)

### குருநகரில் கூட்டமைப்பின் பொதுக்கூட்டம்

குருநகர், மார்ச் 11

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரப் பொதுக்கூட்டம் இன்று மாலை 6.00 மணிக்கு குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

கூட்டமைப்பின் யாழ்மாவட்ட வேட்பாளர்கள் அனைவரும் இக்கூட்டத்தில் உரையாற்றவுள்ளனர். கூட்டத்தின் இறுதியில் சாந்தன் இசைக்குழுவினரின் இசைநிகழ்ச்சியும் நடைபெறும்.(ஐ-51)

ஸ்ரார் இன்டஸ்ரியல்ஸ் சேர்விஸஸ் பிரைவேட் லிமிடெட்

**வெற்றிடங்கள்**

**எமது ஸ்தாபனத்தில் பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன.**

**Fitters** - பொருத்துநர்

**Welders** - ஒட்டுநர்

**Fabricaters** -

**மேற்குறிப்பிட்ட வேலையில் முன் அனுபவமுடையவர்களும், தொழில் பயில ஆர்வமுடையவர்களும் உங்களது சுயவிவரக்கோவையுடன் சனிக்கிழமை (13.03.2004) காலை 9.30 மணிக்கும் 12.30 மணிக்கும் இடையில் நேரில் சமுகமளிக்கவும்.**

*15/1, பிள்ளையார் கோவில் வீதி, நாயன்மார்காடு, நல்லூர்.*

நிர்வாகஇயக்குநர், ஸ்ரார் இன்டஸ்ரியல்ஸ், சேர்விஸஸ் பிரைவேட் லிமிடெட்.

(29541)(36-12-38)













# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை இராசரத்தினம் (இராசப்பா)



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை - இராசரத்தினம் 09.03.2004 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - பொன்னம்மாவின் மகனும் காலஞ்சென்ற செல்லையா - கனகம்மாவின் மருமகனும் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் கிருஸ்ணகோபால் (கனடா), குகேந்திரராஜ் (ஜேர்மனி), ஜெயராஜ் (ஜேர்மனி), தருமராஜ் (கனடா), வனஜா (ஜேர்மனி), தனுஜா (கனடா), குணராஜ் (கனடா), டினோஜா (கனடா), தினோஜா (கனடா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2004) வியாழக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*செல்வநாயகம் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.T.P. 077 6013552*

தகவல்: திருமதி விஜயலட்சுமி- மகாதேவன் (மருமகள்)

(29537) (38-12-36)

## திருமதி வள்ளிநாயகி சண்முகநாதன்

சங்கத்தானை, தட்டாதெருவைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர் சண்முகநாதன் வள்ளிநாயகி அவர்கள் நேற்று (10.03.2004) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசுவாமி - இராசமணி தம்பதிகளின் மூத்த மகளும் காலஞ்சென்ற சண்முகநாதனின் மனைவியும் பாஸ்கரன், கருணாகரன், வசந்தி, கலாவதி, தேவி, சிவகுமார், சாந்தா, தயா, ரஜனி ஆகியோரின் பாசமிகு தாயாரும் சாரதா, சுசலா, சோபிதா, சபேசன், மனோகரன், சிறீதரன் ஆகியோரின் அருமை மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (11.03.2004) வியாழக்கிழமை பி.ப 2 மணிக்கு சங்கத்தானை தட்டாதெருவில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் , உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தட்டாதெரு, சங்கத்தானை, சாவகச்சேரி.*

தகவல்: ச.கருணாகரன் (கண்ணன் - மகன்).

(29542)(36-12-38)

## திருமதி கார்த்திகேசு மகேஸ்வரி



காரைநகரைப் பிறப்பிடமாகவும் அராலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கார்த்திகேசு மகேஸ்வரி 05.03.2004 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராமலிங்கம் - ஆச்சிமுத்து தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற செல்லையா - கண்மணி தம்பதிகளின் பாசமிகு மருமகளும் கமலராணி, யோகராணி, கருணாகரன், பாஸ்கரன், ஜெயராணி (ஜேர்மனி), சிவகரன் (ஜேர்மனி), ஸ்ரீகரன் (ஜேர்மனி), பிரபாகரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவராசா, காலஞ்சென்ற தவராசா மற்றும் மஞ்சுளா, தேவராணி, ராஜன் (ஜேர்மனி), விஜயராணி (ஜேர்மனி), தயாரஞ்சினி (ஜேர்மனி), மயில்விழி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2004) வியாழக்கிழமை பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக அராலி வடக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*செல்வா வீதி. அராலி வடக்கு. வட்டுக்கோட்டை.* (29590)(36-12-38)

தகவல்: கா.பாஸ்கரன் (கிளி - மகன்).

## திருமதி பஞ்சசோதி சிவசம்பு

உடுவில்கிழக்கு, பெரியமதவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பஞ்சசோதி சிவசம்பு அவர்கள் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் அமரர் பண்டிதர் சிவசம்புவின் (நீர்வேலி) அன்பு மனைவியும் சிவசோதி (இராமநாதன் கலலூரி ஆசிரியை) சிவஞானசோதி, சிவானந்தன் (கணக்காளர் - லண்டன்) சிவயோகசோதி,காலஞ்சென்ற சிவநேசசோதி, சிவராஜசோதி, சிவகுமாரன் ( நிதிஆலோசகர் லண்டன் மெற்றோ பொலிற்றன் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற வக்கீல் கந்தசாமி, காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தா (முகாமையாளர், வீரகேசரி, யாழ்ப்பாணம்) மற்றும் டாக்டர் மனோரஞ்சினி (லண்டன்), ஓய்வுபெற்ற ஆசிரியர் மகாதேவன், ஸ்ரீதரன் (பகுதி நேர கணனி விரிவுரையாளர் கொக்குவில் தொழில் நுட்பக்கல்லூரி), டாக்டர் இரட்ணவதி ஆகியோரின் அன்பு மாமியாரும் திருமகள், காலஞ்சென்ற பாலமுருகன் மற்றும் ஸ்ரீவெங்கடேசன், ஸ்ரீரங்கநாயகி, மயூரன், ஜெகன, குமாரதீபன், வினோத், றோஷான், ஓம்சம்பூர்ணா ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (11.03.2004) வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு பூவோடை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடுவில் கிழக்கு. (29543)(36-12-38)

தகவல்: குடும்பத்தினர்.

## வைரமுத்து இரத்தினம்

### (இளைப்பாறிய இலிகிதர்)

சாவகச்சேரி, சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து இரத்தினம் அவர்கள் நேற்று (10.03.2004) புதன்கிழமை அகால மரணமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து இலச்சுமியின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லையா தெய்வானைப்பிள்ளையின் மருமகனும் சவுந்தரத்தின் அன்புக் கணவரும் ஜெயசிறி (சுவிஸ்), சைலசிறி (பிரான்ஸ்), சிவாகரன் (சுவீடன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற பொன்னுச்சாமி (ஆசிரியர்), காலஞ்சென்ற சின்னத்துரை (ஆசிரியர்), காலஞ்சென்ற தங்கம்மா, காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் இளைய தம்பி, காலஞ்சென்ற சோமசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2004) வியாழக்கிழமை 12.30 மணியளவில் நீர்வேலி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*"ஈஸ்வரி வாசா" குறுக்கு றோட், நீர்வேலி வடக்கு, நீர்வேலி.* (29544)(12-36-38)

தகவல்: வி.பாலகிருஷ்ணன் (மருமகன்)

# மக்களை, போராளிகளைப் பாதிக்காதவாறு கிழக்கில் நிர்வாகத்தைக் கையேற்கத்திட்டம்

## மட்டு-அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஷ் தெரிவிப்பு

மட்டக்களப்பு,மார்ச்11

கிழக்குப் பிராந்தியத்திலுள்ள போராளிகள் மற்றும் மக்களுக்கு எந்தப் பிரச்சனையும் ஏற்படாதவாறு அந்த நிர்வாகத்தைப் பொறுப்பேற்குமாறு தலைவர் வே.பிரபாகரன் எமக்குக் கட்டளையிட்டிருக்கிறார்.

இப்படித் தெரிவித்தார், மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட சிறப்புத தளபதி ரமேஷ்.

நேற்றிரவு பி.பி.ஸியின் தமிழோசைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பேட்டியில் ரமேஷ் மேலும் கூறுகையில்,

புலிகள் மீண்டும் யுத்தத்திற்குத் தயாராகின்றார்கள் என்பது பொய்ப் பிரசாரமாகும். கடந்த நாள்களில் கருணா, தலைவரைச் சென்று சந்தித்துவிட்டு வந்ததும் எங்களிடம் கூறுவது, தலைவருக்கு போரில் விருப்பமில்லை என்பதைத்தான்.

அரசியல் ரீதியாகத் தமிழர்களுக்கு விடிவுகிட்டவேண்டும் அதற்காக சர்வதேச ரீதியாக தமிழர்களின் விடுதலைக்கான நியாயத்தை தெளிவுபடுத்த வேண்டும். இந்த விடயத்தில் தலைவர் பிரபாகரன் உறுதியாக இருக்கிறார் என்று கருணா எங்களுக்கு அடிக்கடி கூறுவார்.

ஆனால், தற்போது தனது பிரச்சனைகளை மூடிமறைப்பதற்காக கருணா இப்படியான கதைகளைக் கூறி வருகிறார்.

நாங்கள் கிழக்குப் பகுதிக்கு விரைவாகச் செல்வதற்கு உரிய திட்டங்களைத தற்போது வகுத்துக் கொண்டிருக்கின்றோம்.

மட்டக்களப்பு - அம்பாறைப் பகுதிக்கு எந்தப் பகுதியால் சென்று அங்குள்ள போராளிகளையும் மக்களையும் சந்திக்கமுடியுமோ அந்தப் பகுதியால் செல்வதற்குரிய திட்டங்களை வகுத்துக்கொண்டிருக்கிறோம் - என்றார்.

இதற்கிடையில் வன்னி, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளுக்குச் சுற்றுலா வந்திருந்த மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரி மாணவர்களை சிறப்புத் தளபதி ரமேஷ் நேற்றுக் கிளிநொச்சியில் வைத்துச் சந்தித்தார்.

தமிழீழத் தேசியத், தலைவரின் தலைமையில் தாயகத்தின் அனைத்து தமிழ்மக்களும் ஒன்றுபட்டு உழைத்து உரிமைகளை வென்றெடுக்கவேண்டும என ரமேஷ் இந்தச் சந்திப்பில் தெரிவித்ததாகப் 'புலிகளின் குரல்' நேற்றிரவு தகவல் வெளியிட்டது. (எ-9-7)

# சுன்னாகம் கிழக்கு காளிகோயில் வீதியை புனரமைப்புச் செய்யுமாறு கோரிக்கை

வலி.தெற்கு,மார்ச்11

கடந்த 40 வருடங்களுக்கு மேலாக புனரமைப்புச் செய்யப்படாமல் உள்ள சுன்னாகம் கிழக்கு காளி கோவில் வீதியைப் புனரமைப்புச்செய்து போக்குவரத்துக்கு வசதிசெய்து தருமாறு சுன்னாகம் பிரதேச சபைச் செயலாளரிடம் சுன்னாகம் கிழக்கில் வாழும் பொதுமக்கள் கடிதம் மூலம் கோரியுள்ளனர்.

சுன்னாகம் மயிலணியில் இருந்து கொத்தியாலடிவரை செல்லும் இக்காளிகோவில் வீதிப்பகுதியில் மக்கள் நெருக்கமாக வாழ்கின்றார்கள். தினமும் நூற்றுக்கணக்கான மக்கள் இவ்வீதியூடாகப் போக்குவரத்துச்செய்து வருகின்றனர்.

சுன்னாகம் கிழக்கில் அமைந்துள்ள தமது விவசாய நிலங்களுக்கு விவசாயிகள் விவசாய உபகரணங்களையும் விவசாய உற்பத்திப் பொருள்களையும் சிதைவடைந்து காணப்படும் இவ்வீதியூடாகவே கொண்டு செல்கின்றார்கள்.

வீதி மிகவும் சிதைவடைந்து கற்கள் சிதறுண்ட நிலையில் காணப்படுகின்றது. இதன்காரணமாக இவ்வீதியால் பயணஞ்செய்யும் பாடசாலை மாணவர்கள், வயோதிபர்கள், துவிச்சக்கரவண்டிப் பிரயாணிகள் எனப் பலரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

எனவே, போக்குவரத்து அதிகரித்துக் காணப்படும் இவ்வீதியை உடனடியாகப் புனரமைப்புச் செய்து தருமாறு பொதுமக்கள் தமது கடித்தில் கோரியுள்ளனர்.

இக்கடிதத்தின் பிரதிகளை வலிகாமம் தெற்குப் பிரதேச செயலர், யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ம-8-152)

# பன்றித்தலைச்சி அம்மன் ஆலய பங்குனித்திங்கள் உற்சவம்

## 15ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறும்

தென்மராட்சி,மார்ச்11

மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலயப் பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம் எதிர்வரும் 15ஆம், 22ஆம், 29ஆம் மற்றும் ஏப்ரல் 05ஆம், 12ஆம் திகதிகளில் ஐந்து திங்கட்கிழமைகள் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உற்சவம் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் அண்மையில தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இவ்வருடமும் கடந்த வருடங்கள்போல பக்தர்களுக்குத் தேவையானவற்றை மேற்கொள்ள சாவகச்சேரி பிரதேச சபை, சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களம், வ.பி.போ.சபை, தென்மராட்சி தனியார் சிற்றூர்தி சேவைகள் சங்கம், சாவகச்சேரி பொலீஸார், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், தென்மராட்சி பிரதேச செயலகம் ஆகியன பூரண ஒத்துழைப்பு வழங்கவுள்ளன.

ஆலய பொங்கல் தேவைகளுக்கும் குடிதண்ணீர் தேவைகளுக்கும் நீர்த் தாங்கிகள் மூலம் வழங்க ஆலய நிர்வாகத்தினர் முன்வந்துள்ளனர்.

ஆலய சுகாதாரப் பணிகளை சாவகச்சேரி பிரதேச சபையினரும், சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினரும் இணைந்து மேற்கொள்வர்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையினர் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, சுன்னாகம் ஆகிய இடங்களிலும் தனியார் சிற்றூர்திச் சேவைகள் சங்கத்தினர் கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம் ஆகிய இடங்களிலும் பஸ்சேவைகளை நடத்தவுள்ளனர்.

வழமைபோல ஆலய வடக்கு வீதியில் கடைகள் அமைக்கப்படுமெனவும், உணவு விற்பனைசெய்யும் கடைகள் பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் அனுமதி பெற்ற பின்னரே நடத்த அனுமதிக்கப்படுவர் எனவும் -

தனிப்பட்ட காணிகளில் கடை அமைப்பவர்களும் சாவகச்சேரி பிரதேச சபையின் அனுமதி பெற வேண்டும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பொலீஸார் உற்சவ காலங்களில் காலை 8.30 மணி தொடக்கம் இரவு 7.00 மணிவரை பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுவர்.

பக்தர்களின் வசதிக்காக வீதிகளில் ஆலய நிர்வாகத்தினரால் பந்தல்கள் அமைக்கப்படுமெனக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

# கோட்டைவாயில் மயானத்தை பயன்படுத்த ஏற்பாடு செய்க!

## கரம்பொன் பகுதி மக்கள் கோரிக்கை

ஊர்காவற்றுறை,மார்ச்11

ஊர்காவற்றுறை ஒலுவில் பகுதியில் அமைந்துள்ள கோட்டை வாயில மயானத்தில் சடலங்களைத் தகனம் செய்வதற்கு ஏற்ற ஒழுங்குகளை செய்துதருமாறு கரம்பொன் காளிகோவலடி மக்கள் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் மற்றும் ஊர்காவற்றுறை பிரதேச சபையின் செயலாளர் கு.கணேசலிங்கம் ஆகியோரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மேற்படி பகுதி மக்கள் காலம் காலமாக கோட்டைவாயில் மயானத்திலேயே இறந்தவர்களின் சடலங்களைத் தகனஞ்செய்து வந்ததாகவும் -

தற்பொழுது அப்பகுதியில் வசித்துவரும் சிலர் இப்பகுதியில் சடலங்களை தகனஞ்செய்வதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருவதாகவும் அவர்கள் தமது முறைப்பாட்டில தெரிவித்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை மேற்படி கோட்டைவாயில் மயானத்தில் தகனஞ்செய்வதற்காகச் சடலம் ஒன்றை எடுத்துச் சென்றவர்களை அங்குநின்ற சிலர் தடுத்து நிறுத்தியதுடன் சடலத்தையும் எரிக்கவிடாது அவர்களை அடித்து விரட்டியதாக கூறப்படுகிறது. இதனால், இவர்கள் சடலத்தை ஒலுவில் பகுதியில் உள்ள தனிநபருடைய - கவனிப்பார் அற்ற வளவில் தகனஞ்செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் -

இதனைத் தொடர்ந்தே தாம் பரம்பரை பரம்பரையாக சடலங்களைத் தகனஞ்செய்துவந்த கோட்டைவாயில் மயானத்தில் எதிர்காலத்தில் சடலங்களைத் தகனஞ் செய்வதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்துதருமாறு அரச அதிகாரிகளிடம் வேண்டுகோள விடுத்ததாக கரம்பொன் பகுதி மக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (எ-16)

## நெடுந்தீவில் கண்காட்சி

நெடுந்தீவுப் பிரதேச செயலகத்தினால் வடக்கு-கிழக்கு கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன், நெடுந்தீவுப் பிரதேசத்தில் கடந்த ஆண்டில் நடத்தப்பட்ட தையல் மற்றும் மனைப்பொருள் டிப்ளோமா பயிற்சிநெறியில் கலந்துகொண்டு பயிற்சி பெற்ற மாணவிகளின் உற்பத்திப் பொருள்களின் கண்காட்சியும் விற்பனையும் நாளைமறுதினம் சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிறிறுக்கிழமையும் நெடுந்தீவு மகாவித்தியாலய மண்டபத்தில் உதவி அரசாங்க அதிபர் எஸ்பேரானந்தன் தலைமையில நடைபெறும். (எ-ரி)

## பாராட்டு விழா

'கலாபூசணம் விருதுபெற்ற இளவாலையைச் சேர்ந்த மூவரை பாராட்டிக் கௌரவிக்கும் விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இயற்றமிழ் வித்தகர் பண்டிதர் சி.அப்புத்துரை, இசைத்தமிழ் வித்தகர் சு.நமசிவாயகம், நாடகத் தமிழ் வித்தகர் சைவப்புலவர் சு.செல்லத்துரை ஆகியோரே இவ்வாறு பாராட்டுப் பெறவுள்ளனா. மு.சிவராசரத்தினம் தலைமையில் விழா நடைபெறும். இவ்விழாவில் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம், சங்கீத பூசணம் சு.கணபதிப்பிள்ளை, சி.சிவமகாராசா, பொன் கணேசமூர்த்தி, வே.அம்பிகைபாகன் திருமதி கோகிலா மகேந்திரன், பிரசங்கபூசணம் ந.சிவசண்முக மூர்த்தி ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவர். (எ-28)

## சமய சந்நிதிகளில்

சுழிபுரம்,மார்ச்11

சுழிபுரம் ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி ஆலய ஆயிரத்தெட்டு சங்காபிஷேகமும், திருக்கல்யாண நிகழ்வும் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாலை 7 மணிக்கு பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்தசர்மா "வள்ளி திருக்கல்யாணம்" என்னும் தலைப்பில் கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார். (எ-ரி-28)

★ ★ ★ ★

அல்வாய், சக்கோட்டை புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலய வருடாந்த திருவிழா, கடந்த 4ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. நாளை வெள்ளிக்கிழமை மாலை திருப்பலியைத் தொடர்ந்து நற்கருணைவழிபாடு இடம்பெறும். 13ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலி, திருச்சொருப பவனி, திருச்சொருப ஆசீர் என்பன இடம்பெறும். (எ-ரி)

### உரிமையாளர் மரண வீட்டிற்குச் சென்றவேளை

# கூரை பிரித்து இறங்கி கட்டுடையில் திருட்டு

வலி.தென்மேற்கு,மார்ச்11

வீட்டில் உள்ளோர் மரணச் சடங்கில் கலந்துகொள்வதற்காக வெளியேசென்ற நேரம் பார்த்து வீட்டின் ஓட்டைப் பிரித்து உள்ளிறங்கிய திருடர்கள் அங்கிருந்த பெண்கள் பயன்படுத்தும் சைக்கிள் உட்பட சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த வாரம் மானிப்பாய் மேற்கு, கட்டுடைக் கிராமத்தில் நடைபெற்றுள்து.

நள்ளிரவு வேளையில் நடைபெற்ற இந்தத் திருட்டுச் சம்பவத்தில், வீடியோ டெக், வானொலிப்பெட்டி, சைக்கிள், மணிக்கூடு ஆகிய பொருள்கள் உட்பட மறறும் பல பொருள்கள் திருட்டுப் போயுள்ளன.

வீட்டு உரிமையாளர் திருட்டுச் சம்பவம் பற்றி மானிப்பாய் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

பொலீஸார் இதுகுறித்து விசாரணைகளை தீவிரப்படுத்தியுள்ளனர் எனக்கூறப்பட்டது. (எ-135)

## இராணுவக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்காணிப்புக்குழு, தனது பணிகளை இடைநிறுத்தியுள்ளது.

கிழக்கில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை காரணமாகவே கண்காணிப்புக்குழு, இத்தகைய முடிவை எடுத்தது" - என மாவட்ட தலைமைக் கண்காணிப்பாளர் ஓசன்டகல் கூறினார் என்று பி.பி.ஸி. நேற்றிரவு தெரிவித்தது. (ஐ-எ-க-9-7)

## பிரபா.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீண்டும் வன்னியிலும் மட்டக்களப்பிலும் இருதரப்பினரையும் சந்தித்துப் பேசவுள்ளோம்.

புலிகளின் தேசியத் தலைவர் பிரபாகரனின் கூற்றுப்படி மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டம் தொடர்ந்தும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலே உள்ளது. புதிய தளபதிகள் விரைவில் மட்டக்களப்பு மாவட்டம் திரும்புகின்ற போது அழிவுகள், பழிவாங்கல்கள் என்பன இடம்பெறாமல் பார்த்துக்கொள்ளுமாறு தலைவர் பணித்துள்ளதாக தளபதிகள் என்னிடம் தெரிவித்தனர். -என்றார். (ஐ-க)

## கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பூசலில் நாங்கள் தலையிடமாட்டோம். அதில் தலையிடும் அதிகாரம் எமக்கு இல்லை. - என்றார் எரிக்சொல்ஹெய்ம்.

நோர்வே குழுவினர் யாழ்.செயலகத்தில் அரச அதிபர் செ.பத்மநாதன், யாழ். ஆயர் இல்லத்தில் ஆயர் அதிவண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஆகியோருடன் யாழ்.குடாநாட்டின் தேர்தல் நிலைமைகள் தொடர்பாகக் கலந்துரையாடினர்.

பலாலியில் படைத் தளபதிகளையும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.அலுவலக பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

யாழ்ப்பாணத்தில் ஈ.பி.டி.பி. உட்பட அரசியல் கட்சிப் பிரமுகர்களுடன் கலந்துரையாடலை முடித்துக் கொண்டு நேற்று மாலையே இக் குழுவினர் கிளிநொச்சி புறப்பட்டனர்.

இன்று கிளிநொச்சியில் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துத் தற்போதைய நிலைமைகள் தொடர்பாகக் கலந்துரையாடுவர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-5)

NEW SCIENCE COLLEGE
இணைந்த கணிதம்
A/L-2005
(I) நியூட்டனின் இயக்க விதிகள்.
(II) ஈருறுப்பு விரிவு
சனி, ஞாயிறு - 7.00 - 9.00
ஆரம்பம்: 13.03.2004
A/L-2006
(I) திரிகோணகணிதம்
(II) வேக - நேர வளையி
சனி, ஞாயிறு - 11.00 - 1.00
ஆரம்பம்: 13.03.2004
By: P. செந்தில் நாதன் B.Sc.
(29545)(36-12)

இலங்கை வங்கியின் ஆதரவுடன்
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் நடத்தும்
வடமாகாணப் பாடசாலை மாணவர்களின்
விஞ்ஞான அறிவியல், திறமைகள், கண்டுபிடிப்புக்கள் ஒன்று சேரும்
"மாபெரும் விஞ்ஞான கண்காட்சி"
இடம் : யாழ்.இந்து மகளிர் கல்லூரி
காலம் : 11, 12, 13, மார்ச் 2004
காலை 9.00 முதல் மாலை 4.00 வரை.
தகவல் தொழில்நுட்பப் பூங்காவினரின்
"வியக்கவைக்கும் கணனிக் கண்காட்சியையும்"
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக, அரச திணைக்கள,
அரச சார்பற்ற நிறுவன "காட்சிப் பொருள்களை"யும்
ஒரே இடத்தில் கண்டு பயன்பெற
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
-யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்.
(சி33989)(37-12-38)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.03.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.